# திருக்கோயில்

செப்டம்பர் 1988 விலை ரூ. 3







மேதகு பாரதப் பிரதமரின் துணைவியார் திருமதி சோனியாகாந்தி அவர்கள் மதுரை அருள்மிகுமீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்திற்கு வருகை தந்தபோது எடுக்கப்பட்ட படங்கள். ஆலய நிர்வாக அதிகாரியும் துணை ஆணையருமான திரு சு. பாலசுப்பிரம ணியம் பி.ஏ.பி.எல். உடன் உள்ளார்.

சுதந்திரத் திருநாளான 15-8-88 அன்று அருள்மிகு பார்த்தசாரதி ஆலயத்தில் நடைபெற்ற சிறப்பு வழிபாடு மற்றும் பொதுவிருந்து விழாவில் மாண்பமை உயர்நீதிமன்ற நீதிபதி திரு கே. எம். நடராஜன் அவர்கள் கலந்து கொண்டார். ஆணையர் திரு. தி. இராச. கல்யாணசுந்தரம் ஐ. ஏ. எஸ்.,இணை ஆணையாளர் திரு ந.ச. இராமச்சந்திரன் பி.ஏ.பி.எல். துணை ஆணையர் திரு கே. கே. இராஜா எம். ஏ., பி.எல், உதவி ஆணையர் திரு இரா. சுப்பிரமண்யன் பி.ஏ. பி.எல். ஆகியோர் உடன் உள்ளனர்.





முகப்பு

அருள்தரும்
நர்த்தன விநாயகர்

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை,
சென்னை-600 034.

தொலைபேசி எண்: 479407

ஆசிரியர்: கவிஞர் டாக்டர்
த. அமிர்தலிங்கம், M.A., Ph.D.

| மாலை : 30 | திருவள்ளுவர் ஆண்டு 2019 விபவ ஆண்டு புரட்டாசித் திங்கள் செப்டம்பர் 1988 விலை ரூ. 3-00 | மணி : 9 |
|---|---|---|

## திருக்கோயில் வாசகர்களுக்கு அறிவிப்பு

அன்பு வாசகர்களே! வணக்கம்.

திருக்கோயில் திங்கள் இதழின் உறுப்பினர்களாகச் சேர விருப்பம் உள்ளவர்கள்

**உயர்திரு ஆணையர் அவர்கள்**
**அறநிலைய ஆட்சித்துறை,**
**சென்னை-600 034.**

என்ற முகவரிக்கு மணியார்டர் அல்லது வங்கி வரைவோலை மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

### சந்தா விவரம்

| | | |
|---|---|---|
| அரை ஆண்டு | — ரூ. | 18-00 |
| ஓர் ஆண்டு | — ரூ. | 36-00 |
| ஆயுள் | — ரூ. | 300-00 |

சந்தாதாரர்கள் முழுமுகவரியைத் தெரிவிக்க வேண்டும். முகவரியில் மாற்றம் இருப்பின் உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

**எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.**

## பொருளடக்கம்

கந்தவேள் கருணை
—திருமுருக கிருபானந்தவாரியார்

நளமகா சரிதம்
—வித்யா தீர்த்ததாசன்

அருணகிரிநாதர் பாடிய ஞானமலை முருகன்
—தி. இராசமாணிக்கம்.

பலன்தரும் திருமுறைகள்
—நா. இராமமூர்த்தி

கந்தர் அலங்காரம்
—டாக்டர் த. அமிர்தலிங்கம்.

காவிரி கண்ட கணபதி
—அருட்செல்வி

வள்ளலாரும் சிவானந்தரும்
—புலவர் வ. ஞானப்பிரகாசம்.

முழுமுதற் கடவுள் பிள்ளையார்
—பேராசிரியர் த. அகரமுதல்வன்

பேப்பர்சாமிகள்
—தெ. சிவகுருபாண்டியன்.

கம்பரின் இராமாவதாரம்
—டாக்டர் த. அமிர்தலிங்கம்

வாசகர் எண்ணங்கள்



# கந்தவேள் கருணை

திருமுருக கிருபானந்த வாரியார்

## -[ 9 ]-

சிவபெருமான் உமையம்மையிடம் மேலும் கூறுவார்; ''பார்வதி தேவி! யான் ரூபமற்ற நிட்களன்; நீ அழிவிலாசக்தி. படைத்தல், காத்தல், அழித்தல், இம்மூன்றும் அடங்கும் மாயா லீலையான திரோபவம், இந்நான்கினின்றும் பக்தரை விடுவிக்கும் அநுக்கிரகம் அகிய ஐந்தொழிற்கு அதிபனாக, ஐந்து முகமுடைய சதாசிவனாகிய யாம் இருக்கிறோம். நீ பலவாறாக இருப்பினும் ஒரு முகமுடைய பரமேசுவரி. குமரன் உனது ஸ்வரூபத்தையும் எனது ஸ்வரூபத்தையும் ஒருங்கே கொண்டுள்ளான். ஆதலால், அவன் ஆறுமுகன் எனப்படுகின்றனன்; அவன் ஐந்தொழில்களையும் விளையாட்டாகவே புரிகின்றான்.

''பிரியமுள்ள கல்யாணி! இச்சகத்திடை வாழும் தேவர்; மனிதர், மிருகம் முதலிய உயிர்களிடத்து வீரியம், செல்வம் அழகு கல்வி என்பவற்றுள் எத்துணை யெத்துணை உள்ளனவோ, அவையனைத்தும் குமரனுடைய மகிமையே, முருகன் பெருமையை உனக்குச் சுருங்கச் சொன்னேன். விரித்துச் சொல்வதாயிருந்தால் நூறுகோடி வருஷங்களானாலும் முடிவு பெறாது''.

''யத்ர யத்ர ஜகத்யஸ்மின் தேவதிர்யங் நராதிஷு
வீர்யம் ஸ்ரீரதி காந்திர் யா வித்யா ஞானாதிகம் ப்ரியே
தத்ஸர்வபஸ்ய கல்யாணி விபூதிரிதி நிச்சிதம்!''

என்று கூறியருளினார். உமாதேவியார் தம் அருமைத் திருக்குமாரருடைய பெருமையைக் கேட்டுத் திருவுளம் மகிழ்ந்து பூரித்தார்.

முருகப்பெருமான் உலகெங்கும் சென்று அரிய திருவிளையாடல் புரிந்தார். மலைகள் அனைத்தையும் ஒரே இடத்தில் கொண்டுவந்து சேர்ப்பார்; பின்னர் அம்மலைகளைத். தலைகீழாகப் பூமியில் நிறுத்துவார். ஏழுகடல்களையும் ஒன்றாக்குவார். சக்ரவாளகிரியைப் .. பாதாளத்தில் புகுத்துவார். கங்கை நதியை ஓடவிடாமல் அடைப்பார். பாதாள லோகத்தில் உள்ள அஷ்ட நாகங்களையும் பிடித்து மேருமலை முதலிய பெரிய மலைகளில் பூட்டித் தேராக உருட்டிச் செல்வார். திசைகளில் உள்ள ஐராவதம் முதலிய எட்டு யானைகளையும் கொண்டு வந்து ஒன்றோடொன்று போர் புரியுமாறு செய்வார். கருடனையும் வாசுகியையும் பிடித்து ஒன்றோடொன்று போர் புரியுமாறு செய்வார். சூரியனைச் சந்திரமண்டலத்திலும், சுக்கிரனைச் சூரிய மண்டலத்திலும் சேர்ப்பார். மேகங்களுக்குள் இருந்த மின்னல்களையும் இடிகளையும் பறித்து மாலையாக்கித் தரித்துச் கொள்வார். ஆகாயத்தில் செல்லும் விற்கள்இரண்டையும் பிடித்து, கிரகங்கள் நட்சத்திரங்கள் இவற்றை உருண்டைகளாக்கி தேவர்களது தலை, மார்பு, கழுத்து, முகம் இவைகளைக் குறியாகக் கொண்டு எய்தி, வில் வன்மையைக் காட்டுவார். சுராசுரர்கட்கும், நரர்கட்கும் யாதொரு தீங்கும் நேராத வண்ணம் குமரக் கடவுள் இத்திருவிளையாடல்களைப் புரிந்தார்.

ஆறுமுகப் பெருமானின் திருவுருவத்தைக் காணாமல் திருவிளையாடல்களாகிய பெரும் செயலை மட்டும் உணர்ந்த தேவர் வியப்புற்று, மேரு மலையிலிருந்த தேவேந்திரனிடத்து இவ்வதிசயங்களைத் தெரிவித்தனர். ''நாம் எல்லாரும் சென்று பிரம்மதேவரிடம் கேட்போம்'' என்றான் இந்திரன். தேவர்கள் உண்மையான தவம் புரிந்தவர்களாதலால் அவர்கள் கண்களுக்குத் தெரியும் வண்ணம் ஆறுமுகமுடைய கடவுள் ஒரு திருமுக பாலகராக வந்து அங்கு தோன்றினார்.

தாம் முருகன் என்பதை உணர்த்தாமலே மேரு மலையை அசைத்து அதன் கொடுமுடிகளைத் தாமரை இதழ்களைக் கொய்வதுபோல் கொய்து வீசினார் எம்பிரான். இந்திரன் முதலிய இமையவர்கள், 'மண்ணுலகத்தையும் விண்ணுலகத்தையும் மாறுபடச் செய்தவன் இவனே. இவனது ஆற்றல் அசுரர்களின் ஆற்றலைக் காட்டிலும் கொடியது. இவனைப் பாலன் என்று கருதாமல் போர் செய்து வெல்வோம்' என்று தீர்மானித்தார்கள். யாருக்காகத் தவமிருந்து பிரார்த்தித்தனரோ அவரையே எதிர்க்க முற்பட்டனர். (இப்படித்தான் நாமும் ஆண்டவன் செயல் எது என்று அறியாமல் யார் யாரிடமோ பகை கொள்கிறோம். நமக்கு அவன் போதனையாக அளிக்கும் இன்னல்களைத் தீங்காக எண்ணி வருந்துகிறோம்.)

அக்கினிமலையைச் சூழும் கொசுக்களைப் போல் தேவர்கள் முருகப் பெருமானைச் சூழ்ந்து கொண்டனர். இந்திரன் போர்க்கோலம் பூண்டு தன் வெள்ளை யானைமீது ஏறி குலிசம், வாள், வில், வேல் என்னும் ஆயுதங்களைத் தாங்கிச்



சென்று முருகக் கடவுளோடு போர் செய்யத் தொடங்கினான். தேவர்களுக்காக அசுரருடன் போராடவே தோன்றிய ஐயனும் தேவருடனேயே போராட எண்ணம் கொண்டார். இந்திரன் ஏவிய ஆயுதங்கள் பூக்களைப்போல் முருகக் கடவுள் மீது விழுந்தன. அதனைக் கண்ட இந்திரன்வஜ்ரா ராயுதத்தை எய்து ஆரவாரித்தான். அது முருகப் பெருமான்மீது பட்டு மணல் போலப் பொடியா யிற்று. அவனது ஐராவதம் கர்ஜித்துக் கொண்டு முருகன் திருமுன் சென்றது. அதனைக் கண்ட கந்தப் பெருமான், சங்கல்ப மாத்திரத்தில் ஒரு வில்லையும் பல கணைகளையும் படைத்து, கர்ஜித்து வந்த யானை மீது ஒரு கணையை விடுத்தார். அது யானையின் நெற்றியில் புகுந்தது. யானை புலம்பி வீழ்ந்து மடிந்தது. ஐராவதம் வீழ்ந்து மடிந்ததைக் கண்ட இந்திரன் பெரிதும் வருந்திச் சினமே மிகுந்தான். அவன் கோபத்துடன் தனது வில்லை வளைக்க இந்திரனின் தோள்மீது முருகப்பெருமான் ஒரு கணையை விடுத்தார். அக்கணை பட்டதும் இந்திரன் தனது ஆற்றலை இழந்தானாயினும் ஒருவாறு வேலை எம்பெருமான் மீது விடுத்தான். அது சிறு புல்லைப் போல் சென்று அழிந்தது. இந்திரன் வீழ்ந்தான். வருணன் மீது முருகப்பெருமான் நான்கு அம்புகளை விடுத்தார்; வருணன் இறந்தான். இயமன் மீது ஐந்து அம்பு களை விடுத்தார்; இயமன் இறந்தான். சந்திரன் இறந்தான். வாயு, அக்கினியாவரையும் வதம்செய் தார். எஞ்சிய தேவர்கள் ,''இவன் ஒருவனே எல் லோரையும் கொன்றுவிடுவான்'' என்று மனம் கலங்கி ஓடி ஒளிந்தார்கள். ஆறுமுகப் பெருமான் போர்க்களத்தில் சர்வசங்கார காலாக்கினி ருத்திர ரைப்போலத் தனித்து நின்று உலவினார்.

இவற்றையெல்லாம் கண்ட நாரத முனிவர், கருணையின் மிகுதியினால் தேவ குருவாகிய வியாழ பகவானிடம் ஓடினார்; நிகழ்ந்தவற்றை யெல்லாம் கூறினார். அதுகேட்ட தேவகுரு போர்க் களத்துக்கு ஓடினார். அங்கே மாண்டு கிடந்த தேவர்களைக் கண்டு மனங்கலங்கினார். அற்புதத் திருவிளையாடல்கள் புரிந்து கொண்டிருந்த கந்த வேளையடைந்து, திருவடித்தாமரைமீது வீழ்ந்து வணங்கினார்.

''எம்பெருமானே! தாருகன், சிங்கமுகன், சூரன் ஆகிய அசுரர்களின் தொல்லையால் இந்திரன் பெரும் துன்பமுற்று, தனது பொன்னுலகத்தையும் விட்டு இம்மேரு மலையில் மறைந்து வசித்திருந் தான். தேவரீரது கருணையினால் அசுரர்களை யெல்லாம் அழிக்க அவன் எண்ணியிருந்தான். அதற்காகப் பல காலம் அருந்தவம் செய்து வாடி னான். துயரெல்லாம் நீங்கியதென்று சரவணப் பொய்கையில் தேவரீரது திரு அவதாரத்தைக் கண்டு உளம் பூரித்தான். தேவரீருக்குத் தொண்டு செய்யவே விரும்பிய இந்திரன் தாங்கள் திருவிளை யாடல் புரிந்ததை அறிந்திலன். திருமால் முதலி யோர் தேடிக்காணாத சிவபெருமானும், உமா தேவியாரும், அவர் திருவருள் பெற்றோர் சிலரு மன்றித்தேவரீரை யாரே அறியமுடியும்? சிற்றறிவு காரணமாக, தங்களையறியாது போர் செய்தான். மற்ற தேவர்களும் தங்களை எதிர்த்து மாண்டனர். தவறு செய்த குழந்தைகளைத் தாய் தந்தை யர் கண்டிப்பது நீதியாகுமோ? அருட்பெருங் கடலே! ஆற்றல் மிக்க அசுரர்களை அடியோடு ஒழித்தருளி, தங்கள் திருவடியை மறவாத தேவர்களுடைய பிழையைப் பொறுத்து அவர்கள் அறிவு பெற்று எழுமாறு திருவருள் செய்ய வேண்டும்'' என்று தேவகுரு இறைஞ்சினார்.

முருகப் பெருமான் திருமுறுவல் செய்து, இந்திரன் முதலிய தேவர்கள் வாகனங்களோடும், ஆயுதங்களோடும் எழும் வண்ணம் திருவுளம் கொண்டருளினார். உடனே தேவர்கள் யாவரும் உயிர் பெற்றெழுந்து மெய்யறிவு பெற்றனர். பாலகரை முருகன் என அறிந்து மனமுருகினர்; செய்த பிழைக்கு மனம் கலங்கி எம்பிரானுடைய சரணகமலங்களில் வீழ்ந்து பணிந்து

''கந்தநம; ஐந்துமுகர் தந்தமுரு கேசநம;
கங்கை உமைநன்
மைந்தநம; பன்னிரு புயத்தநம; நீபமலர்
மாலை புனையும்
தந்தைநம; ஆறுமுக ஆதிநம; சோதிநம;
தற்ப ரமதாம்
எந்தைநம; என்றும் இளையோய் நம; குமார
நம என்று தொழுதார்''

கந்தக்கடவுளே போற்றி, ஐம்முகமுடைய அரனார் தந்த முருகேச போற்றி, கங்கைக்கும் மலைமங்கைக்கும் பாலனே போற்றி; பன்னிரு புயங்களை யுடையவனே போற்றி; கடப்ப மலர் மாலை புனைந்த தலைவனே போற்றி, ஆறுமுக முதல்வனே போற்றி, சோதியே போற்றி; தனிப் பரம்பொருளாகிய எமது பிதாவே போற்றி; என்றும் இளையவரேபோற்றி, குருமூர்த்தியே போற்றி என்று தொழுதார்கள்.

தொழுது நின்ற தேவர்களுக்குக் கந்தவேள் திருவருள் செய்து அச்சமும் துன்பமும் நீக்கினார். தேவர்களும், ''முன்பு தக்கன் வேள்வி செய்தபோது சிவபெருமானை இகழ்ந்தான். அந்த வேள்வியில் தரப்பட்ட பாகத்தை அடியேங்கள் உண்டோம். அதனால் ஏற்பட்ட பாதகம் இன்னும் தொடருகிறது. அத்துடன் தேவரீருடன் போர் செய்ய முற்பட்ட பாதகமும் சேர்ந்தது. பரம பிதாவே! பரம கருணையால் அடியேங்களைத் தண்டித்து அப்பாவங்களைப் போக்கியருளினீர். தங்களுக்கு நாங்கள் என்றும் அடிமைகள். இவ்வாறு கூறுவதும் தவறு! ஏனெனில் சிறுவர்கள் தங்களைத் தங்கள் தாய் தந்தையருக்குத் தருவது என்பதும் தகுதியான செயலல்லவே'' என்றனர்.

''நம்மைச் சிறுவன் என்று நினைத்து நீங்கள் போர் புரிந்தீர்கள். நமது வன்மையையும் பெருமையும் இன்னும் நீங்கள் உணரும் வண்ணம் காட்டுவோம்'' என்று கூறினார். சுவாமி எதற்காக இவ்வாறு மீண்டும் மீண்டும் செய்தார்? பலகோடி அசுரர்களையும் தம்மால் மாய்க்கமுடியும் என்ற நம்பிக்கையும், ஆறுதலையும் தேவர்க்கு ஊட்டவே இவ்விதம் செய்தருளினார்.

இந்நேரம் புரிந்ததற்கும் மேலாகப் பேரற்புதம் புரிய எண்ணி அற்புதக்கோலம்கொண்டார் ஐயன். விசுவமுழுவதும் தம் வடிவான வடிவேலன் எட்டுத் திக்குகளும், பதினாறு உலகங்களும், எட்டு மலைகளும், ஏழு கடல்களும் புறக்கடலும சக்ரவாளகிரியும், வெவ்வேறண்ட நிறைகளும், பிரம-விஷ்ணு-உருத்திரர்களும் அடங்கிய விசுவரூபமெடுத்தார்.

எண்டிசையும் ஈரேழு திறத்துலகும் எண்
கிரியும் ஏழுகடலுந்
தெண்டிரையும் நேமிவரை யும்பிறவும் வேறு
திரி பாகி யுளசீர்
அண்ட நிரையானவும் அனைத்துயிரும் எப்
பொருளுமாகி அயனும்
விண்டுமர னுஞ்செறிய ஒருருவு கொண்டனன்
விறற் குமரனே

முருகப்பெருமான் விசுவரூபம் எடுத்துத் [illegible] தந்தருளியபோது ஏழு பாதாள [illegible] திருவடியில் இருந்தன. [illegible] கணைக்காலில் காணப்பட் [illegible] காணப் [illegible] புயங்களில் தெரிந்தன. ஆகா [illegible] சுவர்க் [illegible] சூரியன் அக்கினி

## பன்னிரு திருமுறை பாடிய

# 27 ஆசிரியர்கள்

1. திருஞானசம்பந்தர்.
2. திருநாவுக்கரசர்.
3. சுந்தரர்.
4. மாணிக்கவாசகர்.
5. திருமாளிகைத்தேவர்.
6. சேந்தனார்.
7. கருவூர்த்தேவர்.
8. பூந்துருத்திநம்பி காடநம்பி.
9. கண்டராதித்தர்.
10. வேணாட்டடிகள்.
11. திருவாலியமுதனார்
12. புருடோத்தமநம்பி.
13. சேதிராயர்.
14. திருமூலர்.
15. திருவாலவாயுடையார்.
16. காரைக்கால்அம்மையார்.
17. ஐயடிகள் காடவர்கோன்
18. சேரமான் பெருமாள்நாயனார்.
19. நக்கீரதேவர்.
20. கல்லாடதேவர்.
21. கபிலதேவர்.
22. பரணதேவர்.
23. இளம்பெருமான் அடிகள்.
24. அதிரா அடிகள்.
25. பட்டினத்தடிகள்.
26. நம்பியாண்டார்நம்பி
27. தெய்வச் சேக்கிழார்

என்பன அழகிய மூன்று கண்களிலும் பொருந்தின. மேகங்கள் கேசங்களிலும்நட்சத்திரங்கள் அக்கேசங்களிலிருந்த அலங்கார மலர்களிலும் விளங்கின. சிவ பரம்பொருள் ஆன்மாவிலும், சிவசக்தியாகிய கௌரி மதியிலும், விஷ்ணு இடப் பாரிசத்திலும், பிரம்மதேவர் வலப் பாரிசத்திலும் காணப்பட்டனர். சரஸ்வதி வேத மணம் கமழும் வாக்கினும் இலட்சுமி திருநிலையிலும் காணப்பட்டனர். பிராணன் முதலிய பத்து வாயுக்கள் வாயு நிலைகளிலும், காலாக்கினி ருத்திரன் சிற்றநிலையிலும், அக்கினி தேவன் சாடராக்கினியிலும், அளவற்ற மாநாகங்கள் நூபுரம் முதலிய காலணிகளிலும், ஔஷதியனைத்தும் உரோமங்களிலும்பொலிந்தன. அந்த உரோமங்களில் நுண்ணிய கிருமிகளைப் போல் அண்ட கோடிகளெல்லாம் காணப்பட்டனவாம்.

பேரொளி வாய்ந்த பேருருவத்தைத் தரிசித்த தேவர்களது விழிகள் பார்வையற்று போய்விட்டன. சுரர்களாகிய பிரம்ம, விஷ்ணுக்கள் முதலிய தேவ சிரேஷ்டர்கள் கந்தக்கடவுளது அளவிலாத தேஜோ மண்டலத்தில் ஆயிரத்தில் ஓர் அம்சஅளவையே அவன் அருளால் அறிய முடிந்தது.

—(தொடரும்)



# நளமகா சரிதம்

**கம்பன் கவிநயமணி வே. தியாகராஜன்**

பெண் தனது பிறந்த குடும்பத்திற்கும் புகுந்த குடும்பத்திற்கும் பெருமை கொண்டு வரவேண்டிய வள். எனவே தமயந்தி பிறந்த வீட்டிலிருந்தபடி நிம்மதியின்றித் தன் கணவனை எப்படித்திரும்ப அடைவது என்ற எண்ணத்திலேயே நாட்களைக் கடத்தினாள்.

நல்லவர்களான தலைவன் தலைவியற்குத் துன்பம் வந்தால் கூட ஒரே மாதிரி வரும்போலும்! தமயந்தி ஒரு பாம்பின் வாயிலகப்பட்டு உயிர் பிழைத்தாள். நளன் காடுவழி வரும்போது அவ னெதிரிலும் ஒரு பாம்பு வந்தது. ஆனால் கார்க் கோடகன் என்ற இந்தப்பாம்பு தீயில் அகப்பட்டுத் தவித்துக் கொண்டிருந்தது. நளனைக் கண்டு தீ தனது வெப்பத்தைக் குறைத்தது. கார்க்கோடகன் என்ற பாம்பின் துயரைக் கண்டு இரங்கிய நளன் அதனைத் தீயினின்று எடுக்க, அப்பாம்பு நள னையே கடித்தது. ''ஏ ,பாம்பே! தீயினின்று உன்னைக்காத்த என்னை நீ கடித்தது நியாயமா?'' எனக்கேட்டான் நளன். பாம்பு கடித்ததும் நளனது உருவம் அழகு குன்றியது. அருவறுக்கத்தக்கதாக காட்சியளித்தது. ''மகராசனே! என் பெயர் கார்க் கோடன். நீ உலகை எல்லாம் ஆண்ட பேரரசன். உன் செல்வங்களை இழந்து இன்று நீயிருக்கும் நிலை கண்டு உன் பழைய பகைவர் உனக்கு ஏதா வது உயிருக்கு ஊறு செய்து விடுவாரோ என எண்ணி, உன் உருவத்தை மாறச் செய்தேன். நற்பதவியிலிருந்த நீ வறுமையில் வாடும்போது உன் பழைய உருவில் நீ இருந்தால் பிறரைக் கண்டு கூசி நாணமடைவாய். வேறு உருவிலிருந்து கொண்டு என்ன செய்தாலும் பிறர் உன்னை அறிய முடியாதல்லவா? எனவே உனக்கு நான் நன்மையே செய்தேன்'' என்றது கார்க்கோடன் என்ற அந்தப் பாம்பு.

> காயும் கடகளிற்றாய்! கார்க்கோடகன் என் பேர்
> நீ இங்கு வந்தது யான் நினைந்து-காயத்தை
> மாறாக்கிக்கொண்டு மறைந்து உறைதல் காரணமா
> வேறாக்கிற்று என்றான் விரைந்து.

தமயந்திக்குத் துன்பம் செய்தது ஒரு பாம்பு. நளனுக்கு நன்மை செய்தது ஒரு பாம்பு. கார்க் கோடகன் என்ற பாம்பு நளனுக்கு இரண்டு ஆடை களை அளித்து ''நீ பழைய உருவம் வேண்டும் நாளில் இதில் ஒன்றை அணிந்து ஒன்றைப்போர்த் துக் கொண்டால் பழைய உரு வந்துவிடும்'' எனக் கூறியது. கார்க்கோடகன் உரு மாறிய நளனிடம் வாகுகன் என்று பெயரையும் மாற்றிக் கொண்டு சிறிது காலம் ருதுபர்ணன் என்ற அரசனிடம் தேர்ப்பாகனாகவும் சமையற்காரனாகவும் இருக்கு மாறு கூறியது.

நளன் காட்டைவிட்டு ருதுபர்ணனது நாட்டை நோக்கிச் சென்றான். வழியில் கடற்கரையில் மனிதர் நடமாட்டமிருந்ததால் ஓடி ஒளியும் நண் டைக்கண்டு, ''கொண்ட மனைவியை நள்ளிரவில் நடுக்காட்டில் தனியே விட்டுச் சென்ற பாதகனான என்னைக் காணப்பிடிக்காது ஓடுகிறாயோ?'' எனப் புலம்பினான்.

> காதலியைக் கானகத்தில் காரிருள் கைவிட்ட
> பாதகனைப் பார்க்கப்படாது என்றோ?-நாதம்
> அளிக்கின்ற ஆழிவாய் அலவ! ஓடி
> ஒளிக்கின்றது என்னோ உரை.

அயோத்திக்கு அரசனான ருதுபர்ணனிடம் தனக்கு சமையற் தொழிலும் தேரோட்டவும் தெரியும் எனக்கூறி அங்கு வேலைக்கு அமர்ந்து வசிக்கலானான் நளன்.

தமயந்தி நளனைத் தேட ஒரு அந்தணனை அனுப்பினாள். தன்னைக் காட்டில் தனியாக விட் டுச் சென்றது தனக்கும் நளனுக்கும் மாத்திரமே தெரியுமாதலால் ''கொண்ட மனைவியை நடுக் காட்டில் தூங்கும்பொழுது கைவிட்டுச் செல் வது பாவத்திற்கு அஞ்சாத காரியம் அன்றோ?'' எனக் கேட்டால் நளன் ஆத்திரம் கொண்டு பதில் கூறுவான். ஏதாவது அவ்வாறு பதில் கூறுபவரைத் தேடி வாருங்கள்'' எனக்கூறி அந்தணனை அனுப்பினாள். அந்த அந்தணன் பல இடங்களிலும் தேடி அயோத்தியில் ருதுபர்ண னிடம் வேலையாயுள்ள வாகுகன் காதில் விழுமாறு ''மனைவியை நடுக்காட்டில் கைவிட்டது நேர் மையா?'' என்ன வாகுகன், ''விதி அவ்வாறு செய்ததே தவிர, நளன் அவ்வாறு செய்தான் என எண்ணவேண்டாம்'' எனப் பதிலுரைத்தான். அந்தணன் குண்டினபுரம் திரும்பி தமயந்தியிடம் ''அயோத்தியில் பேசிய ஒருவன் நளன் போன்றி ருந்தது. ஆனால் அவன் நளன் இல்லை. அவன் உருவம் மிகவும் கோரமாக இருந்தது'' என்றான்.

தமயந்திதான் மீண்டும் திருமணம் செய்து கொள்ளுவதற்காகச் சுயவரம் நடக்கப்போகிறது என ருதுபர்ணனனுக்குக் கூறினால் அவன் இங்கு வருவான். தேரைச் செலுத்திக் கொண்டு என் அரசரும் வரலாம் என்றாள். அந்தணன் மீண்டும் அயோத்தி திரும்பி ருதுபர்ணனிடம் தமயந்தி மீண்டும் திருமணம் செய்துகொள்ளச் சுயம்வரம் ஏற்பாடாகி உள்ளதாகக் கூறினான்.

இது கேட்ட நளன் தன்னைக் கண்டுபிடிப்ப தற்காக தமயந்தி செய்துள்ள சூழ்ச்சி இது என அறிந்தான்.

> கேட்டவாகுகன் கிளி என மிழற்று தங்கிளவி
> காட்டுள் நீத்தது நினைத்தனளாயினும் கற்பு
> நாட்டுகின்றவள் இத்திறம் புரியுமோ?நம்மை
> கூட்டுதற்கஃது இழைத்தனளாமெனக் குறித்
> தான்

என்பது நைடதம்.

''கற்பிற் சிறந்தவளான தமயந்தி கொண்ட வனைத் தவிர வேறு எவரையும் எண்ணாதவள். அவளைப்பற்றி இவ்வாறு பேசலாமா?'' எனக் கேட்டான் என்கிறது நளவெண்பா, (இரண்டா வது சுயம்வரம் ''சிவபெருமானது வரத்தால் தமயந்தி கன்னித்தன்மையடைந்து விட்டாள்'' என்ற காரணத்தால் ஏற்பாடு செய்யப்பட்டது என இருதுபன்னனிடம் கூறுமாறு செய்தனர் என் கிறது நைடதம். ''நாட்டமொருமூன்றுடைய நாய கன் வரத்தினால் நங்கை மீண்டும் கன்னிகையாகி னாள்'' எனக்குறிக்கப்பெறுகிறது. இந்திரனால் சீர் குலைக்கப்பட்ட அகலிகை இராமபிரானின் திருவடி பட்டதும் பழைய மாதிரியான தூய உடல் பெற் றாள். ''அஞ்சன வண்ணத்தாள் தன் அடித்துகள் கதுவா முன்னம் வஞ்சிபோல் இடையாள் முன்னை வண்ணத்தளாகி நின்றாள்'' என்ற கம்பனின் கருத்தை அடியொற்றிக் காணப்படுகிறது இச் செய்தி)

உண்மையறியாத ருதுபன்னன் ''தமயந்தி என்னைக் கணவனாகக் கொள்ள எண்ணி என் மீது விட்டெறிந்த மாலை என் பக்கத்திலிருந்த நளன் மீது தற்செயலாக விழுந்தது. ஒரு வேளை என்னை மணப்பதற்காகவே இரண்டாவது சுயம் வரம் ஏற்படுத்தி உள்ளனர் போலும் ''என்று நினைக்கிறான்.

நளன் வேகமாகத் தேரைச் செலுத்த ருது பன்னன் அதன் மீது ஏறிச் செல்லுகிறான். தமயந் தியின் மீது மோகம் கொண்ட ருதுபர்ணனின் மனம் மிக வேகமாகச் சென்று குண்டினபுரத்தை யடைந்து விட்டது. குதிரையின் மனோபாவமறிந்த வரை அசுவஇருதய வித்தை தெரிந்தவர் என்பர். அவ்வித்தையில் வல்லவனான நளன், தமயந்திக்கு இரண்டாவது சுயம்வரம் என்பது எப்படி நடை பெறும் எனக்காண ஆவல் கொண்டநிலையில் தேரை வேகமாகச் செலுத்தினான். ''என் மேலாடை காற்றில் பறந்து விழுந்து விட்டது எடு'' என்றான் ருதுபன்னன். அதற்குள் பத்துக் காதங்கள் தேர் ஓடி விட்டதாம்.

சீதையின் கலியாணத்திற்கு மிதிலை மக்கள் புறப்படுகின்றார்கள். தேரில் சென்ற ஒருவன் ''என் குண்டலம் விழுந்துவிட்டது'' என்ற போது ''வெகு தூரம் வந்து விட்டோம. இனி திரும்பச் சென்று எடுக்கமுடியாது''எனச்சாரதியிட மிருந்து பதில் வந்ததாம். இத்துணை வேகமாகப் பழைய காலத்தில் சாரதிகள் வண்டிகளைச் செலுத் தியும் ஒரு விபத்துக்கூட நேரவில்லை என்பது ஒரு வியப்பான செய்தியல்லவா.

வெகு வேகமாகத்தேர் செலுத்தும் தன்மை யளிக்கும் அஸ்வஇருதய வித்தையைத் தெரிந்து கொள்ள விரும்பினான் ருதுபன்னன். ருதுபன்ன னுக்கு அட்சஉற்ருதயம் என்ற வித்தை தெரியும். ''இந்த மரத்தில் பதினாயிரம் கோடிக்காய்கள் உள்ளன'' என ஒரு மரத்தைக்ச்சுட்டிக்காட்டி ருது பன்னன் கூற, நளன் அவற்றை எண்ணி அவன் கூறியது சரியாயிருக்க வியப்படைந்தான்.

ருதுபன்னன் ''இந்த அட்சஉற்ருதயம் என்ற வித்தையை உனக்கு நான் கற்றுத் தருகிறேன். எனக்கு நீ அஸ்வஉற்ருதய வித்தையைக் கற்றுத் தருக'' என வேண்ட நளன் இணங்கி இருவரும் வித்தைகளை ஒருவருக்கொருவர் கற்பித்துக் கொண்டனர்.

அட்ச இருதயம் எவற்றையும் பார்த்த மாத் திரத்தில் எண்ணிக்கை இடுதலையும் சூதில் வெற்றி பெறும் திறனையும் தரத்தக்கதாதலின் இதனை நளன் அறிந்து கொண்ட மாத்திரத்தில் கலி(சனி) அவனைவிட்டு நீங்கினான். சந்திரன்சுவர்க்கி என்ற பிரபுவை அடைந்தவர்களின் பசி நீங்கிய மாதிரி நளனைச் சனியன் நீங்கினான்.''என்றார் கவிஞர்.

> வண்டார் வளவயல்சூழ் மள்ளுவநாட்டு எங்
> கோமான்
> தண்டார் புனைச் சந்திரன் சுவர்க்கி-சொண்
> டாடும்
> பாவலன் பால் நின்ற பசிபோல் நீங்கிற்றே
> காவலன்பால் நின்றகலி.

இராமாயணத்தில் இலக்குவன் முதலானவர் நாகபாசத்தினால் கட்டுண்டு வீழ்ந்தபோது கரு டன் அவ்விடத்தில் தோன்ற பாம்புகள் கட்ட விழ்த்துக் கொண்டு ஓடிய அழகைக் கம்பர் கூறும்போது ''பெரும் பாம்புகள் கருடனைக் கண்டு பயந்து இளைத்து ஓடின. கைம்மாறு கரு தாது அள்ளிவழங்கும் சடையப்பனது திருவெண் ணெய் நல்லூரை அணுகும் வடமொழி, தென் மொழிப்புலவர்களைப் பிணித்த பசி நோயகன்ற மாதிரி நாகபாசம் அகன்றது எனக் கம்பன் கூறி யதை அப்படியே புகழேந்தி தன்னை ஆதரித்த வள்ளலான சந்திரன் சுவர்க்கி மீது ஏற்றிப்பாடி யுள்ளார் என்பது குறிப்பு.

ருதுபர்ணனும் வாகுகன் வேடத்திலிருந்த நளனும் குண்டினபுரம் சேர்ந்தனர். அங்கு சுயம் வரம் போன்ற விழாவிற்கான ஏற்பாடுகளைக் காணோம். நளனைக் கண்டு பிடிப்பதற்காகக் கிளப்பிவிடப்பட்ட செய்திதானே சுயம்வரம் என்ற பேச்சு! வீமன் ருதுபன்னனை எதிர்கொண் டழைத்து ''தாங்கள் எங்கு இவ்வளவு தூரம் வந் தது?'' எனக் கேட்க ருதுபன்னன் ''தங்களைக் காணவேண்டுமெனத் தோன்றியது, வந்தேன்'' என்றான். வீமனால் உபசரிக்கப்பட்ட ருதுபன்னன் அவனுடன் தங்கினான்.

தேர்க்குதிரைகளை அவிழ்த்துவிட்ட நளன் வீமன் அரண்மனையில் உள்ள மடைப்பள்ளியிற் சேர்ந்து வேலை செய்யலானான்!

நளன் சமையலறையில் வேலை செய்யும் போது அவனையறிவதற்காகத் தமயந்தி தன் தோழியொருத்தியை அழைத்து அரிசியைக் கொடுத்துத் தீயில்லாமல் சமைக்கின்றானா எனக்





சோதிக்குமாறு அனுப்பினாள். அரிசியிருந்த பொற்பாத்திரத்தை நளன் தீண்டிய அளவில் அது சோறாயிற்று.

ஈந்தவால் அரி செய்த பொற்குழிசி தீயின்றி
ஆய்ந்த கேள்வியான் தொடுதலும் அடிசிலாய் அமைய
வேய்ந்த பூங்குழல் கண்டு போய் வெம்முலை பொறையால்
சாய்ந்த நுண்ணிடைத் தமயந்தி தன்னொடு மொழிந்தாள்.

தோழி தமயந்தியிடம் போய் இச்செய்தி கூற, தமயந்தி தன் மக்களை நளனிருந்த மடைப்பள்ளிக்கு அனுப்பினாள். நளன் தன் மக்களை நெடு நாட்களாக்குப்பின் பிரிந்து கூடிய காரணமாக உணர்ச்சி வசப்பட்டு மனம் நடுங்கி, கண்ணீர் விட்டு பெருமூச்சுவிட்டுக்கொண்டு "குழந்தைகளே! நீங்கள் யார் மக்கள்? என் மக்கள் போன்றிருக்கிறீர்கள்" என அணைத்துக் கொண்டான். "நாங்கள் நிடத மன்னனின் மக்கள். எங்கள் அன்னையை எம்தந்தை நடுக்காட்டில் விட்டுச் சென்றார். இங்கு வாழ்கின்றோம். எங்கள் நாட்டை வேறு எவனோ ஆளுகின்றான்" என வருந்திக்கூறினர். அந்த வார்த்தைகளைக் கேட்ட வாகுகன், குழந்தைகளின் மன நிலையை அறியும்பொருட்டு "உங்கள் அரசை வேறொருவன் ஆள நீர் இங்கு வசிப்பது இழிவல்லவா?" என்று கேட்டான்.

ஆண்குழந்தை "மனத்தினால்கூட நினைக்கக்கூடாத ஒரு செய்தியை வாய் திறந்தா எங்களிடம் கூறுகிறாய்? வெறும் மடையனான (அறிவிலி-மடைத்தொழில் செய்பவன் என இருபொருள் வரக்கூறினார்) உன்னைத் தவிர வேறு எவராவது இவ்வாறு கூறுவாரோ? சிறு தொழில் செய்பவன் என்பதால் உன்னை மன்னித்தோம். தோற்ற ஒன்றை மீண்டும் எமக்கு வேண்டும் என்றநேர்மையற்ற எண்ணம் நேர்மையே குறிக்கோளான எம் தந்தைக்கு வராது. அவர் மக்களான நாங்களும் அத்தகைய அரசை விரும்ப மாட்டோம். எல்லா அரசர்களாலும் வணங்கப்பெற்ற எம் தந்தையான நளச் சக்ரவர்த்தி சத்தியத்தைக் காக்கவே அரசைத் துறந்தனர்" என்றுகூற, நளன் "குழந்தைகளே! மன்னர் பெருமையை எம்போன்ற மடையர் அறியமாட்டார்" எனக்குழந்தைகளுக்கு ஆறுதல் கூறினான்.

மக்கள் மூலம் வாகுகன் கூறியவற்றையறிந்த தமயந்தி நளனே வாகுகன் வேடத்தில் வந்துள்ளான் என நன்கு அறிந்து கொண்டு தன் தாய் தந்தையரிடம் தெரிவித்தாள். வீமராசன் வாகுகனிடம் வந்து அவனது உருவம் கண்டு நளனல்ல என எண்ணியபோதும் அவனது பேச்சு முதலானவற்றைக்கண்டு அவன் நளனாயிருக்க வேண்டும் என எண்ணி, "உம்முடைய உண்மையான உருவத்தைக் காட்டவேண்டும்" என, வாகுகன் உருவிலிருந்த நளன், கார்க்கோடகன் எனும் பாம்பு கொடுத்த ஆடைகளில் ஒன்றை உடுத்திக்கொண்டு மற்றொன்றைப்போர்த்திக் கொள்ள வாகுகன் என்ற சமையற்காரன் உருவம் நீங்கி நளன் தன் உருவோடு தோன்றினான். நளனைச் சனி பிடித்த போது நாராயணாய நம என்று அவனடியைச்

சேராரைவெந்துயரம் சேர்ந்தாற்போல் எனக்கூறிய கவிஞன், நளனது கவலை நீங்கி அவன் தன்னுருக் கொண்டு நின்றதை ''மிக்கோன் உலகளந்த மெய் யடியே சார்வாகப் புக்கோர் அருவினைபோல் போயிற்றே'' எனத் திருமாலின் திருவடியை வணங்கிச் சரண்புகுந்தவர் பாவம் நீங்கியது போல் பொய்யுரு நீங்கியது எனக்கூறுவதன் மூலம் கவிஞர் தன் தெய்வ பக்தியை எடுத்துக் காட்டு கிறார்.

கணவனைப் பிரிந்த நாள்முதல், அரண்மனை யில் வசித்தாலும், பாதித்துகிலுடன் எந்தவிதமான ஆடம்பரமும் இன்பமும் இல்லாது வாழ்ந்த தம யந்தி கணவனின் காலடியில் விழுந்து வணங்கினாள். தேவர்கள் மலர் மாரி பொழிந்தனர். கலிநளனைப் புகழ்ந்து ''என்னவரம் வேண்டும்'' எனக்கேட்க, ''என் சரிதம் கேட்பவரை நீ துன்பம் செய்யக் கூடாது'' என நளன் வரம் கேட்க ''என்னுடைய காலமான கலியில் உன் சரிதம் கேட்டவரை நான் அடைய மாட்டேன்'' எனக்கூறிச் சென்றான்.

நல்லோர்கள் என்றும் உலகத்தவரின் நன்மை யையே கருதுவர் என்பது நளன் வரம் கேட்டதன் மூலம் அறிகிறோம்.

நளனிடம் ருதுபர்ணன் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு தன் நாடுதிரும்பினான். நளனும் தன் மனைவி மக்களுடன் தன் நாடாகிய நிடத தேசம் திரும்பினான். புஷ்கரனை மீண்டும் சூதாட அழைக்க அவனும் இசைந்தான். வஞ்சனையால் புஷ்கரன் சூதில்பெற்ற அரசு முதலானவற்றை நளன் அவ்னுடன் நேர்மையான முறையில் சூதாடி மீட்டுக் கொண்டான். மாவிந்த நகரம் புகுந்த நளன் தமயந்தி மற்றும் அவர்களது குழந்தைகளை நாட்டுமக்கள், மேகத்தைக் கண்ட மயில்கள் போல, கண்பெற்ற முகம்போல், நீர் நிரம்பிய வயல்போல் செழிப்பும் களிப்பும் கொண்டு எதிர்கொண்டழைத் தனர்.

> கார்பெற்ற தோகையோ? கண்பெற்ற வாண் முகமோ?
> நீர்பெற்றுயர்ந்தநிறைபுலமோ-பார்பெற்ற
> மாதொடுமன்னன் வரக்கண்ட மாநகருக்கு
> ஏதோ உரைப்பேன் எதிர்

இத்தகைய மகிழ்ச்சியை நளன் சரிதையைக் கேட் பவர் படிப்பவர் அடைவர் என்பது நம் பெரியோர் களின் துணிபு. மிக்க மகிழ்ச்சியுள்ள ஏதாவது சம்பவம் நடந்தால் மக்கள் இந்தச் செய்யுளைக் கூறுவது வழக்கம்.

கலியுகக் கம்பர் எனப்பெயர் பெற்ற திரிசிர புரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார் அவர்களின் சீடரான வித்வான் தியாகராஜர் அவர்கள் கும்பகோணம் கல்லூரியில் தமிழ்ப்பேரா சிரியராக விளங்கினார். திரு மீனாட்சிசுந்தரனா ரின் சீடர் தமிழ்த்தாத்தா என அழைக்கப்பட்ட திரு உ.வே.சாமிநாதனார் அவர்கள்என்பது யாவரும் அறிந்ததே.

ஒரு சமயம் தியாகராஜர் தமது ஆசிரியரான மீனாட்சிசுந்தரனாரை கல்லூரிக்கு அழைத்துச் சென்று தமது மாணவர்கள் எதிரில் அவரை விழுந்து வணங்கி அவருக்குத் தமது மாணவர்களை யும் அறிமுகப்படுத்தினார்.

## திருமண்காப்பு

திருமண்காப்பு என்னும் சொல், திருமண் இடுதல் ஒரு இரட்சையாக அமைவதைக் குறிக்கும்.

எவருடைய நெற்றியில் திருமாலினுடைய தெய்வீகச் சின்னம் எந்த நேரத்திலும் இருக்கின் றதோ, எவர் வீட்டு முன் வாயிலில் இச்சின்னம் பொறிக்கப்பட்டு இருக்கின்றதோ, அம்மனிதனுக் கும், அந்த வீட்டிற்கும் திருமாலினுடைய அருள் பரிபூரணமாக இருக்கும்.

நெற்றியில் இடும் திருமண் திருமாலின் பரந்த பக்தியையும், இடையிலே அணியும் ஸ்ரீசூர ணம் திருமகளின் பரந்த பக்தியையும் குறிக்கும்.

பலபிறவிகளில் செய்த புண்ணிய பயனாய் பெற்ற இந்த மனித உடல் அழியும் ஆதலால் அழியா இன்பத்தை அடைய திருமண்காப்பு என்ற இச்சின்னம் உதவும் என்ற ஒரே திட நம்பிக்கை யோடு வைணவர்கள் திருமண்ணை நெற்றியில் இட்டுக் கொள்வர்.

---

மீனாட்சிசுந்தரனார் மாணவர்களைப் பார்த்து ஏதாவது ஒரு பாடல் சொல்லுங்கள் எனக்கூற ஒரு மாணவர் இந்த ''கார் பெற்ற தோகையோ'' பாடலைக்கூறினார். மீனாட்சிசுந்தரனார் ''தெய்வ வணக்கமாக ஏதாவது ஒரு பாடலைக் கூறாது இப்பாடலை ஏன் கூறினீர்கள்'' எனக் கேட்டார்.

அம்மாணவர் ''இது நளவெண்பாவில் நளன் வருகை கண்டு மக்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்த பாடல். எமது ஆசிரியரின் ஆசிரியரான தாங்கள் இங்கெழுந்தருளியது எங்கள் மனத்தில் இன்பத்தை உண்டாக்கியது. அந்த இன்பத்தைத் தெரிவிக்க நள வெண்பாவின் இப்பாடல் மிகப் பொருத்த மாய்த் தோன்றியதால் கூறினேன் என்றார். சமயோசிதமான உண்மையான மகிழ்ச்சி நிறைந்த இந்தப் பதிலைக் கேட்டு, மீனாட்சிசுந்தரனார் மாணவர்களையும் தியாகராஜரையும் வாழ்த்தி னார் என்பது வரலாறு.

கல்லூரிகளும் உயர்நிலைப்பள்ளிகளிலும் உள்ள பாடத்திட்டங்களிலுள்ள தமிழ்ப்பாடல்கள் தவிர மாணவர்கள் முழுநூல்களாக எத்தனை நூல் களைப் பாடம் கேட்க முடியுமோ அவ்வளவை யும் கேட்டுப் பயனடைதல் வேண்டும். இவ்வனு பவம் காரணமாக அடியேன் முதுமை நெருங்கும் நேரத்திலும் தமிழ் நூல்களைப் படிப்பதனால் இளமையுணர்வுடையவனாக உள்ளேன். நாட்டினர் அனைவரும் நம் செந்தமிழ் நூல்களை முழுமை யாகப் படித்து இலக்கிய இன்பம் நுகர்ந்து என்றும் இளமையுடன் வாழ அருளுமாறு இறைவனை வேண்டுகின்றேன்.

> எந்தன் செந்தமிழ் எந்தன் செந்தமிழ்
> என்று புகழ்வேனே
> எந்தாய் மொழியென எந்தாய் மொழியென
> என்றும் மகிழ்வேனே,
> எந்தாய் வாழ்க!

# அருணகிரிநாதர் பாடிய ஞானமலை முருகன்

தி. இராசமாணிக்கம், பி.ஏ.,பி.காம்.,

அருணகிரிநாதரின் திருப்புகழ் பாடல்பெற்ற தலங்களில் எட்டுத் தலங்கள் எவை என இதுவரை தெரியவில்லை. அவற்றில் ஒன்று ஞானமலை. இந்தத் தலத்திற்கு ''சூதுகொலைகாரர்'' மற்றும் 'மனையவள் நகைக்க' எனத் தொடங்கும் இரு திருப்புகழ் பாடல்கள் உள்ளன.

''ஓதி'' என்றால் ஞானம் என்பது பொருள். மிருகண்டுய முனிவரை 'பிறவிக் கடல் நீந்தும் ஓதித் திறத்தை உணர்ந்துடையோன்'' என்று கந்தபுராணம் கூறுகிறது. மேலும் ''மகஞ்செய் தான் செயலை யாக்கை நோக்கினான் ஓதி தன்னால் நோக்கினான்'' என்பது திருவிளையாடற் புராணம். இவை ஓதி என்றால் ஞானம் என்பது பொருள் என்பதை உறுதிப்படுத்துகின்றன. எனவே ஓதிமலை என்றால் ஞானமலை என்று பொருளாகிறது.

அருணகிரிநாதர் தலங்களின் பெயர்களை மாற்றி வேறு பெயர்களில் பாடியும் உள்ளார். உதாரணமாக காஞ்சிபுரம் என்றால் எட்டி என்பது பொருள். தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்த எட்டிக் குடியை காஞ்சிரம்குடி என்று தமது திருப்புகழில் பாடி உள்ளார். ''ஓங்கு ஐம்புலனோட'' என்று தொடங்கும் திருப்புகழில் ''காஞ்சிரங்குடி ஆறுமுகத்து எம்பெருமானே' என்று குறிப்பிட்டுள்ளார்.

இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டால், இதுவரை இடம் விளங்காத ஞானமலை 'ஓதிமலை' தான் என்று உறுதியாகக் கொள்ளலாம்.

கோவையினின்றும் புஞ்சைப் புளியம்பட்டி செல்லும் வழியில் இரும்பறை என்ற சிற்றூர் உள்ளது. அங்கிருந்து சுமார் ஒரு கிலோ மீட்டர் தொலைவில் ஓதிமலை உள்ளது. 1800 படிகளைக் கொண்ட உயரமான இந்த மலையின் பாதையில் இளைப்பாறிச் செல்ல ஓரிரு மண்டபங்கள்தான் உள்ளன. மரம் செடிகள் ஏதும் இல்லை. எனவே மலை ஏறுவது மிகவும் சிரமமானது. மலையின் உச்சியில் முருகனது கோயில் உள்ளது.

கோயில் கருவறை, முன்மண்டபம் ஆகியவற்றைக் கொண்ட சிறிய அளவிலானது. கருவறையின் உள்ளே மூலவராக எழுந்தருளியுள்ள குமார சுப்பிரமணியனுக்கு 5 தலைகள் 8 கைகள் அமைக்கப்பட்டுள்ளன. தலைக்குப் பின்னால் ஒளிவட்டம் உள்ளது. முன் இரு கைகள் அபய மற்றும் வரத முத்திரைகளில் உள்ளன. ஏனையவற்றில் கத்தி, அம்பு, வச்சிரம், கேடயம், வில், பாசம் ஆகியவை காணப்படுகின்றன. அழகுடன் உருவாக்கப்பட்டுள்ள இந்த வடிவின் திருமுகத்தில் பொலியும் கருணை, காணக்காண இன்பம் அளிப்பதாக உள்ளது. இவனுக்குப் பின்னால் இவனது ஊர்தியான மயில் அமைக்கப்பட்டுள்ளது.

ஆகமங்களில் 22 வடிவங்கள் கூறப்பட்டுள்ளன. இவற்றிற்கு கைகள் 2, 4, 6, 8, 10, 12 என்று விதிக்கப்பட்டுள்ளன. தலைகள் 1, 2, 4, 6 என்று தான் சொல்லப்பட்டுள்ளதே தவிர, எந்த வடிவமும் 5 தலைகள் கொண்டதாக ஆகமங்கள் விதிக்கவில்லை. 5 தலைகள் 8 கைகள் கொண்ட முருகனது திருவுரு தமிழகத்திலோ அல்லது இந்திய நாட்டின் வேறு பகுதியிலோ இருப்பதாகத் தெரியவில்லை.

பிரணவப்பொருளை அறியாப் பிரமனை சிறையிலிட்ட இரும்பாலான அறை உள்ள இடம் இரும்பறை என்ற ஊராம்; இங்குள்ள சிவனது கோயிலில் பிரமர் சிறையிலிருப்பதாக ஐதீகம். ஒரு தலை 4 கைகள் கொண்ட முருகனுக்கு உற்சவர் வடிவம் அந்தக் கோயிலில் உள்ளது. சிறையில் இருப்பதாக நம்பப்படும் பிரமனை அது காவல் செய்கிறது. எனவே மலைமீது கோயில் கொண்டுள்ள முருகனுக்கு 5 தலைகள் 8 கைகள் எனப் புராண ரீதியாகச் சொல்லப்படுகிறது. முருகன் தன் தந்தைக்கு பிரணவப் பொருளை ஓதியமலை எனவே இது ஓதிமலை எனப்பட்டது என்றுஇங்கு கர்ணபரம்பரைச் செய்தி ஒன்று நிலவுகிறது. இச்செய்தியும் ஓதிமலைதான் ஞானமலை என்பதை உறுதிப்படுத்துகிறது.

முருகனும் சிவனும் ஒன்றே என்பது ஆன்றோர்கள் வாக்கு. வாமதேவம், தத்புருடம், அகோரம், சத்யோஜாதம், ஈசானம் என்பன சதாசிவ மூர்த்தியான சிவனது ஐந்து முகங்கள். தேவாரம் பாடிய மூவரும் சிவனை ''எண்தோளன்' என்றே தமது திருப்பாடல்களில் குறிப்பிட்டுள்ளனர். சிவனும் முருகனும் ஒன்றே என்பதால் இங்கு முருகனுக்குச் சிவனைப் போன்று 5 தலைகள் 8 கைகள் அமைக்கப்பட்டன போலும்.

காண்போர் கண்ணையும் கருத்தையும்கவரும் கவின்மிக்க வடிவாக, தன்னை அடைக்கலம்அடைந்தோருக்கு வேண்டிய வேண்டியாங்கு அருளும் கருணை ததும்பும் திருமுக மண்டலங்கள் பொலிவுடன் விளங்க, எங்கும் காண்டற்கரிய ஒரு கலைப் படைப்பாக இந்தத் திருவுரு திகழ்கிறது.

---

**அஞ்சுவது யாதொன்றுமில்லை**
**அஞ்ச வருவதும் இல்லை**

—அப்பர்

---

# பலன் தரும் திருமுறைகள்



—நா. இராமமூர்த்தி

காலையில் எழுந்து ஸ்நானம் செய்து, பூஜை அறை அல்லது சுவாமி படங்கள் வைத்திருக்கும் இடத்திற்குச் சென்று உட்கார்ந்து முதலில் விநாயகப் பெருமானை வேண்டித் தொழுது, பிறகு சமயாச்சாரியர்கள் நால்வரை வணங்கிப்பின் அந்தந்த பலன்களுக்கு ஏற்றவாறு உள்ள பதிகத்தைப் பாராயணம் செய்ய வேண்டும். 1 வாரம், 15 நாள், 1 மாதம், ஒரு மண்டலம் தினமும் காலை, மாலை நேரங்களில் பாராயணம் செய்ய வேண்டும். முழு நம்பிக்கையுடனும், பக்திச் சிரத்தையுடனும், பாராயணம் செய்தால் நிச்சயம் பலன் கிடைக்கும். முதலில் ''நமப்பார்வதி பதயே! ஹர ஹர மகா தேவா'' என்று சொல்லவேண்டும்.

விநாயகர் துதி

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறைபோலும் எயிற்றனை,
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை,
புந்தியில் வைத்து அடிபோற்றுகின்றேனே

நால்வர் துதி

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைகல் மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி
வாழி திருநாவலூர் வன்தொண்டர் பதம் போற்றி
ஊழிமலி திருவாதவூரர் திருத்தாள்போற்றி.

பிறகு 'திருச்சிற்றம்பலம்' என்று சொல்லி பதிகத்தை தொடங்கவும்; முடிவிலும் 'திருச்சிற்றம்பலம்' என்று சொல்லவும்.

இவ்வுலகத்தில் நான்கு வேதங்களாகிய, ரிக், யஜுர், சாம, அதர்வணம் ஆகியவை சமஸ்கிருத பாஷையில் அமைந்து, மிக உன்னதமாக விளங்குகிறது. வடமொழியில் உள்ள மேன்மையானஇந்த வேதங்களை, சமஸ்கிருத பாஷையை நன்கு கற்றுணர்ந்து, தேர்ச்சி பெற்று அதை நுணுக்கமாக அத்தியானம் செய்து கருத்துக்களையும், அறிவுரைகளையும், உள்அர்த்தங்களையும், பூர்ணமாக, உணர ஒரு சிலரால்தான் முடியும்.

இப்படிப்பட்ட நான்கு வேதங்களுக்கு இணையாக வேதங்களின் மெய்ப் பொருளாகிய அந்தப் பரம்பொருளை உணர எல்லா மக்களுக்கும் உதவும் வகையில் அமைந்துள்ளது, நமது தமிழ் வேதம் எனக் கூறப்படும் பன்னிரு திருமுறைகள். சிவபரம் பொருளையே மூலமாகக் கொண்டு 27 ஆசிரியர்களால் அருளப்பெற்றது. இதில் நால்வர் பெருமக்கள் எனப்படும், திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர், ஆகிய சமயாச்சாரியர்கள் பெரும்பான்மையான பகுதியை இயற்றியவர்கள். அதாவது முதல் 8 திருமுறைகள் இவர்களால் அருளப் பெற்றன. திருஞான சம்பந்தர் சொல்கிறார், 'வேதம் நான்கினும் மெய்பொருளாவது, நாதன் நாமன் நமச்சிவாயவே''. 27 ஆசிரியர்கள் அருளிய இந்தத் திருமுறைகள், தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருமந்திரம், பதினோராம் திருமுறை, திருத்தொண்டர் புராணமாகிய பெரிய புராணம் என்று தொகுக்கப்பட்டுள்ளன. தெய்வச் சேக்கிழார் இல்லையேல் பெரிய புராணம் இல்லை. நம்பியாண்டார் நம்பிகள் இல்லையேல் திருமுறைகளே கிடைத்திருக்காது என்பது மற்றொரு மாபெரும் உண்மை. 8-ஆம் திருமுறையாகிய மாணிக்கவாசகர் அருளியவை திருவாசகம்,திருக்கோவையார். இவைகளை, மாணிக்கவாசகர் விளம்பிட தில்லை கூத்தபிரான் தன் கரங்களால் எழுதி அருளியதாகவும், சிவபெருமான் அப்படி எழுதிக் கொள்ளும் பொழுது' 'பாவை பாடிய வாயால் ஒரு கோவையும் பாடுக' என்று இயம்பினார் என்பதும், ஒப்பற்ற பெருமை வாய்ந்த செய்தியாகும். இப்படிப்பட்ட ஒப்பற்ற பொக்கிஷமாகிய பன்னிரு திருமுறைகளை பக்தி சிரத்தையுடனும் விடா முயற்சியுடனும், முழு நம்பிக்கையுடனும் உள்ளமுருகி ஓதினால் அந்த தெய்வீக ஆச்சாரியர்கள் அடைந்த பலன்களை நாமும் நிச்சயமாக பெறலாம் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

உயிர்க்கு உறுதி தேடவும்

மனம் நிம்மதி காணவும்,

துன்பம் ஓட்டி இன்பம் அருளும் கீழ்க்காணும் 4 பதிகங்களை நாளும் ஓதிப் பலன் பெற வேண்டுகிறேன்.

## பஞ்சாக்கரத் திருப்பதிகம்

## திருஞானசம்பந்தர்

**பண் காந்தாரப் பஞ்சமம்**

துஞ்சலுந் துஞ்சலிலாத போழ்தினும்
நெஞ்சகம் நைந்து நினைமின் நாள்தொறும்
வஞ்சக மற்றடி வாழ்த்த வந்தகூற்று
அஞ்சவும் உதைத்தன அஞ்செழுத்துமே 1

மந்திர நான்மறை யாகி வானவர்
சிந்தையுள் நின்றவர் தம்மை யாள்வன
செந்தழ லோம்பிய செம்மை வேதியர்க்
கந்தியுள் மந்திரம்அஞ்சே முத்துமே 2

ஊனிலு யிர்ப்பை ஒடுக்கி ஒண்சுடர்
ஞானவி ளக்கினை யேற்றி நன்புலத்
தேனைவ ழிதிறந் தேத்து வார்க்கிடர்
ஆனகெ டுப்பன அஞ்செழுத்துமே 3

நல்லவர் தீய ரெனாது நச்சினர்
செல்லல்கெ டச்சிவ முத்தி காட்டுவ
கொல்லந மன்றமர் கொண்டு போமிடத்
தல்லல்கெ டுப்பன அஞ்செழுத்தமே. 4

கொங்கலர் மன்மதன் வாளி யைந்தகத்
தங்குள பூதமு மஞ்ச ஐம்பொழில்
தங்கர வின்படம் அஞ்சும் தம்முடை
அங்கையி லைவிரல் அஞ்செ முத்துமே 5

தும்மல் இருமல் தொடர்ந்த போழ்தினும்
வெம்மை நரகம் விளைந்த போழ்தினும்
இம்மை வினையடர்த் தெய்தும் போழ்தினும்
அம்மையி னுந்துணை அஞ்செழுத்துமே 6

வீடுபி றப்பை யறுத்து மெச்சினர்
பீடைகெ டுப்பன பின்னை நாள்தொறும்
மாடுகொ டுப்பன மன்னு மாநடம்
ஆடியு கப்பன அஞ்செ ழுத்துமே 7

வண்டம ரோதி மடந்தை பேணின
பண்டைய ராவணன் பாடி யுய்ந்தன
தொண்டர்கள் தொண்டு துதித்த பின்னவர்க்
கண்டம ளிப்பன அஞ்செ ழுத்துமே 8

கார்வணன் நான்முகன் காணு தற்கொணாச்
சீர்வணச் சேவடி செவ்வி நாள்தோறும்
பேர்வணம் பேசிப் பிதற்றும் பித்தர்கட்
கார்வண மாவன அஞ்செழுத்துமே 9

புத்தர்ச மண்கழுக் கையர் பொய்கொளாச்
சித்தத் தவர்கள் தெளிந்து தேறின
வித்தக நீறணி வார்வி னைப்பகைக்கு
அத்திர மாவன அஞ்செ ழுத்துமே 10

நற்றமிழ் ஞானசம் பந்தன் நான்மறை
கற்றவன் காழியர் மன்னன் உன்னிய
அற்றமில் மாலையீ ரைந்தும் அஞ்செழுத்
துற்றன வல்லவர் உம்ப ராவரே 11

## நமச்சிவாயத் திருப்பதிகம்—

## திருஞானசம்பந்தர்

**பண்—கௌசிகம்**

காதலாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஒது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினு மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே 1

நம்பு வாரவர் நாவி னவிற்றினால்
வம்பு நாள்மலர் வார்மது ஒப்பது
செம்பொ னார்தில கம்உல குக்கெலாம்
நம்பன் நாமம் நமச்சி வாயவே. 2

நெக்கு ளார்வ மிகப்பெரு கிந்நினைந்
தக்கு மாலைகொ டங்கையில் எண்ணுவார்
தக்க வானவ ராத்தகு விப்பது
நக்கன் நாமம் நமச்சி வாயவே 3

இயமன் தூதரும் அஞ்சுவர் இன்சொலால்
நயம்வந் தோதவல் லார்தமை நண்ணினால்
நியமந் தானினை வார்க்கினி யானெற்றி
நயனன் நாமம் நமச்சி வாயவே 4

கொல்வா ரேனும் குணம்பல நன்மைகள்
இல்லா ரேனு மியம்புவ ராயிடின்
எல்லாத் தீங்கையு நீக்குவர் என்பரால்
நல்லார் நாமம் நமச்சி வாயவே 5

மந்த ரம்மன பாவங்கள் மேவிய
பந்த னையவர் தாமும் பகர்வரேல்
சிந்தும் வல்வினை செல்வமும் மல்குமால்
நந்தி நாமம் நமச்சிவாயவே 6



நரகம் ஏழ்புக நாடினர் ஆயினும்
உரைசெய் வாயின ராயின் உருத்திரர்
விரவி யேபுகு வித்திடும் என்பரால்
வரதன் நாமம் நமச்சி வாயவே 7

இலங்கை மன்னன் எடுத்த அடுக்கல்மேல்
தலங்கொள் கால்விரல் சங்கரன் ஊன்றலும்
மலங்கி வாய்மொழி செய்தவன் உய்வகை
நலங்கொள் நாமம் நமச்சி வாயவே 8

போதன் போதன கண்ணனும் அண்ணல்தன்
பாதந் தான்முடி தேடிய பண்பராய்
யாதுங் காண்பரி தாகி அலந்தவர்
ஓதும் நாமம் நமச்சி வாயவே 9

கஞ்சி மண்டையர் கையிலுண் கையர்கள்
வெஞ்சொல் மிண்டர் விரவிலர் என்பரால்
விஞ்சை அண்டர்கள் வேண்ட அமுதுசெய்
நஞ்சுண் கண்டன் நமச்சி வாயவே 10

நந்தி நாமம் நமச்சிவா யவெனும்
சந்தை யால்தமிழ் ஞானசம் பந்தன்சொல்
சிந்தை யால்மகிழ்ந் தேத்தவல் லாரெலாம்
பந்த பாசம் அறுக்கவல் லார்களே 11

## கருங்கல்லைத் தெப்பமாக்கிய நமச்சிவாயத் திருப்பதிகம்

## திருநாவுக்கரசு சுவாமிகள் அருளியது

**பண்—காந்தாரம்**

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டிஓர் கடலில் பாய்ச்சினும்
நற்றுணை ஆவது நமச்சிவாயவே 1

பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கலம் அரனஞ் சாடுதல்
கோவினுக் கருங்கலம் கோட்டம் இல்லது
நாவினுக் கருங்கலம் நமச்சி வாயவே 2

விண்ணுற அடுக்கிய விறகின் வெவ்வழல்
உண்ணிய புகிலவை ஒன்றும் இல்லையாம்
பண்ணிய உலகினில் பயின்ற பாவத்தை
நண்ணிநின் றறுப்பது நமச்சி வாயவே 3

இடுக்கண்பட் டிருக்கினும் இரந்து யாரையும்
விடுக்கில் பிரானென்று வினவுவோம் அல்லோம்
அடுக்கற்கீழ்க் கிடக்கினும் அருளி னாமுற்ற
நடுக்கத்தைக் கெடுப்பது நமச்சிவாயவே 4

வெந்தநீ றருங்கலம் விரதி கட்கெலாம்
அந்தணர்க் கருங்கலம் அருமறை ஆறங்கம்
திங்களுக் கருங்கலம் திகழும் நீள்முடி
நங்களுக் கருங்கலம் நமச்சி வாயவே 5

சலமிலன் சங்கரன் சார்ந்த வர்க்கலால்
நலமிலன் நாடொறும் நல்கு வானலன்
குலமிலர் ஆகிலும் குலத்துக் கேற்பதோர்
நலமிகக் கொடுப்பது நமச்சி வாயவே 6

வீடினார் உலகினில் விழுமிய தொண்டர்கள்
கூடினார் அந்நெறி கூடிச் சென்றலும்
ஓடினேன் ஓடிச்சென் றுருவங் காண்டலும்
நாடினேன் நாடிற்று நமச்சி வாயவே 7

இல்லக விளக்கது இருள்கெ டுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது
பல்லக விளக்கது பலரும் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே 8

முன்னெறி யாகிய முதல்வன் முக்கணன்
தன்னெறி யேசரண் ஆதல் திண்ணமே
அந்நெறி யேசென்றங் கடைந்த வர்க்கெலாம்
நன்னெறி யாவது நமச்சிவாயவே 9

மாப்பிணை தழுவிய மாதொர் பாகத்தன்
பூப்பிணை திருந்தடி பொருந்தக் கைதொழ
நாப்பிணை தழுவிய நமச்சி வாயப்பத்
தேத்தவல் லார்தமக் கிடுக்க ணில்லையே 10

## நமச்சிவாயப் பதிகம்
## சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளியது

**பண்—பழம்பஞ்சரம்**

மற்றுப் பற்றெனக் கின்றி நின்திருப்
பாத மேமனம் பாவித்தேன்
பெற்ற லும்பிறந் தேன் இனிப்பிற
வாத தன்மைவந் தெய்தினேன்
கற்ற வர்தொழு தேத்துஞ் சீர்க்கறை
யூரிற் பாண்டிக் கொடுமுடி
நற்றவா வுனை நான்ம றக்கினுஞ்
சொல்லுநா நமச்சி வாயவே 1

இட்டன் நும்மடி ஏத்து வாரிகழ்ந்
திட்ட நாள்மறந் திட்ட நாள்
கெட்ட நாளிவை யென்ற லால்கரு
தேன்கி ளர்புனற் காவிரி
வட்ட வாசிகை கொண்ட டிதொழு
தேத்து பாண்டிக் கொடுமுடி
நட்ட வாவுனை நான்ம றக்கினுஞ்
சொல்லுநா நமச்சி வாயவே 2

ஓவு நாளுணர் வழியும் நாளுயிர்
போகு நாளுயர் பாடைமேல்
காவு நாளிவை யென்ற லால்கரு
தேன்கி ளர்புனல் காவிரிப்
பாவு தண்புனல் வந்தி ழிபரஞ்
சோதி பாண்டிக் கொடுமுடி
நாவ லாவுனை நான்ம றக்கினும்
சொல்லுநா நமச்சி வாயவே 3

எல்லை யில்புகழ் எம்பி ரானெந்தை
தம்பிரா னென்பொன் மாமணி
கல்லை யுந்தி வளம்பொழிந்திழி
காவி ரியதன் வாய்க்கரை
நல்ல வர்தொழு தேத்துஞ் சீர்க்கறை
யூரிற் பாண்டிக் கொடுமுடி
வல்ல வாவுனை நான்ம றக்கினும்
சொல்லும்நா நமச்சி வாயவே 4

அஞ்சினார்க்கரண் ஆதி யென்றடி
யேனும் நான்மிக அஞ்சினேன்
அஞ்ச லென்றடித் தொண்ட னேற்கருள்
நல்கி னாய்க்கழி கின்றதென்
பஞ்சின் மெல்லடிப் பாவை மார்க்குடைந்
தாடு பாண்டிக் கொடுமுடி
நஞ்ச ணிகண்ட நான் மறக்கினும்
சொல்லும் நா நமச்சி வாயவே 5

ஏடு வானிளந் திங்கள் சூடினை
என்பின் கொல்புலித் தோலின் மேல்
ஆடு பாம்ப தரைக்க சைத்த
அழகனே அந்தண் காவிரிப்
பாடு தண்புனல் வந்தி ழிபரஞ்
சோதி பாண்டிக் கொடுமுடி
சேட னேஉனை நான்ம றக்கினும்
சொல்லுநா நமச்சி வாயவே 6

விரும்பி நின்மலர்ப் பாதமேநினைந்
தேன்வி னைகளும் விண்டன
நெருங்கி வண்பொழில் சூழ்ந்தெ ழில்பெற
நின்ற காவிரிக் கோட்டிடைக்
குரும்பை மென்முலைக் கோதை மார்குடைந்
தாடு பாண்டிக் கொடுமுடி
விரும்ப னேஉனை நான்ம றக்கினும்
சொல்லும்நா நமச்சி வாயவே 7

செம்பொன்நேர்சடை யாய்தி ரிபுரம்
தீயெ ழச்சிலை கோலினாய்
வம்பு லாங்குழ லாளைப் பாகம்
அமர்ந்து காவிரிக் கோட்டிடைக்
கொம்பின் மேற்குயில் கூவ மாமயில்
ஆடு பாண்டிக் கொடுமுடி
நம்ப னேவுனை நான்ம றக்கினும்
சொல்லும் நா நமச்சி வாயவே 8

சாரணன் தந்தை எம்பி ரானெந்தை
தம்பி ரானென்பொன் மாமணியென்று
பேரெ ணாயிர கோடி தேவர்
பிதற்றிநின்று பிரிகிலார்
நார ணன்பிர மன்தொ ழும்கறை
யூரிற் பாண்டிக் கொடுமுடிக்
கார ணாவுனை நான்ம றக்கினும்
சொல்லுநா நமச்சி வாயவே 9

கோணி யமறை சூடி யைக்கறை
யூரில் பாண்டிக் கொடுமுடி
பேணி யபெரு மானைப் பிஞ்ஞகப்
பித்தினைப்பிறப் பில்லியைப்
பாணு லாவரி வண்ட றைகொன்றைத்
தார னைப்படப் பாம்பரை
நாண னைத்தொண்ட னூரன் சொல்லிவை
சொல்லு வார்க்கில்லை துன்பமே 10

குறிப்பு : தினமும் காலை, மாலை, இரு வேளையும் பாராயணம் செய்தால் எல்லா நலனும் பெறலாம்.

# கந்தர் அலங்காரம்

## டாக்டர் த. அமிர்தலிங்கம்

சிவபெருமானுக்கு எவ்வாறு திருவாசகம் உவப்பாகுமோ அவ்வாறே முருகப்பெருமானுக்கு மிக உவப்பாவது அருணகிரி நாத சுவாமிகள் அருளிச் செய்த கந்தர் அலங்காரம் என்பர் நம் சான்றோர் பெருமக்கள். அத்தகைய சிறப்பிற்குரிய கந்தர் அலங்காரப் பாடல்கள் சிலவற்றின் பொருள் அறிந்து அவற்றின் நயம் அறிந்து நாம் நன்மை அடைவோமாக.

கந்தர் அலங்காரத்தில் நூறு பாடல்கள் அமைந்திருப்பதாகவும், அவற்றில் ஒரே ஒரு பாடலைப் படித்துணர்ந்தாலும்கூட அவர்கள் அரசர்களுக்கு அஞ்ச வேண்டுவதில்லை. யமனுக்கு அஞ்ச வேண்டுவதில்லை; நரகத்தை அவர்கள் அடைய மாட்டார்கள்; கொடிய நோய்களும் விலங்குகளும்கூட அவர்களை ஒன்றும் செய்யாது என்பதாகக் கந்தர் அலங்காரத்தைக் கற்பதனால் உண்டாகும் கவின்மிகு பயன்களைக் கூறும் பாடல் ஒன்றும் இந்நூலுக்குள் அமைந்திருப்பது நாம் அறிந்து மகிழத்தக்கது.

''சலம் காணும் வேந்தர் தமக்கு மஞ்சார் யமன்
சண்டைக்கஞ்சார்
துலங்கா நரகக் குழியணுகார் துட்ட நோயணுகார்
கலங்கார் புலிக்கும் கரடிக்கும் யானைக்கும்
கந்தன்நன்னூல்
அலங்கார நூற்றுள் ஒருகவிதான் கற்றறிந்தவரே.''
*(101)*

கந்தர் அலங்காரம் நூறு திருப்பாடல்களைக் கொண்டது என்பதை இப்பாடல் நமக்கு உணர்த்தினாலும் விநாயகர் வாழ்த்துடன் 108 பாடல்கள் தற்பொழுது கந்தர்அலங்கார நூலுள் அமைந்துள்ளன. அருணகிரிநாதரின் வாக்கினைப் போலவே அமைந்து அவ்வதிகமான பாடல்களும் திகழ்வதால் கந்தர்அலங்கார நூலில் தற்பொழுது உள்ள 108 பாடல்களையுமே போற்றி நாம் பயிலலாம். எல்லாப் பாடல்களுமே தித்திக்கும்பாடல்கள் தான்; நாம் போற்றிப் பயிலத்தக்க பாடல்கள் தான். எனினும் ஒரு பானைச் சோற்றிற்கு ஒரு சோறு பதம் பார்ப்பதைப்போல் நாமும் ஒரு சில பாடல்களை மட்டும் இக்கட்டுரையில் கண்டு மகிழ்ந்திடுவோம்.

முருகப் பெருமானின் திருநாமங்களைச் செபிப்பதனால் உண்டாகும் பலன்களைத் தொகுத்துக் கூறுகிறது ஒரு பாடல் :

''முடியாப் பிறவிக் கடலில் புகார் முழுதுங்
கெடுக்கும்
மிடியாம் படியில் விதனப் படார் வெற்றிவேல்
பெருமான்
அடியார்க்கு நல்லபெருமான் அவுணர்குலம் அடங்கப்
பொடியாக்கிய பெருமான் திருநாமம் புகல்பவரே''
*(38)*

வறுமைத் துன்பம் என்றும் வாட்டாதவாறு இம்மைப் பிறவிக்கு வேண்டிய சகல சௌபாக்கியங்களையும் வழங்குவதோடு மீண்டும் மண்ணுலகில் வந்து பிறவாதவாறு முருகப்பெருமான் முத்திப் பேற்றையும் வழங்கி அருள்பாலிப்பார் என்பது இப்பாடலின் பொருளாகும். வெற்றிவேல் பெருமான், அடியார்க்கு நல்ல பெருமான், அவுணர்குலம் அடங்கப் பொடியாக்கிய பெருமான் என்று முருகனை நா அள்ளூறித் தித்திக்கப் பாடுகிறார் அருணகிரிநாதர். அவரே முருகப்பெருமானின் திருநாமங்கள் பலவற்றை அழகொழுக அடுக்கியும் ஒரு பாடலில் கூறுகிறார்.

''சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு வெற்பனை
செஞ்சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ்நூல் விரித்தோனை
விளங்குவள்ளி
காந்தனைக் கந்த கடம்பனைக் கார்மயில்
வாகனனைச்
சாந்துணைப் போதும் மறவாதவர்க் கொரு
தாழ்வில்லையே.'' *(72)*

இப்பாடல் முருகனின் திருநாமங்களை அடுக்கிக்கூறும் அழகுப் பாடல். ஆறுமுகம் தொழும் அடியார்க்கு வாழ்க்கையில் ஏறுமுகம் அன்றி இறங்குமுகமோ, அஞ்சுமுகமோ இல்லை என்பதை இப்பாடலில் ''மறவாதவர்க் கொரு தாழ்வில்லையே'' என்று உறுதிபடப் பாடியிருக்கிறார் அருணகிரிநாதர்.

முருகப்பெருமானைச் 'செந்தமிழ் நூல் விரித்தோனாக'' இப்பாடலில் போற்றியிருக்கும் அருணகிரிநாதர்

''மொய்தாரணி குழல் வள்ளியை வேட்டவன்
முத்தமிழால்
வைதாரையும் அங்கு வாழவைப்போன் வெய்ய
வாரணம்போல்
கைதான் இருபதுமுடையான் தலைபத்தும்
கத்தரிக்க
எய்தான் மருகன் உமையாள் பயந்த இலஞ்சியமே''

என்னும் பாடலில் தமிழால் வைதாலும் அவ்வாறு வைதாரையும் வாழவைப்பவன் முருகன் என்று அவர்தம் தமிழ்ப் பற்றைப் போற்றியிருப்பது எண்ணி மகிழ்தற்குரியது.

தமிழ்மொழியின் 18 மெய்யெழுத்துகளே முருகனின் 18 கண்களாகவும், தமிழ்மொழியின் 12 உயிரெழுத்துகளே முருகனின் 12 தோள்களாகவும், தமிழ்மொழியின் வல்லினம், மெல்லினம், இடையினம் ஆகிய இனஎழுத்துக்கள் ஆறும் தனித்தனியே முருகனின் ஆறுமுகங்களாகவும், தமிழின் சிறப்பெழுத்தும் நுண்ணிய ஓசையை உடையதுமான ஃஎன்ற ஆயுத எழுத்தே முருகனின் வேலா

யுதமாகவும் திகழ்ந்து தமிழ்மொழியோடு ஒப்புமை யுடையவராய் முருகப்பெருமான் திகழ்வதைக் கீழ்க் காணும் புலவர்புராணப் பாடல் தெளிவுபடுத்தும்.

''கண்ணிகர் மெய்யும் சென்னி
கணம் உறழ் இனத்தின் கூறும்
திண்திறல் தோள்க ளேபோல்
திகழ்தரும் உயிரும் வேறொன்
றெண்ணுதற் கரிய தான
எஃகமும் இயலில் காட்டும்
புண்ணிய முனிக்கோன் செவ்வேள்
பொற்பதத் தடிமை யாகும்''

இவ்வாறு தமிழாகவே திகழும் தமிழ்க் கடவுளான முருகப்பெருமான், தமிழால் தம்மை வைதாரையும் வாழவைக்கும் கருணை பூண்டு திகழ்வதைத்தான் அருணகிரிநாதர் முன்காட்டிய பாடலில் மிகச் சிறப்பாகப் போற்றியுள்ளார்.

கந்தர் அலங்காரத்தில் மிகப்பல பாடல்கள் எமபயம் நீங்கி வாழும் முருகனடியார்களின் மன உறுதியினை விவரிப்பனவாக உள்ளன. 'வேலும் மயிலும் துணை' என நம்பி வாழும் முருகனடியார்களுக்கு மரணபயம் இல்லை என்பது அருணகிரிநாதர் அருள்வாக்கு.

''மரணப் பிரமாதம் நமக்கில்லை யாமென்றும்
வாய்த்த துணை
கிரணக் கலாபியும் வேலுமுண்டே கிண்கிணி முகுள
சரணப் பிரதாப சசிதேவி மாங்கல்ய தந்து ரட்சா
பரண கிருபாகர ஞானாகர சுர பாஸ்கரனே''.

இப்பாடலில் இந்திரனின் மனைவியான சசிதேவியும் முருகனால் மாங்கல்ய பாக்கியம் பெற்றதை அருணகிரிநாதர் சுட்டிக் காட்டி இருப்பதோடு ஞானவடிவமாகவும், கருணைக்கு உறைவிடமாகவும் திகழும் முருகப்பெருமானின் அழகிய மயிலும் (கிரணகலாபி) ஆற்றல்மிகு வேலும் அடியவர்களுக்குத் துணையாக உண்டே என்று உறுதிபடவும் கூறுகிறார்.

''சூலம் பிடித்து எம பாசஞ் சுழற்றித் தொடர்ந்து
வரும்
காலன் தனக்கொரு காலும் அஞ்சேன் மீதெழுந்த
ஆலங்குடித்த பெருமான் குமாரன் ஆறுமுகவன்
வேலும் திருக்கையு முண்டே நமக்கொரு
மெய்த்துணையே'(107)

என்ற பாடலிலும் ''வேலும் திருக்கையும் உண்டே' எனக் கூறும் அருணகிரிநாதர், தாம் ஒருபோதும் எமனுக்கு அஞ்சுவதில்லை எனக்கூறுவதோடு ஞான போதனர்கள் ஆன முருகனின் அடியார்களை ''எமராசன் விட்ட கடையேடு வந்து இனி என் செயும்?'' என்றும் பிறிதோரிடத்தில் வினவுகிறார்.

எமனை நோக்கி அருணகிரிநாதர் வீரம் பேசுவதாய் அமைந்துள்ள பாடல்கள் மிகச் சிறப்பானவை.

''தண்டாயுதமும் திரிசூலமும் விழத் தாக்கி
உன்னைத்
திண்டாட வெட்டி விழ விடுவேன் செந்தில்
வேலனுக்குத்
தொண்டாகிய என்மேல் என்ன விரோதம் ஞானச்
சுடர் வடிவாள்
கண்டாயடா அந்தகா வந்துபார் சற்றென்
கைக்கெட்டவே' (25)

''பட்டிக் கடாவில் வரும் அந்தகா உனைப் பாரறிய
வெட்டிப் புறம் கண்டலாது விடேன் வெய்ய
சூரனைப் போய்
முட்டிப் பொருத செவ்வேற் பெருமாள் திருமுன்பு
நின்றேன்
கட்டிப் புறப்படடா சக்திவாள் என்றன்
கையதுவே' (64)

''தாராகணம் எனும் தாய்மார் அறுவர்தரும்
முலைப்பால்
ஆராதுமைமுலைப்பால் உண்ட பாலன் அரையிற்
கட்டும்
சீராவும் கையிற் சிறுவாளும் வேலுமென்
சிந்தையவே
வாராது அகல் அந்தகா வந்தபோதுயிர்
வாங்குவனே''(81)

இப்பாடல்களில் எமனையும் வெல்லவல்ல முருகனடியார்களின் மன உறுதிப்பாட்டினைத் தெளிவுபடுத்தியிருக்கிறார் அருணகிரிநாதர்.

முருகனடியார்களுக்கு எவ்வாறு மரணபயம் இல்லையோ அவ்வாறே அவர்களுக்குப் பொருள் மேல் ஆசையும் இருக்க இயலாது. தமக்குவேண்டுமெனப் பொருளைத் தொகுத்து வைக்கும் பாவச் செயலை முருகனடியார்கள் செய்யமாட்டார்கள். உள்ள பொருள் யாவும் உலகிற்கே ஆக்கும் அற உள்ளம் படைத்தவர்களே முருகனடியார்கள் ஆதலால் அவர்கள் அருங்குணத்தைப் போற்றும்வகையிலும், அறத்தை வற்புறுத்தும் வகையிலும் அருணகிரிநாதர் பாடியுள்ள பாடல்கள் பலவும் இந்நூலில் திகழ்கின்றன.

''வையிற் கதிர்வடி வேலோனை வாழ்த்தி
வறிஞர்க்கென்றும்
நொய்யிற் பிளவளவேனும் பகிர்மின்கள் நுங்கட்
கிங்ஙன்
வெய்யிற் கொதுங்க உதவா உடம்பின் வெறுநிழல்
போல்
கையிற் பொருளும் உதவாது காணும் கடை
வழிக்கே''

''காதற்றஊசியும்வாராது காணும் கடைவழிக்கே'' என்று பட்டினத்தார் பாடிய பாடலை அடியொற்றியே அருணகிரிநாதரும் ''கையிற்பொருளும் உதவாது காணும் கடைவழிக்கே'' என்று அருளியுள்ளார்.

இன்னும் அவரே

''கோழிக் கொடியவன் அடிபணியாமல்
குவலயத்தே
வாழக் கருதும் மதியிலிகாள்' உங்கள் வல்வினை
நோய்
ஊழிற் பெருவலி வொட்டாது உங்கள்
அத்தமெல்லாம்
ஆழப் புதைத்து வைத்தால் வருமோ
நும்அடிப்பிறகே'' (20)

என்னும் பாடலில் அடியவர்க்கு அருளாமல் ஆழ்ப் புதைத்து வைக்கும் பொருளால் ஒரு பயனும் இல்லை என்பதைத் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

இறைவன் அடியார்களுக்கு உதவாத செல்வங்கள் தீய காரியங்களுக்கே பயன்பட்டுத் தீயவர்களால் அபகரிக்கவும்பட்டு ஒரு பயனும் இன்றி வீணாக அழியும் என்பதை ஔவையாரும்

''நம்பன் அடியவர்க்கு நல்காத் திரவியங்கள்
பம்புக்காம் பேய்க்காம் பரத்தையர்க்காம்—
வம்புக்காம்
கொள்ளைக்காம் கள்ளுக்காம் கோவுக்காம்
சாவுக்காம்
கள்ளர்க்காம் தீக்காகும் காண்''



என்று பாடியிருக்கிறார். அருணகிரிநாதரும் அவ்வாறே செல்வம் உள்ளபோது கொடாத கஞ்சர்கள் அச்செல்வத்தைத் திருடர்களிடம் பறிகொடுத்து வாழ்நாளை வீணாக்கி மாள்வர் என்பதை

''வேடிச்சி கொங்கை விரும்பும் குமரனை
மெய்யன்பினால்
பாடிக் கசிந்துள்ள போதே கொடாதவர்
பாதகத்தாற்
தேடிப் புதைத்துத் திருட்டிற் கொடுத்துத்
திகைத்திளைத்து
வாடிக் கிலேசித்து வாழ்நாளை வீணுக்கு
மாய்ப்பவரே' (53)

என்று பாடியுள்ளார்.

அடியார்க்கு உதவும் பொருளே எப்படியும் தவறாமல் வந்து உதவியவர்க்கு உதவவல்லதாகும். அல்லாமல் பூட்டி வைத்த பொன்னும், வீடு முதலான செல்வங்களும் முருகப் பெருமானின் திருவடி சேர உதவவல்லன அல்ல என்பதையும்

''பொங்கார வேலையில் வேலைவிட்டோன்
அருள்போலுதவ
எங்காயினும் வரும் ஏற்பவர்க்கு இட்டது, இடாமல்
வைத்த
வங்காரமும் உங்கள் சிங்கார வீடும் மடந்தையருந்
சங்காதமோ கெடுவீர் உயிர்போம் அத்தனி
வழிக்கே'' (59)

என்ற பாடலால் தெளிவுபடுத்தியிருக்கிறார் அருணகிரிநாதர்.

பொருளாசையைப்போல் பெண்ணாசையும் முருகன் அடியார்களுக்குக் கூடாது என்பதை,

''பால் என்பது மொழி பஞ்சென்பதுபதம்
பாவையர்கண்
சேல் என்பதாகத் திரிகின்றநீ செந்திலோன்
திருக்கை
வேல் என்கிலை கொற்றமயூரமென்கிலை வெட்சித்
தண்டை
கால் என்கிலை மனமே எங்ஙனே முத்தி
காண்பதுவே''

என்று வினவுகிறார். பாவையர்களால் பெறுவது பேரின்பம் அல்ல. பெருந்துன்பமே என்பதையும் ''சித்ர மாதர் அல்குல் தோயா வுருகிப் பருகித் துவளும் இந்த மாயா விநோத மனோதுக்கம்'' என்று அருணகிரிநாதர் குறிப்பிடுகிறார்.

பிறவியாகிய சமுத்திரத்தைக் கடந்திட காமமாகிய சமுத்திரத்தைக் கடந்திடல் வேண்டும். முருகனின் திருவருளால் பாவையர் கழுத்திலும், சிவந்த வாயிலும், தோளிலும், மார்பிலும் வைத்த காமமாகிய கொடிய சமுத்திரத்தைத் தாம் கடந்து கரையேறியதையும் அருணகிரிநாதர்.

''கடத்திற் குறத்தி பிரான் அருளால் கலங்காத
சித்தத்
திடத்திற் புணையென யான்கடந்தேன் சித்ர மாதர்
அல்குல்
படத்தில் கழுத்தில் பழுத்த செவ்வாயிற் பனையில்
உந்தித்
தடத்தில் தனத்தில் கிடக்கும் வெங்காம
சமுத்திரமே'

என்று பெருமிதமாகப் பாடுகிறார்.

முருகனின் ஒப்பற்ற எழில்நலத்தைப் போற்றும் பாடல்களும் இந்நூலில் உண்டு.

''பத்தித் திருமுகம் ஆறுடன் பன்னிரு
தோள்களுமாய்த்
தித்தித் திருக்கும் அமுது கண்டேன்''.

என்று பாடும் அருணகிரிநாதர் அத்தகைய முருகனின் எழில் நலத்தைக் கண்டு ஆனந்திக்கத் தமக்கு நாலாயிரம் கண்களைப் பிரமன் தரவில்லையே என்ற ஏக்கத்தையும்

''மாலோன் மருகனை மன்றாடி மைந்தனை
வானவர்க்கு
மேலான தேவனை மெய்ஞ்ஞான தெய்வத்தை
மேதினியிற்
சேலார் வயற்பொழில் செங்கோடனைச் சென்று
கண்டுதொழ
நாலாயிரங்கண் படைத்திலனே அந்த நான்முகனே'

என்றும் பாடியிருக்கக் காண்கிறோம்.

முருகனின் திருவடிகளின் அழகிற்கே உவமை கூறமுடியாது என்று கூறுவார் கச்சியப்ப சிவாச்சாரியார்.

''ஆயிரம் கோடி காமர் அழகெலாம் திரண்டு
ஒன்றாகி
மேயின எனினும் செவ்வேள் விமலமாம் சரணந்
தன்னின்
தூயநல் எழிலுக் காற்றா தென்றிடின் இனைய
தொல்லோன்
மாயிரு வடிவிற் கெல்லாம் உவமையார்
பகரவல்லார்?''

என்பது கந்தபுராணம். முருகனின் தோற்றம் எவ்வாறு உவமிக்க வொண்ணாத ஏற்றம் கொண்டதோ அவ்வாறே முருகனின் கருணையும் உவமை கூறமுடியாத பெருமை பெற்றதே. இதனையும் கச்சியப்ப சிவாச்சாரியாரே

''தீயவை புரிந்தா ரேனும் குமரவேள் திருமுன்
உற்றால்
தூயவ ராகி மேலை தொல்கதி அடைவர் என்கை
ஆயவும் வேண்டும் கொல்லோ அடுசமர் அந்நாள்
செய்த
மாயையின்மகனும் அன்றோ வரம்பிலா அருள்பெற்
றுய்ந்தான்''

என்று பாடியிருக்கிறார்.

இத்தகைய தோற்றப் பொலிவும் திருவருள் பொலிவும் மிக்க கந்தவேளை எந்தவேளையும் தொழுதிருந்த அருணகிரிநாதர், முருகனைத் தொழாத மாந்தர்தம் குற்றத்தைத் தம்மேல் ஏற்றி வருந்திப் பாடியுள்ள பாடல்கள் சிலவும் இங்கே காணத்தக்கன. ''முருகன் திருவடிகளைச் சூடிக் கொள்ளாத தலையையும், அவன் திருப்புகழைப் போற்றிப் புகழாத நாவையும் உவந்து காணாத கண்களையும், வணங்கி வேண்டாத கைகளையும் கொடுத்து விட்டானே பிரமன்! அப்பிரமனுக்கு யான் செய்த குற்றம் என்ன?'' என்று அருணகிரிநாதர் கேட்டுப் பாடியுள்ள நயமிகு பாடல் பின் வருமாறு:

''கோடாத வேதனுக்கு யான் செய்த குற்றமென்?
குன்றெறிந்த
தாடாளனேதென் தணிகைக் குமரநின்
தண்டையந்தாள்
சூடாத சென்னியும் நாடாத கண்ணும் தொழாத
கையும்
பாடாத நாவும் எனக்கே தெரிந்து படைத்தனனே''
(76)

முருகப் பெருமானை வணங்காத தலையும், தொழுதிடாத கைகளும் தமக்கேன் வந்து
வாய்த்தனஎனவும்
அருணகிரிநாதர் வினவியுள்ளார். அச்சுவையான பாடல்கள் பின்வருமாறு:

''நிணங்காட்டுங் கொட்டிலை விட்டொரு
வீடெய்தி நிற்கநிற்கும்
குணங்காட்டி யாண்ட குருதேசிகன்
நங்குறச்சிறுமான்
பணங் காட்டும் அல்குல் குருகும் குமரன்
பதாம்புயத்தை
வணங்காத் தலைவந்து இதெங்கே எனக்கிங்ஙன்
வாய்த்ததுவே''(42)

''கவியாற் கடல் அடைத்தோன் மருகோனை
கணபணக்கட்
செவியாற் பணியணி கோமான் மகனைத்
திறல்அரக்கர்
புவியார்ப் பெழத் தொட்ட போர்வேல் முருகனைப்
போற்றி அன்பால்
குவியாக் கரங்கள் வந்தெங்கே எனக்கிங்ஙன்
வாய்த்ததுவே'' (43)

முருகனின் திருவடிப் பேற்றினை அடைவதற்கு அவனை நாளும் பணிவதும், பாடுவதுமே அடியார்கள் செய்ய வேண்டிய அவசியமான கடமைகள் என்பதை அருணகிரிநாதர் தம் கந்தர் அலங்கார நூலில் தெளிவுபடுத்தியிருக்கிறார். அக்கடமையை இதுகாறும் ஆற்றாதார் உடனே தொடங்கி ஆற்றிட அவர்களை அன்புடனும் வேண்டுகிறார்.

''படிக்குந் திருப்புகழ் போற்றுவன் கூற்றுவன்
பாசத்தினால்
பிடிக்கும் பொழுது வந்து அஞ்சல் என்பாய் பெரும்
பாம்பினின்று
நடிக்கும் பிரான் மருகா கொடுஞ்சூரன் நடுங்க
வெற்பை
இடிக்குங் கலாபத் தனிமயி லேறும் இராவுத்தனே''
(50)

என்ற பாடலில் முருகனின் திருப்புகழை மறவாது நாளும் தாம் பாடிப்புகழ்வதை அருணகிரிநாதர் குறிப்பிட்டுள்ளார். அவ்வாறு பாடிப் புகழாத அன்பர்களை, எமன் பாசக் கயிற்றைக் கழுத்தில் இட்டு இறுக்கி இழுத்துச் செல்லத் தொடங்குவதற்கு முன்பே கந்தனின் அலங்காரக் கவிதைகளை பாடித் துதிக்கத் தொடங்குமாறும் அறிவுறுத்தியுள்ளார்.

''அழித்துப் பிறக்க வொட்டா அயில்வேலன்
கவியை அன்பால்
எழுத்துப் பிழையறக் கற்கின்றிலீர்! எரி
மூண்டதென்ன
விழித்துப் புகையெழப் பொங்கு வெங்கூற்றன்
விடும் கயிற்றால்
கழுத்திற் சுருக்கிட்டு இழுக்கும் அன்றோ
கவிகற்கின்றதே''
(2)

அருணகிரிநாதரின் அறவுரையை நாமும் நம் நெஞ்சில் இறுத்தி இப்பொழுதிலிருந்தே அவனுக்கு அலங்காரமான அவன் திருப்பாடல்களைப் பயிலத் தொடங்கிப் பயன்பெறுவோமாக.


காவிரி கண்ட கணபதி
கதை வடிவம் அருட்செல்வி
படம்: M.N.ராஜா
உலகநலன் கருதி சிவபெருமான் அகத்தியரைத் தென்னகம் அனுப்பினார்.
"எம்பெருமானே! பூலோகத்திற்கு ஒரு புண்ணிய நதியை என்மூலமாக வழங்கவும்.
சிவபெருமான் தமது சடாமுடியில் இருக்கும் காவிரியை எடுத்து ஒரு கமண்டலத்தில் அடைத்து அவரிடம் கொடுத்தார்.
காவிரியே! அகத்தியர் கைகாட்டும் இடத்தில் நீ பெருக்கெடுப்பாயாக.
அகத்தியர் காவிரி நதி அடங்கிய கமண்டலத்-துடன் தென்னகம் வந்து குடகு மலையில் தங்கி சிவபூஜை செய்து கொண்டிருந்தார்.
அதே நேரம் சூரபதுமனிடம் தோற்ற இந்திரன் சீர்காழிக்கு வந்து சிவபூஜை செய்துகொண்டிருந்தான்.
"ஓம் நமோ நாராயணா!"
நாரதரா! வாருங்கள், வாருங்கள், ம -யின்றி பயிர்களும், உயிர்களும் வாடி வருந்-துகின்றன சிவபூஜைக்கும் புஷ்பம் கிடைப்பதில்லை இதற்கொரு வழி சொல்லக் கூடாதா?
தேவேந்திரா! காவிரி நதியால் இந்நாடும் நின் நந்தவனமும் செழிக்கும். நீ கணபதியை வழிபட்டால் கணேசர் அருள் புரிவார்.


இந்திரன் கணபதி பூஜை செய்ய மகாகணபதி காட்சி தந்தருளினார்.
தேவேந்திரா,! உனக்கு என்ன வரம் வேண்டும்?
முழுமுதற் கடவுளே, அகத்தியரின் கமண்டலத்தைக் கவிழ்த்துக் காவிரி நதி பெருகியோட அருள் புரிய வேண்டும்.
விநாயகர் காகவடிவுடன் சென்று கமண்டலத்தின் மீது அமர, சிவபூஜையில் இருந்த அகத்தியர் கையை நீட்டிக் காகத்தை ஓட்டினார்.
கமண்டலத்தைக் கவிழ்த்து விட்டுப் பறந்தது காகம். அகத்தியர் கையை நீட்டியதைக் கொண்டு காவிரியும் பெருக்கெடுத்து ஓடத்தொடங்கியது.
காகம் சிறுவனாய் மாறி ஓட, அகத்தியரும் சிறுவனைக் குட்டுவதற்காகத் தம் கையை ஓங்கியவாறு ஓடினார்
அகத்தியரைச் சிறுது நேரம் அலைய வைத்த பின் விநாயகர் தம் மெய்யான கோலத்தைக் காட்டியருளினார்.
விநாயகரைக் குட்ட ஓங்கிய தம் தவறுணர்ந்த அகத்தியர் விநாயகரைத் தொழுது, தமது தலையில் ஓங்கிக் குட்டிக் கொண்டார்.
"தமிழகம் தழைக்க காவிரி என்றும் பெருகி ஓட யாமே அருள் புரிந்தோம்! உம்மைப் போல் எம்மை வழிபடுவோர் தம் தலையில் குட்டிக் கொண்டால் அவர்களின் அறியாமையும் அல்லல்களும் நீங்கி ஆனந்த வாழ்வு அடையவும் அருள் புரிவோம்."
சுரகுலாதிபன் தூய்மலர் நந்தனம்
பெருக வார்கடல் பெய்த வயிற்றினோன்
கரக நீரைக் கவிழ்த்த மதகரி
சரணம் நாளும் தலைக்கணி ஆக்குவோம்

# வள்ளலாரும் சிவானந்தரும்



புலவர் வ.ஞானப்பிரகாசம்

வையகத்தை வாழ்விக்க வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபில் தாமும் ஒருவராக வந்து அவதாரம் செய்தவர் நம் வள்ளற்பெருமான். வள்ளற்பெருமானுக்குப் பின்பு இத்தெய்வத் தமிழகத்தில் தோன்றி வடதேசம் சென்று வாழ்ந்து தொண்டாற்றி மறைந்த பெரியவர் சுவாமி சிவானந்தர் ஆவார்.

தமிழகத்தின் தென்கோடியில் திருநெல்வேலிக்கு அருகே பத்தமடை என்னும் சிற்றூரில், திருவாளர் வெங்கு ஐயருக்கும் பார்வதி அம்மாளுக்கும்அருமை மகனாக, 8-9-1887, பரணி நாளில் திரு அருளால் தரணி ஆளத்தோன்றியவர் சுவாமி சிவானந்தர் ஆவார். இவரது இயற்பெயர் குப்புசாமி ஆகும். மகாகவி பாரதியார் பிறந்த எட்டையபுரத்தில் இளமையில் கல்வி கற்ற இவர் பின்பு தஞ்சை மருத்துவக் கல்லூரியில் பயின்றார். தந்தையார் இறந்தமையாலும், தாயார் நோய்வாய்ப்பட்டமையாலும் இடையிலேயே படிப்பு தடைப்பட்டது.

மலேயாவிற்குச் சென்று மருத்துவப் பணியாற்றி பொருள் வளத்தோடும், அருள் வளத்தோடும் சிறந்த இவர், ஒரு நாடோடி சன்னியாசியால் பெற்ற கடப்பை சச்சிதானந்த சுவாமிகளின் ஜீவ பிரம்ம ஐக்யவேதாந்த ரகசியம் என்ற நூலைப் படித்து மன மாற்றம் பெற்றார். பாரதம் திரும்பினார். அனைத்தையும் துறந்தார். கங்கையாற்றில் ரிஷிகேசத்தில் 1-6-1924-ல் சுவாமி விசுவானந்தரால் சன்யாச தீட்சை பெற்றார். சுவாமி சிவானந்த சரசுவதி ஆனார்.

. பல ஆசிரமங்களில் இருந்து மன்பதைஉய்யத் தொண்டாற்றிய இவர் 1934-ல் ஆனந்த் குடீரம் அமைத்து பல்லாற்றானும் தொண்டாற்றி 14-7-1963-ஆம் நாள் உடலால் மறைந்தார்.

காலத்தால் வள்ளற்பெருமானுக்குப் பிற்பட்டவரான சுவாமி சிவானந்தர் தமக்கு முன்பே வாழ்ந்த அருளாளர்களின் அருளிச் செயல்களை விரும்பிக் கற்றவர். அவ்வகையில் நமது வள்ளற்பெருமானின் திருவாய் மொழியாம் திருவருட்பாவையும் விரும்பிக் கற்றவர் என அறிகிறோம். மேலும் வள்ளற்பெருமானின் வாழ்வு நெறிகளை மிகவும் பின்பற்றித் தொண்டாற்றியவர் எனவும் இவரது வரலாற்றால் அறிகிறோம்.

இந்நிலையில் இவரது வாழ்வு நிலைகளையும் வாழ்வு நெறிகளையும் ஒப்பிட்டு சில செய்திகளை இக்கட்டுரையில் காண்போம்.

இருபெரும் சான்றோர்களும் தமிழ் மண்ணிற் தோன்றிய அருளாளர்கள். இராமலிங்கஅடிகளார், தமிழ் மண்ணிற் பிறந்ததையும், தமிழில் பாடுவதையும் பெருமையாகவும், பெரும்பேறாகவும் கருதியவர். தம்மை தமிழ்மண்ணிற் பிறக்கவைத்தமைக்காகவும், தமிழ்மொழியில் பாடவைத்தமைக்காகவும் இறைவனுக்கு நன்றி சொன்னவர். அதற்குரிய அகச்சான்றுகள் இதோ.

''சுத்த சன்மார்க்க லட்சிய சத்திய ஞானக் கடவுளே! ஜீவர்களாற் சுணித்தறியப்படாத பெரிய உலகின் கண்ணே, பேராசை, பெருங்கோபம், பெருமோகம் பெருமிதம், பெருலோபம், பெருமயக்கம், பேரழுக்காறு, பேரகங்காரம், பெருவயிரம், பெருமடம் முதலிய பெருங்குற்றங்களே பெரும்பாலும் விளைத்தற்குரிய இவ்விடத்தே உறுப்பிற்குறைவுபடாத உயர் பிறப்பாகிய இம்மனிதப் பிறப்பில் என்னைப் பிறப்பித்தருளிய தேவரீரது பேரருட் பெருங்கருணைத் திறத்தை என்னென்று கருதி என்னென்று துதிப்பேன்.

இடம்பத்தையும் ஆரவாரத்தையும் பிரயாசத்தையும், பெருமறப்பையும், பொழுது போக்கையும் உண்டுபண்ணுகின்ற ஆரியம் முதலிய பாஷைகளில் எனக்கு ஆசை செல்ல ஒட்டாது பயிலுதற்கும் அறிதற்கும், இலேசுடையதாய்ப் பாடுதற்கும் துதித்தற்கும் மிகவும் இனிமையுடையதாய் சாகாக் கல்வியை இலேசில் அறிவிப்பதாய்த் திருவருள் வரத்தால் கிடைத்த தென் மொழி ஒன்றினிடத்தே மனம்பற்றச் செய்து அத்தென் மொழிகளால் பல்வகைத் தோத்திரப் பாட்டுகளை பாடுவித்தருளினீர்.''

-சமரச சுத்த சன்மார்க்க சத்தியப் பெரு விண்ணப்பம்.

வள்ளலார், திருவருளால் தமிழ் மட்டுமின்றி வடமொழியிலும் தெளிந்த ஞானம் உடையவர். அவர் காலத்தில் வாழ்ந்த சங்கராச்சாரிய சுவாமிகள் தமக்கு வடமொழி நூல் ஒன்றில் ஏற்பட்ட ஐயத்தைப் போக்கிக் கொள்ள வள்ளலாரிடம் அணுகும் அளவுக்கு வடமொழி ஞானம் பெற்று விளங்கியவர்.

சுந்தரர் முதலையுண்ட பிள்ளையை எழுப்பிய நிகழ்ச்சியைக் கொண்டு தமிழையும் வடமொழியையும் ஒப்பிட்டு, பொன்மலைக்கும் அணு நிலைக்கும் கூடப் பொருந்தாது எனக் குறிப்பிட்டவர் வள்ளலார்.

சங்கராச்சாரியார், 'வடமொழியே அனைத்து மொழிக்கும் தாய்மொழி எனக் குறிப்பிட்டபோது, அப்படியென்றால் தமிழ் தந்தை மொழி' எனக் குறிப்பிட்டவர் அவர்.

எனினும் வடமொழியை வெறுத்தவரல்லர்; மாறாக மதித்துப் போற்றியவர். செந்தமிழ்ப்

பாமாலைகள் பல பாடினாலும் வடமொழியையும் கலந்து சில பாமாலைகள் பாடிப் போற்றியவர்.

வள்ளலார் 1867-ல் சன்மார்க்க போதினி என்னும் பாடசாலை ஒன்றை ஏற்படுத்தினார். இப்பாடசாலை சிறுவர் முதல் முதியோர்வரை அனைவர்க்கும் கல்வி கற்பிப்பதாக அமைந்தது, இப்பாடசாலையில் தமிழ், ஆரியம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளும் கற்பிக்கப்பட்டன.

வடமொழியும் தமிழோடு ஒருபுடை ஒத்துத் தத்துவ நூல்கள் பலவற்றை தன்னகத்தேகொண்டு விளங்குவதால் அதனைக் கற்பது அவசியமாகிறது. அன்றைய அரசின் ஆட்சி மொழியாகவும், உலக மொழியாகவும் விளங்கும் ஆங்கிலத்தையும் உடன் கற்பிக்க ஏற்பாடு செய்தார்.

எனவே உலகியலிலும் அருளியலிலும் சிறக்க தமிழோடு பிறமொழிகளையும் கற்கவேண்டுமென் பது வள்ளலார் கருத்து.

சுவாமி சிவானந்தர் தமிழ்மண்ணில்தோன்றி யவரே ஆனாலும் துறவறம் பூண்டு வடநாடு சென்று தங்கிவிட்டார். வள்ளற்பெருமானை அன்பர்கள் பலரும் 'அவர் மட்டும் தமிழ் நாட்டில் தோன்றாமல் வடநாட்டில் தோன்றி யிருப்பாரேயானால் உலகெங்கும் வெகு சீக்கிரமே தெரிந்து கொள்ளப்பட்டிருப்பார்' எனக் குறிப் பிடக் காண்கிறோம். இக்காரணம் கொண்டே சிவானந்தர் வடநாட்டிற் சென்று தங்கிவிட்டார் போலும்.

தமிழ் சிறந்த மொழியாயினும் ஆங்கிலமே உலக மொழியாக விளங்குகிறது. ஆங்கிலத்தில் கருத்தை வெளியிட்டால்தான் உடனே உலகம் முழுவதும் பரவமுடியும் என்பதை உணர்ந்தே சிவானந்தர் தம் கருத்துகளை ஆங்கிலத்தில் நூல் களாக வெளியிட்டார். அதனால்தான் வெகு விரைவிலேயே அமெரிக்கா, ஐரோப்பா, ஆப்பிரிக்கா ஆஸ்திரேலியா, ஜப்பான் போன்ற பல்வேறு நாடு களிலும் உள்ள இலட்சக்கணக்கானவர்கள் சுவாமி சிவானந்தரை அறிந்து கொள்ள வாய்ப்பாயிற்று.

சுவாமி சிவானந்தர் தம்மிடம் வரும் அன்பர் எம்மொழியினரோ அம்மொழியிலே அவரை வர வேற்பார். தமிழ், ஆங்கிலம், இந்தி, மலாய் ஜெர்மனி, பிரெஞ்சு முதலான பலமொழிகளிலும் அவர் அன்பர்களிடம் பேசி தம் எண்ணங்களை விளக்குவார். அங்ஙனமே சிவானந்தரின் கீர்த் தனைகள், பலமொழிகளும் கலந்த ஒரு அறிவியல் மொழியாக அமைந்திருக்கும் என்பதையும் அறி கிறோம்.

வள்ளற்பெருமான் தமக்கு முன்னே வாழ்ந்த பெரியவர்களினும் ஒருபடி மேம்பட்டு, தமக்கெனத் தனி இயக்கம் கண்டவர். தம் கொள்கைகளை வலியுறுத்த சன்மார்க்க சங்கத்தையும், தொண்டு செய்ய தர்மச்சாலையையும் வழிபாட்டுக்கென சத்திய ஞானசபையையும் கண்டவர். அவ்வகை யிலேயே சுவாமி சிவானந்தரின் வாழ்வும் அமைந் துள்ளது.

வள்ளலார் தமது கொள்கைகளைப் பின்பற்ற வும், உலகெங்கும் பரப்பவும் வேண்டி 1865-ஆம் ஆண்டில் சன்மார்க்க சங்கத்தை அமைத்தார். இதற்குச் 'சமரச வேத சன்மார்க்க சங்கம்' என முதலில் பெயரிட்டார். இது 'சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்' என்று பிற்காலத்தில் வள்ளலாராலேயே பெயர் மாற்றம் பெற்றது.

## தேவாரப் பதிகங்கள்
## —சில செய்திகள்

திருஞானசம்பந்தர் அருளிய பாடல்கள் 16,000. ஆனால் கிடைக்கப் பெற்றவை 4159 பாடல்கள்.

திருநாவுக்கரசு நாயனார் அருளிய பாடல்கள் 49,000. ஆனால் கிடைக்கப் பெற்றவை 3045 பாடல்கள்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளியவை 38000 பாடல்கள். ஆனால் கிடைக்கப்பெற்றவை 1026 பாடல்கள். ''காலத்திற்குத் தேவைப்பட்ட பாடல் கள் தவிர மற்றவை அழிக்கப்பட்டன'' என்பது கூத்தபிரான் அருள்வாக்கு.

இரண்டாம் குலோத்துங்கன் (கி.பி. 1146-1173) தன் ஆட்சிக்காலத்தில் திருவாமாத்தூர் சிவாலயத்தில் தேவாரம் விண்ணப்பம் செய்ய பார்வையற்ற பதினாறு ஓதுவார்களை நியமித் தான். அவர்களுக்கு வழிகாட்டவும், இருவரை நியமித்தான். அவர்கள் ''கண்காட்டுவார்'' எனக் குறிப்பிடப்படுகின்றனர்.

திருப்பதிகம் பாடிவந்த பார்வையற்றோர் பதினாறு பேர்களுக்கும், கண்காட்டுவார் இரு வருக்கும் சேர்த்துப் பதினெட்டுப் பேர்களுக்கு நாள் ஒன்றுக்கு பதக்கு நெல் வீதம் பதினெட்டுப் பேர்களுக்கு மூன்று கலம் நெல் அளிக்கப் பெற் றது. (ஒரு பதக்கு- இரண்டு மரக்கால். பன்னிரண்டு மரக்கால் - ஒரு கலம்) முந்நூற்று அறுபது நாட் களுக்குப் பதினெட்டுப் பேர்களுக்கு 1080 கலம் நெல் அளிக்கப்பட்டடுள்ளது.

இராஜராஜன் தஞ்சைப் பெரிய கோயிலில் பதிகம் பாட 48 ஓதுவார்களை நியமித்து அவர் களுக்குத் துணையாக உடுக்கை வாசிக்கவும் கொட்டி மத்தளம் வாசிக்கவும் இருவரை நிய மித்து அவ்வைம் பதின்மருக்கும் நாளொன்றுக்கு முக்குறுணி நெல் அளித்து வந்துள்ளான்.

---

சுவாமி சிவானந்தரும் மக்கள் அனைவரும், தெய்வநெறியில் பங்கு பெற்று உய்வதற்காக 1929 ஏப்ரல் 16ஆம் நாள் தெய்வ நெறிக்கழகம் என்ற அமைப்பை ஏற்படுத்திச் செயல்பட்டுள்ளார். பாரதத்தில் மட்டுமல்லாமல் அயல்நாடுகளிலும் தெய்வ நெறிக் கழகத்தின் கிளைகள் ஆங்காங்கே எழுந்து செயல்பட்டன.

''தெய்வீக வாழ்க்கை என்பது ஒரு புதிய சமயம் அன்று. அவரவர் வழிப்படி அவரவர் சமயத்தில் நம்பிக்கையை உறுதிப்படுத்தி பிற சமயங்களிடம் சமரச மனப்பான்மையை ஏற் படுத்துவதே அதன் நோக்கமாகும்.'' என்று தமது இயக்கத்தின் அடிப்படை நோக்கத்தைச் சுவாமி சிவானந்தர் தெளிவுபடுத்தினார்.

மேலும் சுவாமி சிவானந்தர், தாம் இருந்து தொண்டு செய்ய ஆனந்தகுடீரத்தையும், வழி பாட்டுக்கென விசுவநாதர் திருக்கோவிலையும் ஏற்படுத்திக் கொண்டார்கள்.

**மாதவெளியீடு**:—வள்ளலார் தமது சன் மார்க்கக் கொள்கைகளைப் பரப்புவதற்காகச் சன் மார்க்க விவேக விருத்தி' என்னும் மாத இதழ் ஒன்றை 1867-ல் தொடங்கினார். நூறு ஆண்டு களுக்கு முன்பு பத்திரிகை தோன்றத் தொடங்கிய அந்தக் காலத்திலேயே அடிகளாரும் ஒரு இதழைத் தொடங்கினார் என்பது மிகவும் மகிழ்வு தரும் செய்தியாகும். இந்த இதழுக்கு அடிகளே முதல் சந்தாதாரராக ரூ. 1 செலுத்திக் கையொப்பமிட் டுள்ளார். ஜமீன்தாரிலிருந்து பரதேசி வரை இதற்குச் சந்தாதாரராகக் கையொப்பமிட்டுள்ள னர். சந்தாதாரர் 49 பேருள் ஒருவராக பரங்கிப் பேட்டை காதர் சாயபு என்ற முசுலீம் அன்பர் ஒருவரும் ஓரணா சந்தா செலுத்திக் கையொப்ப மிட்டுள்ளார். இவ்விதழுக்காக அப்போது செய் யப்பட்டுள்ள விளம்பரம் இங்கு அறிந்து மகிழ்வ தற்குரியது.

சற்குருவே நம.
சன்மார்க்க விவேக விருத்தி விளம்பரம்

அறிவுடைய நண்பர்க்கு அன்போடு வந்தனஞ் செய்து அறிவிக்கை. நண்பர்களே!

உலகில் வழங்கும் பிறப்புகளுள் உயர் பிறப் பாகிய மனிதப் பிறப்பைப் பெற்றுக் கொண்ட நாமனைவரும் அறம் பொருள் இன்பம்வீடுஎன்னும் நால்வகைப் பொருளின் அனுபவங்களைக் கால முள்ள போதே அறிந்து அனுபவித்தல் வேண்டும். அங்ஙனமறிந்து அனுபவிப்பதற்குச் சன்மார்க்க விவேக விருத்தியே சாதனமாதலின் அதனை யடைதற்குத் தக்க நன்முயற்சிக்கோர் முன்னிலை யாகச் சன்மார்க்க விவேக விருத்தி என்னும் பத்திரிகை ஒன்றை வழங்குவிக்கும் நிமித்தம் இதனடியில் தனித்தனி நம்மால் இயன்ற அளவில் மாதந்தோறும் பொருளுதவி செய்வதாகக் கையொப்பமிட்டு மேற்குறித்த வண்ணம் நமக்கும் பிறர்க்கும் பயன்படும்படி வழங்குவிப்போமாக.

இங்ஙனம்
சன்மார்க்க சங்கத்தார்.

இத்திங்கள் இதழ் வள்ளலாரால் எவ்வளவு காலம் நடத்தப்பெற்றது எனத் தெரியவில்லை.

---


திருக்கோயிலுக்கு

## ஆயுள்சந்தா செலுத்துக

அருட்பிரகாச வள்ளலாரும்,
சுவாமி சிவானந்தரும்
**ஆன்மீக இதழ்களின் அவசியத்தை எப்படி வற்புறுத்தியுள்ளனர் என்று பார்த்தீர்களா?**

இன்றே அறநிலையத்துறை வெளியீடான
**" திருக்கோயில் "**
இதழுக்கு நீங்கள் உறுப்பினராக வேண்டுகிறோம்.


---

## அதிகாலையில் எழுக

## தினம் தோறும் தொழுக

அதிகாலை 4.30 மணி முதல் 6 மணிவரை பிரம்மமூகூர்த்தமென்னும் புண்ணிய காலமாகும். எனவே நாம் ஒவ்வொருவரும் 4.30 மணிக்கு முன் எழுந்திருத்தல் அவசியம். எழும்போது நம் இஷ்ட மூர்த்தியின் நாமத்தையோ அல்லது துதிப்பாடல் ஒன்றையோ கூறிக்கொண்டே எழல் வேண்டும். இது நம்மை இறையருளுக்குப் பாத்திரமாக்கும் என்பது உறுதி.

துயிலெழுந்ததும் காலைக் கடன்களை முடிக்க வேண்டும். அதிகாலையில் நீராடுதல் நம் உடல் ஆரோக்கியத்திற்கும் உள நலத்திற்கும் மிகவும் உதவுவதேயாகும். எனவே அதிகாலையில் குளிப் பது மிகவும் நல்லது. வசதியின்றேல் பல்துலக்குதல் போன்ற மற்ற காலைக்கடன்களை முடித்துபின்னர் மற்ற வேலைகளையும் செய்துவிட்டு குளித்தால் போதும்.

(பின் சமயச் சின்னங்கள் விபூதி, சந்தனம், குங்குமம்) அணிய வேண்டும். பின் வீட்டில் தனி யாக சுத்தமான இடத்தில் வைக்கப்பட்டிருக்கும் தெய்வத் திருவுருவின் முன்னர் நின்று சில துதிப் பாடல்கள் பாடவேண்டும். வசதிபட்டால் விளக் கேற்றி ஊதுபத்திக் கொளுத்தி வைக்கவும்.

---

வள்ளலாரைப் போலவே சுவாமி சிவானந்த ரும் தெய்வ நெறிக் கழகத்தின் மாத வெளியீடாக "The Divine Life" என்ற இதழை 1938-ல் தோற்று வித்தார். இம்முதல் இதழுக்கு சுவாமி சிவானந் தர் அளித்த வாழ்த்துச் செய்தி அறிந்து மகிழ் தற்குரியது.

"இன்று உலகில் ஒரு சில ஆன்மீகப் பத்திரிகை களே உள்ளன. பல உயர்தரமான பத்திரிகைகள் இன்று வெளிவர வேண்டும். அப்பொழுதுதான் எங்கும் ஆன்மீக கருத்துக்களைப் பரப்ப முடியும். மக்கள் நல்ல கருத்துக்காகவும் மகாத்மாக்களின் சத்சங்கத்துக்காகவும் காத்து நிற்கின்றனர். பணம், பதவிக்குப் பின்னால் ஓடி ஓடி இவ்வுலகம்களைத்து விட்டது. எங்கும் எதிலும் மக்கள் அமைதியைக் காணாது திகைக்கின்றனர். அவர்கள் மகாத்மாக் களை நாடி ஓடிவருகின்றனர். பல மேனாட்ட வர்கள் குருமார்களை நாடித்தேடி பாரதத்துக்கு வந்தவண்ணமிருக்கின்றனர். முனிவர்கள், ரிஷிகள் மகான்கள், அனைவருடையவும் ஆசீர்வாதம் உங்கள் மீது மலர்வதாக."

இவ்வாழ்த்துச் செய்தி ஆன்மீக இதழ்களின் இன்றியமையாமையை நன்கு விளக்குகிறது. இவ் விதழை சிவானந்தர் பலருக்கும் இலவசமாக வழங் கியதன் விளைவாக நஷ்டம் ஏற்பட்டது. சரியான நிதி நிலைமை ஏற்படும் வரை இதழை நிறுத்தி வைக்கலாமா என்று ஆலோசனை தந்த அன்ப ரிடம் "எவ்வளவு நஷ்டமடைந்தாலும் ஆரம்பித்த ஒரு பத்திரிகையை நிறுத்த நான் விரும்பமாட் டேன். உண்மையில் மேலும் சிலவற்றை ஆரம் பிக்க நான் உத்தேசித்துள்ளேன். ஆரம்பத்தில் கொஞ்சம் நஷ்டம் வந்தாலும் அதைப் பொருட் படுத்தக்கூடாது. பொது மக்களுக்கு நாம் எவ்

வளவு அறிவை அளிக்கிறோம் என்பதுதான் முக்கியம்'' எனச் சுவாமி சிவானந்தர் வலியுறுத்தினார்.

சுவாமி சிவானந்தர் ஒன்றல்ல ; ஐந்து ஆன்மீக இதழ்களை நடத்தியுள்ளார்கள். இதழ்களின் ஞானத்தொண்டு பெருகிய நிலையில் 1951 செப்டம்பர் 20-ல் ஆசிரமத்திற்கே சொந்தமாக ஒரு அச்சகமும் உருவாகி படிப்படியாக வளர்ந்து தொண்டாற்றியுள்ளது. வள்ளற் பெருமான் இறைவனை இடைவிடாது தோத்திரம் செய்து பாடி மகிழ்ந்து உள்ளம் உருகியவர்.

''பழம்பிழி மதுரப்பாட்டல எனினும்

பத்தரும் பித்தரும் பிதற்றும்

கிழம்பெறும் பாட்டும் கேட்பது உன் உள்ளக்

கிளர்ச்சி என்றறிந்த நாள் முதலாய்

வழங்குநின் புகழே பாடுகின்றேன்''

எனப் பாடியவர் வள்ளலார். சித்திவளாகத் திருமாளிகையில் 22-10-1873 ஸ்ரீமுக ஆண்டு ஐப்பசி 7-ல் கொடிகட்டிச் செய்த பேருபதேசத்தில் நாம் எல்லோரும் நல்ல விசாரணையில் இருக்க வேண்டும் என மொழிவார். ''ஜலத்தில் இருக்கின்ற பாசியை நீக்குவது போல நமது ஆன்மாவைத் தெரிய வொட்டாமல் மூடியிருக்கின்ற பச்சைத் திரையாகிய ராகாதிகளை விசார அதிஉஷ்ணத்தாலல்லாது மற்ற உஷ்ணங்களால் நீக்க முடியாது. அந்த உஷ்ணம் யோகியினுடைய அனுபவத்தில் தெரியும். அதை மனுஷ்ய தரத்தில்உண்டுபண்ணுவதற்குத் தெரியாது. அந்த விசாரத்தைவிட ஆண்டவரை ஸ்தோத்திரம் செய்கின்றதிலும் தெய்வத்தை நினைக்கின்றதிலும் அதிக உஷ்ணம் உண்டாகும். யோகிகள் வனம், மலை, முழை முதலியவற்றிற்குப் போய், நூறு, ஆயிரம் முதலிய வருஷகாலம் தவஞ் செய்து இவ்வுஷ்ணத்தை உண்டு பண்ணிக் கொள்கிறார்கள். இப்படித் தவஞ்செய்து உஷ்ணத்தை உண்டு பண்ணிக்கொள்கிறதைப் பார்க்கிலும தெய்வத்தை ஸ்தோத்திரம் செய்கின்றதிலும் நினைக்கின்றதிலும் இதைவிடக் கோடிப் பங்கு பத்து கோடிப்பங்கு அதிகமாக உஷ்ணம் உண்டுபண்ணிக் கொள்ளலாம்.'' எனத் தோத்திரம் செய்வதன் பயனை வள்ளலார் விளக்குவார்.

இவ்வாறு தோத்திரம் செய்யும் பாடல்களையும் இறைவன் உள்ளிருந்து தம்மைப் பாடுவிப்பதாகவும் மொழிவார்.

''நான் உரைக்கும் வார்த்தை யெல்லாம் நாயகன்
தன்வார்த்தை
வான் கொடுத்த மணிமன்றில்திரு நடனம் புரியும்
வள்ளல் எலாம் வல்லவர் நன்மலர் எடுத்து என்
உளத்தே
நான் கொடுக்கநான் வாங்கித் தொடுக்கின்றேன்''

என்பன அவர் திருவாக்குகள்.

இவ்வண்ணம் வள்ளலார் இறைவனைத்தோத்திரம் செய்த பாக்களும் தாம் பெற்ற பேறுகளை எடுத்து மொழிகின்ற பாக்களும் உலகோர்க்கு உய்வகையாக அறிவுரை கூறும் பாக்களுமே திருவருட்பா முழுமையுமாகும். வள்ளலாரின் திருவருட்பாக்களும், மனுமுறை கண்ட வாசகம், சீவகாருண்ய ஒழுக்கம், நித்திய கருமவிதி, சன்மார்க்க விண்ணப்பங்கள், அன்பர்களுக்கு எழுதிய மடல்கள் முதலிய உரைநடைப்பகுதிகளும்நமக்குக் கருத்துக் கருவூலமாக, கைவிளக்காக நின்று வழிகாட்டுகின்றன.

சுவாமி சிவானந்தரும் ஆன்மீகப் பயிற்சிகளாலும், கடும்தவத்தாலும், தியானத்தாலும் தமக்குள்ளிலிருந்து ஆன்மஞானம் பீறீட்டெழுந்த போது அவற்றை எழுதித் தொகுத்து வைத்தார்.

''ஏன்உரைத்தேன் இரக்கத்தால்
எடுத்துரைத்தேன்
யான் அடையும் சுகத்தினை நீர்தான் அடைதல்
குறித்தே''

எனும் வள்ளலார் வாக்கிற்கேற்ப, சுவாமி சிவானந்தர் தம் ஞானக்கருத்துகளையெல்லாம் கவிதை நாடகம், உரைநடை, கடிதம், கட்டுரை, கதை, சொற்பொழிவு, கீர்த்தனம் போன்றவைகளாக வெளியிட்டு மக்களுக்குப் பயன்படுமாறு செய்தார். தம்வாழ்நாள் முழுமையும் 1929-லிருந்து 1963 வரை 200-க்கும் மேற்பட்ட நூல்களை அவர் வெளியிட்டுள்ளார். வள்ளலாரை விட சிவானந்தர் காலத்தாற் பிற்பட்டவர் என்பதால் எழுத்துத் துறையிலும், வெளியீட்டுத் துறையிலும், மேலும் சிறப்பாகச் செயல்பட முடிந்துள்ளது. வள்ளலாரின் கருத்துகளால் இன்று உலகம் ஈர்க்கப்பட்டுள்ளது போலவே சுவாமி சிவானந்தரின் கருத்துகளாலும் ஈர்க்கப்பட்டு உலகம் முழுவதும் பல பெரியவர்கள் தொண்டாற்றி வருகின்றனர்.

வள்ளலார் தம் பாடல்களை உலகிற்குவெளிப் படுத்த வேண்டும் என முதலில் விரும்பினாரல்லர். ஆனால் அவரின் அன்பர்கள், புதுவை வேலு அவர்கள், சிவானந்தபுரம் செல்வராயர் அவர்கள், இறுக்கம் இரத்தினம் அவர்கள் ஆகிய மூவரின் முயற்சியாலேயே திருவருட்பா முதல் நான்கு திருமுறைகள் ஒரு தொகுதியாக 1867-ல் வெளியிடப் பெற்றது. இவர்கள் வள்ளலாரின் சென்னை நண்பர்கள். அன்பர்களில் ஒருவரான இறுக்கம் இரத்தினம் அவர்கள் 1860-லிருந்து முயன்று வள்ளளாருக்குப் பல மடல் எழுதி அடிகளாரின்பாடல்கள் தம் கைக்குக் கிடைக்கும் வரை ஒரு வேளையே விரதம் இருந்து, பெருமானின் இசைவால் பாடல்களைப் பெற்று அதன்பின்பே பெருமானின் முதல் மாணாக்கர் தொழுவூர் வேலாயுதம் அவர்களால் 1867 பிப்ரவரியில் வெளியிடப் பெற்றது.

சுவாமி சிவானந்தர் தம் கருத்துக்கள் எங்கும் பரவவேண்டும் என விரும்பியவர். தாமே விரும்பி பல இதழ்களுக்குக் கட்டுரை அனுப்பியவர். ஆனால் நூல்கள் வெளியீடு எனும்போது சென்னையில் உள்ள கணேஷ் கம்பெனியார், சுவாமி சிவானந்தரின் முதல் நூலை Practise of Yoga Vol. I என்ற நூலை 1929-ல் வெளியிட்டனர். இந்நிறுவனத், தாரே, Practise of Vedanda, A trips to Kailasa ஆகிய நூல்களையும் வெளியிட்டனர்.

ஆக வள்ளலார், சிவானந்தர் ஆகிய இருவரின் நூல்களையும் முதன் முதலில் வெளியிட்டவர் சென்னை நகரத்தாரே எனும் செய்தி இங்கு நினைதற்குரியது.

— — — — — — —

# முழுமுதற் கடவுள் பிள்ளையார்



பேராசிரியர்
த. அகரமுதல்வன்

(முன்தொடர்ச்சி)

பிள்ளையாரின் உருவம் உணர்த்தும் தத்துவங்களின் அருமையை உணரும்போது நம் ஆன்றோரின் ஞானத்தைக் கண்டு வியக்கிறோம். பிள்ளையார் விலங்கு, பூதம், மனிதர், தேவர் ஆகிய நான்கு கூறுகளின் கூட்டாலாகிய விநோத தெய்வ வடிவினர். இந்நான்கு அம்சங்களின் சேர்க்கை, இவர் இந்நான்கையும் தம்முள் அடக்கி, இந்நான்கிற்கும் தெய்வமாகத் திகழுகிறார் என்பதைக் காட்டும்.

இவருடைய கொம்புடைய பகுதிஆண் தன்மையையும், கொம்பு குறைந்த பகுதி பெண் தன்மையையும், யானைத் தலை அஃறிணையையும் தெய்வ சரீரம் உயர்திணையையும் உணர்த்துகின்றன. ஆதலின் இவர் ஆணாய், பெண்ணாய், அஃறிணை யாய், உயர்திணையாய் யாதுமாய்; விலங்காய், பூதமாய், மக்களாய், தேவராய், யாவருமாய், விளங்கும் பரம்பொருள் என்பதை அறிகிறோம்.

**ஆனைமுகம்:** பிரணவ நாதத்தின் எழுத்து வடிவம் ஓம். அது நுண்மையானது. அதனைச் சித்திரமாக்கினால் அது யானைத்தலையை ஒக்கும். ஆதலின் பிரணவப் பொருளாம் பிள்ளையாரை யானைத் தலையோடு வணங்கினர்.

மேலும் யானைக்கும் இறைவனுக்கும் பல நெருங்கிய ஒற்றுமைகள் உள்ளன. அவைகளை வைணவ உரையாசிரியரான பெரியவாச்சான் அவர்கள் சிறப்பாக எடுத்துக் காட்டுகிறார். அவர் யானைக்கும் திருமாலுக்கும் இடையே காட்டிய ஒற்றுமைகள் ஆனைமுகத்தவனுக்கும் சிறப்பாகப் பொருந்தும். அவைகளுள் சிலவற்றைக் காண்போம்.

**ஆனையும் ஆனைமுகத்தவனும்:** யானை தன்னிடம் அன்புடைய பாகனைத் தன் தலைமீது ஏற்றி வைத்துக்கொண்டாடும். ஆனை முகத்தவனும் அப்படியே. மத்தகத்தின் மேல் ஏற இயலாத பாகனுக்குத் தன் காலை மடக்கிப் படிபோல் ஆக்கித் தன் மேலேற வழி செய்யும். அப்படியும் ஏற இயலாதவனுக்குத் தன் பெரிய திருமேனியைத் தாழ்த்தி உதவும். அப்படியே உயர் பரம்பொருளாகிய ஆனைமுகன் தன் பக்தன் மேலேறத் தான் எளியவனாய்த் தாழ்கிறான். யானையின் காலைக்கொண்டே அதன்மேல் ஏறுவது போன்று ஆனைமுகத்தவனின் காலைப் பற்றியே அவனருளைப் பெறமுடியும்.

சிங்கம், புலி முதலிய விலங்குகளைக் கண்டால் யாரும் அஞ்சுவர். ஆனால் அவற்றினும் ஆற்றல் மிக்க யானையைக் கண்டால் குழந்தையும் மகிழும். காணத் திகட்டாத பிராணி யானை. ஆனை முகத்தவனையும் அனைவரும் விரும்புவர்; அவனையும் பார்க்கப் பார்க்க ஆவல் மிகும். யானையை ஒரு முறை பார்த்தாலும் போதும்; எப்போதும் மனத்தில் இருக்கும். ஆனை முகத்தவன் வடிவமும் அப்படியே.

யானை தன்னைக் கட்டும் சங்கிலியைத் தானே எடுத்து வந்து பாகனிடம் தரும். ஆடோ, மாடோ அவ்வாறு செய்யாது, ஆனைமுகத்தவனும் தன்னைத் தளைப்படுத்தும் கயிற்றைத் (பாசத்தைத்) தானே தரித்துள்ளான். அவ்வன்புக் கயிறு கொண்டு பக்தர்கள் அவனைத் தம்மோடு பிணித்துக் கொள்ளலாம். அன்பெனும் பிடிக்குள் ஆனை முகத்தவன் அடங்குவான்.

யானையை நீராட்டினால் அடுத்த நிமிடமே மண்ணை வாரித் தன் தலையில் போட்டுக் கொள்ளும். அதேபோல் தூயவனாகிய ஆனைமுகன் அழுக்குடைய நம்மோடு சேருகிறான். அழுக்காகிய சாணத்திலும் மண்ணிலும் நமக்காக உருவெடுக்கிறான். அழுக்குருண்டை என்றும் அழைக்கப்படுகிறான்.

**தாழ் செவிகள்:** செவி மடல் பெரிதாகப் பெற்றிருப்பவர் கேள்விச் செல்வம் மிக்கவர். அகன்ற செவிமடல் ஒலி அலைகளை மடக்கி உள்ளே அனுப்ப உதவும். செவி மந்தமானவர் காது மடலோடு கையினைச் சேர்த்து உற்றுக் கேட்பர். அகன்ற மடல்போல் விரிந்த கை அவருக்குப் பயன்படுகிறது. தாழ்செவியனான ஆனைமுகனுக்கும் முறம்போன்ற பெரிய செவிமடல்கள் இருப்பது அவன் கேள்விச் செல்வம் நிறைந்த ஞானமயமானவன் என்பதைக் காட்டுகிறது.

அவ்விரு செவிகளும் எப்போதும் அசைந்து கொண்டே இருக்கும். யானையின் செவிகள் அசைவதேன்? கண்ணில் தூசு விழாமல் தடுக்கவும், முகத்தில் வெப்பத் தாக்குதலைத் தவிர்க்கவும் அன்றோ! ஆனைமுகத்தான் கண்ணொத்த பக்தர்களைக் காப்பவன். அவர்கள்பால் வினை வெப்பம் சாராமல் தவிர்ப்பவன் என்பதை அசையும் அந்தச் செவிகள் உணர்த்துகின்றன.

மனிதன் நிறைய கேட்கவேண்டும்; குறைவாக பேசவேண்டும், அதுவே அறிவு வளர்ச்சிக்கு வழி, விநாயகரின் அகன்ற காதுகள்நிறைய கேட்கவேண்டும் என்பதையும் வாயை மறைத்திருக்கும் கை (துதிக்கை) குறைவாகப் பேச வேண்டும் என்பதையும், அப்படி அருள் மொழிகளைக் கேட்குங்கால் கையினால் வாயைப் பொத்தி பணிந்து கேட்க வேண்டும் என்பதையும் நினைவூட்டுகின்றன. 'பேசுவதில் ஜாக்கிரதையைக் காட்டவேண்டும் என்பதைக் குறிக்கிறது.

**தந்தங்கள்:** தந்தச் சிறப்புடையது யானை ஒன்றே. அதனால் தந்தி என்றே அதற்கொரு பெயர். ஆனை முகனின் வலது கொம்பு ஒடிந்த கொம்பு. தானே ஒடிந்ததல்ல. அதனைத் தானே ஒடித்துப் பாரதம் எழுதினார் விநாயகர். அதனைப் பயன்படுத்தியே கஜமுகாசுரனையும் அழித்தான். பேனாவும் வாளுமே சிறந்த ஆயுதங்கள். The Pen

is mightier than the sword என்னும் ஆங்கிலக்கருத்தினை அறிவோம். விநாயகருக்கு ஒடிந்த தந்தமே பேனாவும் வாளுமாகப் பயன்பட்டிருக்கிறது. வாளினால் அழித்தார். பேனாவால் என்றும் அழியாத பாரதத்தை ஆக்கினார். வாளினும் பேனா வலிது. என்றும் நிலைத்திருக்கும் காரியத்தைச் செய்வது-உலகோரின் எண்ணங்களை மாற்றம் செய்து மறுமலர்ச்சி உண்டாக்குவது என்று காட்டியருளினார்.



'விநாயகர் கல்விமீது-கடமைமீது கொண்ட ஆர்வத்தைப் பாருங்கள். எழுத்தாணி உடைந்தவுடன் தனக்கு அழகும் சிறப்பும் அளிக்கும் தந்தத்தையே உடைத்தெடுத்து எழுத்தாணி ஆக்கிக் கொண்டார். பாரதப் பிரசவம் விநாயகரின் பல்வலியில் தொடர்ந்தது. உடல் வலியிலேயே மிகத் துன்பமானது பல்வலிதான். எவரேனும் தம் பல்லைத் தாமே உடைத்துக் கொள்வாரோ? பல் போனால் சொல் போகும்; அழகும் போய்விடும். அதிலும் ஆனைக்குச் சிறப்பு அந்த அழகிய தந்தங்கள்தாமே. அத்துணைச் சிறந்த தந்தத்தையே எழுத்துக்காக ஈந்தவர் கணேசர். ஒரு செயலைச் செய்கிறபோது தடை ஏற்படின் அதற்காக மனந் தளரக்கூடாது; எந்த இழப்பையும் பொருட்படுத்தாது காரியத்தைத் தொடர்ந்து முடிக்கவேண்டும். விநாயகர் செய்த தியாகத்தால் எழுத்து பிறந்தது இதிகாசம் பிறந்தது. தியாகத்தாலேயே ஒன்றை உருவாக்க முடியும். ஒப்பற்ற தியாகத்தைச் செய்துவிட்டு அவர் ஒற்றைக்கொம்பனாக ஆகிவிட்டார்.

**முக்கண்கள்:** சிவ குடும்பத்தைச் சேர்ந்த அனைத்துத் தெய்வங்களுக்குமே முக்கண்கள்தாம். இவை சூரிய, சந்திர, அக்கினியைக் குறிப்பன. பிள்ளையாரின் மூன்று கண்களும் அளவால் சிறிய ஆனைக் கண்கள். ஒருவருக்குக் கண்கள் சிறியதாயிருப்பின் அவர் உற்று நோக்கவும் தொலை நோக்கவும் வல்லவராயிருப்பார். நல்ல நினைவாற்றலும் அவருக்கு இருக்கும். கணாதிபனுக்கு எவ்வுலகும் காணும் நெடிய நோக்கும், எதனையும் உள்ளும்-புறமும் அறியும் கூர்த்தமெய்ஞான நோக்கும், அன்பர்களை நினைவில் வைத்து அருள் பாலிக்கும் நினைவாற்றலும் உண்டென்பதை அச் சிறிய கண்கள் உணர்த்துகின்றன.

''நெற்றிக்கண் பரஞானத்தையும் மற்ற இரு கண்கள் இக ஞானத்தையும் சுட்டுவன. இகம், பரம் இரண்டையும் அறிதலே நல்லறிவு. ஞானக் களஞ்சியமாகிய விநாயகரரிடத்து இத்தகைய நிறைஞானம் பொலிந்துள்ளது என்பார் சுவாமி சித்பவானந்தர்.

**மும்மதம்:** ஆனைக்கு மும்மதப் ஒழுகும். ஆனைமுகத்தவனுக்குமா? ஆமாம். இவருக்கு ஒழுகும் மும்மதங்கள் ஞானமதங்கள். அவை உவமையிலாக் கலைஞானம்; உணர்வாகிய மெய் ஞானம்; திருப்பெருகு சிவஞானம். அதனைக் கருணை எனும் வெள்ளமதம்' என்று திருவிளையாடற் புராணம் குறிக்கிறது. அவை 'இச்சாசக்தி' கிரியா 'சக்தி' ஞானசக்தி என்பார் திருமுருக கிருபானந்த வாரியார்.

**ஐங்கரம்:** தெய்வ வடிவங்களின் தத்துவ உண்மைகள் உணர்வார்க்கு மெய் சிலிர்க்க வைப்பது. தியானத்தில் கடவுளைத் தரிசித்த ஆன்றோர் தியான சுலோகங்களை அருளினர். அவைகளில் இறைவனுக்குப் பல கைகள் கூறப்பெற்றிருக்கும். இரு கைகள், நாற்கரங்கள், எண்தோள்கள், பதினாறு கைகள், ஏன் ஆயிரம் கைகள் உடையனவாக கூட தெய்வங்கள் கூறப்பெறும். ஏன் இவ்வாறு கைகள் மிகுதியாகக் கூறினர்?

கை என்பது ஆற்றலைக் குறிக்கும். சண்டையின் போது' அவனை ஒரு கை பார்க்கிறேன்' என்றால் அவனை ஒரு கையினால் அடிப்பேன் என்றா பொருள்? என் ஆற்றலை அவன்மீது பிரயோகிப்பேன். என்றுதானே பொருள்! அவன் பெரிய கைகாரன்,' கைதேர்ந்தவன்' என்பதும் ஆற்றலைத் தானே குறிக்கும். ஆதலின் மனிதனைக் காட்டிலும் தெய்வம் ஆற்றல் மிகுதியாக உடையது என்பதைக்காட்ட ஆன்றோர் தெய்வத்தின் கைகளை மிகுதியாகக் கூறினர். ஆனால் கால்களை மிகுத்துக் கூறவில்லை. ஒருவரைப்பார்த்து இவர்தான் இந்த ஊரிலேயே பெரிய கை' என்றால் அவர் ஆற்றல் உடையவர் என்பதைக் குறிக்கும். இந்த ஊரிலேயே இவர் தான் பெரிய கால், என்று சொல்வோமா?

கரங்களின் எண்ணிக்கையிலும் விநாயகருக்குத் தனிச்சிறப்பு. ஏனைய தெய்வங்கட்கெல்லாம் 2, 4, 8, 16 என இரட்டைப்படையில் கைகள். இவருக்கு மட்டும் ஒற்றைப்படையில் கைகள். ஆமாம்! துதிக்கையையும் சேர்த்து இவருக்கு ஐந்து கரங்கள். விநாயகர் ஐந்து கரங்களாலும் ஐந்து தொழில்களைச் செய்கிறார்.

பாசம் ஏந்திய கையினால் ஆக்கலையும், அங்குசம் தரித்த கையினால் அழித்தலையும், அபய கரத்தால் காத்தலையும், மோதகம் உடைய கரத்தால் அருளையும், துதிக்கையால் மறைத்தலையும் செய்தருளுகின்றார். பாசப் பிணைப்பை ஏற்படுத்தி ஆக்கலுக்குத் துணை செய்யும் அங்குசம் அழிக்கும் கருவி, அபயக்கரம் அடைந்தவரைக் காக்கும். தித்திக்கும் மோதகம் கொண்ட திருக்கரம் திருவடியைச் சாட்டி இனிய முக்தியை அருள வல்லது. துதிக்கை மோகத்தை மறைத்தும் சுட்டியும் மறைத்தல் தொழிலையும் செய்கிறது!

**துதிக்கை** : ஐங்கரங்களுள் மேலானதும் பிள்ளையாருக்கே சிறப்பானதுமாகிய துதிக்கையின் தத்துவம் மிகப் பெரியது. பிராணிகளில் யானைக்கு மட்டுமே துதிக்கை உண்டு. மரங்களில் ஆலுக்கு மட்டுமே விழுதுகள் உண்டு. இவ்விரண்டும் இந்து சமயத்தில் மேலான இடத்தைப் பெற்றுள்ளன. சிவன் விரும்பி அமரும் மரம் ஆல். ஆலமர் செல்வனென்றே அவனுக்குப் பழமையான ஒரு பெயர். ஆனைமுகத்தில் ஒரு கடவுள். ஏன் இவ்விரண்டிற்கும் இத்துணைச் சிறப்பு? இவை இரண்டு மட்டுமே நிலத்தை துதிக்கையாலோ அல்லது, விழுதாலோ தொடுகின்றன.

துதிக்கையின் தத்துவம் யாது? ஒலி உதயமாகும் இடம் உந்தி. அதுவே மூலாதாரம் அதுவே விநாயகரின் இருப்பிடம். அங்கிருந்து ஒலி எழும்பி சிரசை அடைந்து சொல்லாக வெளிப்படுகிறது. எனவே சப்த பிரம்மம் உதிக்க அடியும் முடியும் இணைய வேண்டியுள்ளது. முடியிலுள்ள துதிக்கை அடியிற் படுமாறு அமைந்துள்ளது.

துதிக்கையுடன் கூடிய யானைத்தலையைப் போன்றதுவே ஓங்காரம் என முன்னரே கண்டோம். சுவாசம் சென்று வரும் பாதையும் ஓங்கார வடிவே. ஒரு கோயிலுக்கு சென்று முறையாக வழிபட்டு வந்தால் நாம் பெற்ற பாதையின் வரைபடம் ஓங்காரமாகவே இருக்கும். விநாயகரைச் சுற்றி வருகிறபோது ஓ எழுத்தின் தொடக்க நிலைச் சுழியை அமைக்கிறோம். பின்னர் சுற்றுக்கோயிலை வணங்கி வரும்போது ஓ எழுத்தின் மேற்பகுதி அமைகிறது. சண்டேசுரரை சுற்றாமல் வழிபட்டு வந்த வழியே மீளுகையில் 'ஓ' வின் ஒற்றைக் கொம்பு உண்டாகிறது. பின்னர் மீண்டும் சுற்றுக் கோயில்களை வணங்கிவிட்டுக் கொடிமரம், பலிபீடம், கொடிமரப் பிள்ளையாரிடம் வரும்போது ஓ எழுத்தின் கீழ்ப்பகுதி முடிகிறது. கருவிலிருக்கும் குழந்தையும் ஓங்காரமாகவே சுருண்டிருக்கிறது. மூலாதாரத்திலுள்ள குண்டலினி சக்தியும் அவ்வாறே சுருண்டுள்ளது. ஆதலின் மூலாதாரத்தில் உறையும் முதல்வனை, நாதப் பிரம்மமான கணாதிபனை வளைந்த துதிக்கையுடைய யானை வடிவே நன்கு சித்தரித்துக் காட்டவியலும். துதிக்கையின் வளைவிற்கேற்ப விநாயகன் வலம்புரி இடம்புரி எனப் பெயர் பெறுகிறான்.

**பெருவயிறு** : கணபதி அனைத்தையும் தன்னுள் அடக்கி நிற்பவன் என்பதனைப் பெருவயிறு காட்டுகிறது. இதனைப் பேழை வயிறு என்பர். அண்டப் பொருளனைத்தும் இப்பேழையுள் அடக்கம். 'பக்தர்களின் பாவங்கள் அனைத்தையும் ஜீரணிக்கும் பெரு வயிறு'' என்பார்கள் ஆச்சார்ய சுவாமிகள்.

**சர்ப்பாபரணம்** : வயிற்றின்மேல் உதரபந்தமாக இவர் அணிந்திருப்பது பாம்பு. இது மூலாதாரத்தில் பாம்புவடிவில் சுருண்டிருக்கும் குண்டலினி சக்தியைக் குறிக்கும். பாம்பு அணிகளாகவும், பூணூலாகவும் இவருக்குப் பயன்படுகிறது. தந்தையைப் போல் இவரும் சர்ப்பாபரணமும் சடாமுடியும் தரித்து யோகீஸ்வரராக விளங்குகிறார்.

**மூஷிக வாகனம்** : அனைத்துத் தெய்வங்களின் ஆயுதங்களும் வாகனங்களும் அர்த்தமுடையவை. விநாயகரின் ஊர்தி மூஷிகம் என்னும் மூஞ்சூறு. ஒரு கிலோ எடையுள்ள மூஞ்சுறு ஆயிரம் கிலோ எடையுள்ள ஆனையை எவ்வாறு தூக்கும். இது அபத்தமான கற்பனை என்பர் அறியார். ஆனால் ஆழ்ந்து சிந்திப்பார் இக்கற்பனையை அருமை என்பர். விநாயகர் ஞானவடிவினர். ஞானத்திற்கு எடை உண்டா? ஞானம் பருப்பொருளன்று; அதற்கு எடை இல்லை என்பதைக் காட்டவே எளிய பெருச்சாளியை அவருக்கு வாகனமாக்கினர்.

சவுபரி என்ற முனிவரின் மனைவியாகிய மனோமயை என்பாளை கிரவுஞ்சன் என்னும் கந்தர்வன் பலாத்காரம் செய்தபோது, அம்முனிவரால் மூஞ்சுறு ஆகுமாறு சபிக்கப்பட்டான். பராசுவ முனிவரின் ஆசிரமத்தில் வளர்ந்த விநாயகர் அவனை அடக்கித் தன் வாகனமாக்கிக் கொண்டார் என்பது புராணம். இதன் உட்பொருள் சிந்திக்கத்தக்கது. காமத்தால் கந்தர்வன் மூஷிகமானான். எனவே மூஷிகம் காமத்தின் சின்னம். ஞானமே காமத்தை அடக்கி ஆளும். ஞானவடிவினராகிய விநாயகர் காமத்தினைத் தன்கீழாக்கி அடக்கியருளினார் என்பதுவே இக்கதையின் கருத்து. உடலமைப்பிலும் காம, உறுப்புகட்கு மேலே உள்ள மூலாதாரத்திலே விநாயகர் உட்கார்ந்திருக்கிறார்.

**மனைவியர்**: கடவுளுக்கு மனைவியர் உளரா? கடவுளர் காமத்தினை வென்ற ஞானியராயிற்றே? என வினவுவர் சிலர். கடவுளரின் மனைவியர் என்பதெல்லாம் அவர்களின் சக்தியைக் குறிக்கும். ஒன்றினைப் படைக்க அது பற்றிய கல்வி-வித்தை தெரிந்திருக்கவேண்டும். எனவே படைப்புத் தொழிலைச் செய்யும் பிரமனுக்கு கல்வியே மனைவி. கல்வியைக் கலைமகள் என்கிறோம். ஒருவன் கல்வியறிவு உடையவனா என்பதை அவன் ஆடை, அணிகளைக் கொண்டு சொல்லிவிட முடியாது. அவன் பேச்சைக் கொண்டு நாவைக் கொண்டு தான் சொல்லமுடியும். எனவே, கல்வியின் இருப்பைக் காட்டும் நாவைக் கல்வியின் இருப்பிடமாக கலைமகளின் இருப்பிடமாகச் சொல்கிறோம். ஆதலின் பிரம்மாவின் நாவில் கலைமகள் இருப்பதாகப் பெரியோர் கூறினர்.

ஒன்றினைக் காக்கப் பொருள் வேண்டும். பொருள் இன்றேல் உலகில் எதையும் காப்பாற்ற முடியாது. எனவே காக்கும் கடவுளான திருமாலுக்குப் பொருள் அல்லது இலட்சுமியே மனைவியாகச் சொல்லுகிறோம். பொருளைப் பாதுகாப்பான பெட்டகத்தில் வைக்கிறோம். திருமாலும் திருவினை இதயப் பெட்டகத்துள் வைத்திருக்கிறார்.

அடக்கவும் அழிக்கவும் தேவைப்படுவது சக்தி. ஆதலின் சக்தியை அழிக்கும் அதிபதியான சிவனின் மனைவி என்கிறோம். சக்தியைத்தனியே பிரித்து எடுத்து வைக்க இயலாது. அது உடலோடு இருக்கும். ஆதலின் சிவன் உமையொருபாகனாக எப்போதும் சக்தியோடு கூடி இருக்கிறாள். சக்தியை பிரித்தால் செயலற்று இருக்கிறான்.

இம்மூவரைப் போன்றே விநாயகரும் தம் சக்திகளையே மனைவியர்களாகக் கொண்டுள்ளார். அவர் எதையும் செய்யும் வல்லபம் உடையவர். ஆதலின் அவர் மனைவியின் பெயர் வல்லபை.

சித்தியும் புத்தியும் அவர் தரும் அருள். ஆதலின் சித்தியும் புத்தியும் அவருக்கு மனைவியர்.

வல்லபையோடு கூடியுள்ளபோது வல்லப கணபதி என்றும், சித்தி புத்திகளோடு கூடியுள்ளபோது சித்தி புத்தி விநாயகர் என்றும் அவர் பெயர் பெறுகிறார். இம்மூவருடன் திருமாலின் குமாரிகளான மோதை, பிரமோதை, சுமதை, சுந்தரி, மனோரமை, மங்கலை, தேகினி, காந்தை, சாருகாசை, சுமந்திதை, நந்தினி, காமதை ஆகிய பன்னிருவரையும் மணந்துகொண்டுள்ளார்.

# பேப்பர்சாமிகள்

தெ. சிவகுருபாண்டியன்

மகான்களைப் பற்றி எண்ணுவதும் எழுதுவதும் இனிமையானதாகும். பல மகான்களைப் பற்றி அறிந்திருந்தும் குறிப்பாக பேப்பர்சாமிஎன்று அழைக்கப்படும் மகானின் உருவமும் செயலும் எப்போதுமே மனதில் தோன்றும். அந்தமகானைப் பற்றிப் பலரும் அறிந்திருக்கலாம். பேப்பர்சாமிகளை நான் பாலகனாய் இருந்த காலத்தில் பார்த்துப் பழகியவன் என்பதால் சுவாமிகள் பற்றிய நிகழ்ச்சிகள் மனதில் பசுமையாக உள்ளது. நன்கு புரிந்து கொள்ளும் திறன் இல்லாத சிறுவன் ஆனதால் சாமி அவர்களுக்குத் தொண்டு செய்யும் பாக்கியம் எனக்கில்லை.

சுவாமி அவர்களை நினைத்ததும் முதலில் புலப்படும் அவரது உருவம், ஆடை, சுபாவம் இவற்றைக் கூறத்தான் வேண்டும். பழைய அழுக்குப்படிந்த கறுப்புக் கோட்டு, பல தினங்களாக உடுத்தியிருக்கும் நான்குமுழ வேட்டி, கோட்டுப் பையில் திணிக்கப்பட்டு வெளியே துருத்திக் கொண்டிருக்கும் தேவையற்ற கிழிந்த பேப்பர்கள், சவரம் செய்யப்படாத முகம், மங்கலரன பார்வையுடைய கண்கள், அழுத்தமான வார்த்தைகள், பார்ப்பதற்கு கிழட்டுச் சிங்கம் போல் தோற்றமிருக்கும். அக்கிராமத்து மக்கள் சுவாமி அவர்களிடம் பயம் கலந்த மரியாதை செலுத்தி வந்தனர். சுவாமிகளிடம் கேள்விகள் கேட்டு பதில் பெறுவது சாதாரண விஷயமில்லை. நேரிடையாக எந்தப் பதிலும் சொல்வதுமில்லை. ஆகவே அவரது உண்மைப் பெயர், சொந்த ஊர், வயது இப்படி அவர் சம்பந்தப்பட்ட விஷயங்களை யாரும் அறிந்து கொண்டவரில்லை. கிராம மக்கள் யாரும் சுவாமிகளிடம் சகஜமாகப் பேச முடியாது. அவராகச் சொன்னால் உண்டு. ஆகவே அவர் பற்றிய முழு விவரம் தர இயலாது. என்றாலும் நெல்லை மாவட்டத்தில் உள்ள இலஞ்சிக் கிராமத்தில் வாசம் செய்த காலத்தில் உள்ள அவர் சம்பந்தப்பட்ட செய்திகளை மட்டும் கூறலாம்.

சுவாமிகளின் ஆசியினால் பலனடைந்தவர் பலருண்டு. தவறு செய்ய இருந்தவர்களையும், தவறைச் சுட்டிக் காட்டி தவறு செய்ய விடாமல் தடுத்து அருள்புரிந்தும் உள்ளார். சுவாமிகள் பற்றிய நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றும் விஞ்ஞான ஆய்வுக்கு அப்பாற்பட்டு இருப்பதை அறியும்போது தான் அந்த மகாபுருசரின் உன்னதமான சக்தி நமக்குப் புலப்படுகிறது.

வேறு பல இடங்களில் உண்மையான பக்தர்களுக்கு மத்தியில் போலித்தனமானவர்களும் கலந்து நின்று விஷமங்களைச் செய்து எல்லாப் பக்தர்களுக்கும் களங்கம்கற்பிப்பதைச் சில சந்தர்ப்பங்களில் காண முடியும். இது போன்று விசயம் சாமிகளிடம் மட்டும் செல்லாது. ஒரு சமயம் சுவாமிமுன் பயபக்தியுடன் நினிறிருந்த கும்பலுடன் குற்றவாளி ஒருவனும் கலந்து கொண்டான். சுவாமி அவர்கள் உரத்த குரலில் அவனை அழைத்தார், மெல்ல தயக்கத்துடன் அருகில் சென்றான். கண்ணிமைக்கும் நேரத்தில் அவனுடைய கன்னத்தில் ஓர் அறை கொடுத்தார். 'தவறு செய்துவிட்டு என்முன் நிற்கிறாயா' மூதேவி எங்காவது போய்த் தொலை' எனக் கடிந்து கொண்டார். கோபத்தில் சுவாமி கடுமையான சொற்கள் உபயோகிப்பது வழக்கம். தவறு செய்தவன் சுவாமிகளிடம்மறைக்க முடியாது. அக்குற்றவாளி தன் தவறை ஒப்புக் கொண்டதுடன் மன்னிப்புக் கேட்டான். இப்படிப் பல சம்பவங்கள் நடந்தது உண்டு.

வட மாநிலத்திலிருந்து சாது ஒருவர் சுவாமியை நாடி வந்திருந்தார். சுவாமியை பல நாட்கள் பின் தொடர்ந்து வந்தார். உபதேசம் பெறும் குறிக்கோளுடன் சுவாமியை நிழல்போல் தொடர்ந்து வந்த சாது எவ்வாறு எல்லாமோ முயற்சி செய்து வந்தார். அந்தச் சாதுவை

## நூல் மதிப்புரை

''சங்ககாலச் சோழர் நாணயங்கள்'' எனும் நூலை திரு இரா.கிருஷ்ணமூர்த்தி எம்.ஏ. அவர்கள் மிக அருமையாக உழைத்துப்படைத்துள்ளார். மிக அரியதாகக்கிட்டியுள்ள நாணயங்களின் துணைகொண்டு, சங்ககால சோழ மன்னர்களின் பெயர்கள், பரம்பரை, அவர்கள் பின்பற்றிய சமயம், வணங்கிய தெய்வங்கள், தெய்வங்களின் வடிவமைப்புகள், உள்நாட்டு வெளிநாட்டு வாணிக நிலை ஆகியவற்றை ஆசிரியர், அவற்றின் படங்களோடு எடுத்துக்காட்டி விளக்கியிருக்கும் இந்நூல் தமிழகத்தின் பண்டைக்காலப் பெருமையினை உள்ளங்கை நெல்லிக்கனி போல் எடுத்துக்காட்டும் ஒப்பற்ற வரலாற்று நூலாகும்.

இந்நூலின் விலை ரூ.20.00

அனைவரும் படித்துப் பயன்பெற வேண்டிய பயன்மிக்க நூல்.

நூல் வேண்டுவோர் நாட வேண்டிய முகவரி:

இரா.கிருஷ்ணமூர்த்தி, எம்.ஏ.
161, அண்ணாசாலை,
சென்னை.600002.

சுவாமிகள் ஒருநாள் அருகில் அழைத்தார். ஆவலுடன் நெருங்கிய சாதுவைக் கை சளைத்துப் போகும்வரை அடித்தார். அந்த சாது அத்தனை அடிகளையும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டார். இது போன்று சோதனை முடிந்ததும் உபதேசம் அருளியதுடன் இனி என்னிடம் வராதே என்றும் கூறி அனுப்பி வைத்தார். முன்கோபமுடைய குருவுக்கும் பிடிவாதமுள்ள சிஷ்யனுக்கும் இடையே உள்ள உறவையோ உணர்ச்சிகளையோ யாரால் புரிந்து கொள்ள முடியும்'? அரிய உபதேசம் பெற்றுக் கொண்ட சாது மன நிறைவோடு வந்த வழியே திரும்பினார். பல தினங்கள் இரவு பகல் என்று பாராது பின் தொடர்ந்து வந்த அந்த சாதுவால்கூட பேப்பர் சுவாமிகள் இரவு நேரங்களில் எங்குத் தங்கி ஓய்வு பெறுகிறார் என்பதை அறிந்து கொள்ள முடியவில்லை.

ஒரு முறை சுவாமிகளிடம் ஈடுபாடு கொண்டுள்ள ஒருவர் எலுமிச்சை பழம் ஒன்றை சுவாமியிடம் பயபக்தியுடன் தந்து நமஸ்கரித்து நின்றார். கையில் பெற்றுக் கொண்ட எலுமிச்சை பழத்தை வாயில் கடித்துத் துண்டாக்கி, எச்சிலுடன் வந்திருந்த பக்தரிடமே கொடுத்தார். வந்திருந்த அன்பர் பழத்தைப் பெற்றுக் கொண்ட மறு வினாடியே கடித்துத் துண்டாக்கப்பட்ட எலுமிச்சைப் பழம் முழுசாகவும் இனிமை தரும் வாசனையுடனும் காட்சி அளித்து அங்கு குழுமியிருந்த அத்தனைப் பேரையும் ஆச்சர்யத்தில் மூழ்கடித்தது.

பலவித சித்திகள் கைவரப் பெற்ற பேப்பர் சுவாமிகளை, செல்வாக்கு உள்ளவர்கள் செல்வந்தர்கள் இப்படிப் பலரும் தம் இல்லங்களுக்கு, வருந்தி அழைத்தாலும், சுவாமி அவர்களுடைய இல்லங்களுக்குச் செல்வது இல்லை. சாதி பேதம் ஏழை பணக்காரன் என்று எந்த வித்தியாசமும் சுவாமிகளிடம் கிடையாது. கூழுக்குக்கூட வசதியில்லாத குடிசையில் சுவாமிகள் போய் உட்கார்ந்து கொண்டு உடனே சாப்பாடு கொண்டு வா என ஆணையிடுவார். இல்லை என்று கூறாது எப்படியோ உணவைக் கொடுத்து நிற்கும் சந்தர்ப்பம் பல. அந்த ஏழையின் உயர்வான குண நலனையும் மற்றவர்கள் அறிந்து கொள்ளமுடியாத தன்மையையும் சுவாமிகள் நன்கு புரிந்து கொண்டிருப்பார்.

சுவாமிகளின் நடவடிக்கையினை யாராலும் நன்கு புரிந்து கொள்ள முடியாது. அப்படிப்பட்ட நடவடிக்கையில் ஒன்றைக் கூறத்தான் வேண்டும். வழக்கம்போல் உபசரிக்கும் அன்பர் வீட்டிற்குச் சென்று மீன் உணவு சமைக்கச் சொல்லி கேட்டு வாங்கி சுவைத்துச் சாப்பிடுவார். மீன் உணவு சாப்பிடுவது சரியா, தப்பா என்பதை சர்ச்சைக்கோ, ஆய்வுக்கோ இங்கே எடுத்துக் கொள்ளவேண்டாம். மகானின் செயலை விமர்சிக்கும் தகுதி என் போன்ற சாதாரணமானவர்களுக்கு இல்லை.

சில குறும்புக்கார இளைஞர்கள் இவரைச் சோதித்துப் பார்த்த வேடிக்கையான சம்பவத்தை மறக்க முடியாது. அதிகாலையில் சூரிய உதயத்துக்கு முன் காலை ஐந்து மணிக்குள் சுவாமிகள் ஆற்றில் குளிக்கச் செல்வது வழக்கம். சுவாமிகள் குளிக்கும் விதம் சற்று வித்தியாசமானதுதான். அணிந்து இருக்கும் அத்தனை ஆடைகளையும் ஒன்றுகூட உடம்பில் இல்லாது களைந்து கரையில் வைத்துவிட்டு ஆனந்தமாக ஆற்றில் மூழ்கி எழுந்து வந்து அதே ஆடைகளை அணிந்து கொள்வார்) ஒரு நாள் சுவாமிகள் வழக்கம்போல் துணிகளைக் களைந்து கரையில் வைத்து விட்டு ஆற்றில்மூழ்கிய சமயம் பத்துக் குறும்புக்கார இளைஞர்கள் துணிகளை எடுத்துக் கொண்டு ஓடி ஒளிந்துகொண்டனர். பிறகு மறைவான இடத்திலிருந்து சுவாமிகளின் நடவடிக்கையைக் கவனிக்கலாயினர். குறும்புக்கார இளைஞர்களின் கண்களுக்குஉடன் எதுவும் புலப்படவில்லை. சற்று தூரத்தில் சுவாமிகள் எப்போதும் அணிந்து கொள்ளும் அதே ஆடையுடன் காட்சி அளித்து அத்தனை பேரையும் அதிசயத்தில் ஆழ்த்தினார். அந்தக் காட்சியினைக் கண்ட இளைஞர்கள் தங்களிடம் உள்ள ஆடையும் சுவாமி அணிந்திருக்கும் ஆடையும் ஒன்றாகவே இருப்பது கண்டு ஆச்சர்யம் கொண்டதுடன் சுவாமிகளின் மகிமை தெரியாது தாங்கள் செய்ததுதவறு என உணர்ந்து சுவாமிகளின் காலில் விழுந்து மன்னப்புக் கேட்டு மன்றாடினர். 'அவரவர் வேலையைப் பாருங்கள்' என்று கோபத்துடன் சத்தம் போட்டார். இளைஞர்கள் தப்பினோம் பிழைத்தோம் என விழுந்து அடித்துக் கொண்டு ஓட்டம் பிடித்தனர்.

இப்படிப்பல நிகழ்ச்சிகளுக்குப் பின் சுவாமிகள் வேறு எந்த ஊருக்குச் சென்றார்கள் என்ற விபரம் சரியாகத் தெரிய வரவில்லை. நிகழப்போகும் எதையும் பல தினங்களுக்கு முன் சுவாமிகள் நேரிடையாகச் சொல்லாமல் ஜாடையாகக் குறிப்பாகக் கூறி விடுவதுண்டு. பலரைக் கடிந்துகொண்டு அடித்துத் துரத்தி இருந்தாலும் எல்லாவற்றையும் மறந்து மன்னிக்கும் மனோபாவமும், தாய்மை உணர்வும் அவருக்கு உண்டு. பல சித்துகள் கைவரப் பெற்ற சுவாமிகளிடம் உயர்ந்த குண நலங்கள் இருந்த காரணத்தால் கிராம மக்கள் அனைவரும் பெருமதிப்பு வைத்திருந்தனர்.

---

## நோய்க்கு மருந்து

பிறவிப்பிணி தீர மாமருந்து இறைவனடி தொழுதலே. பிறந்து வருந்தும்போது வரும் நோய் கட்கு தவிர்க்க முடியாத காரணத்தால் மருத்துவர்களிடம் சென்று மருந்து சாப்பிடுகிறோம். அம் மருந்துகளை கையில் வைத்துக் கொண்டு கீழ் கண்ட திருநாவுக்கரசர் பாடலைப் பாடி இறைவனை வணங்கி பின்னர் சாப்பிட்டால் நிச்சயம் விரைவில் குணமடையலாம் என்பது துணிவு. அனுபவ உண்மை. என் தந்தை அறிவுறுத்தி யான் கடைபிடித்து வரும் ஒன்று. அன்பர்களும் பயன் பெற வேண்கிறேன்.

திருச்சிற்றம்பலம்

''பேராயிரம் பரவி வானோ ரேத்தும் பெம்மானைப்
பிரிவிலா அடியார்க் கென்றும்
வாராத செல்வம் வருவிப்பானை
மந்திரமும் தந்திரமும் மருந்துமாகிப்
தீராநோய் தீர்த்தருள வல்லான் தன்னைத்
திரிபுரங்கள் தீயெழத்திண் சிலை கைக்கொண்ட
பேரானைப் புள்ளிருக்கு வேளூரானைப்
போற்றாதே ஆற்றாநாள் போக்கினேனே!''

புள்ளிருக்குவேளூர் தற்போது வைத்தீஸ்வரன் கோவில் என வழங்கப்படுகிறது.

திருச்சிற்றம்பலம்.

—சு. சண்முகம்

---



# கம்பரின் இராமாவதாரம்

### (1)

டாக்டர் த. அமிர்தலிங்கம்

''உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகிலா விளையாட் டுடையார் அவர்
தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே''

படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களையும் விளையாட்டாகப் புரிகிற அலகிலா ஆற்றலுடைய இறைவனை வாழ்த்தித் தம் ஒப்பற்ற இராமாவதாரக் காவியத்தைப் பாடத் தொடங்குகிறார் கம்பர். இராமாவதாரக் காவியத்தைத் தம்மால் சிறப்பாகப் பாடமுடியுமா என்கிற ஐயம் கவிச்சக்கரவர்த்தியாகிய அவருக்கும் உண்டாகிவிட்டது. ஒரு குவளை பால் குடிப்பதென்பது ஒரு பூனைக்குச் சிரமமான காரியம் ஆகாது. முயன்றால் ஒரு குடம் பாலையும் கூட குடிப்பது பூனைக்கு இயல்கின்ற எளிதான காரியம் தான். ஆனால் அப்பூனை பாற்கடல் முழுவதையும் குடித்து முடிக்கிறேன் என முயன்றால் அம்முயற்சி எப்படியிருக்குமோ அதைப்போன்றதே இராமாவதாரக் காவியத்தைப் பாட முயலும் தம் முயற்சியும் என்று அடக்கத்தோடு கூறிக்கொள்கிறார் கம்பர்.

''ஓசை பெற்றுயர் பாற்கடல் உற்றொரு
பூசை முற்றவும் நக்குபு புக்கென
ஆசை பற்றி அறையலுற்றேன் மற்றிக்
காசில் கொற்றது இராமன் கதையரோ''.

என்ற பாடலில் குற்றம் இல்லாத வெற்றியையுடைய இராமனின் காவியத்தை ஆசைபற்றித் தாம் கூறப்புகுவதால், இக்காவியத்தில் ஏதேனும் குறைகள் நேரினும் அவற்றைப் பொறுத்தருள வேண்டும் என்பதற்காகவும் அவர் வேண்டிக் கொள்கிறார். பக்தியில் சிறந்த பக்தர்கள் புகழ்ந்து உரைப்பனவற்றை எல்லாம் அறிவுக்குப் பொருத்தமாக உள்ளனவா என்று ஆராய்ச்சியாளர்கள் ஆய்ந்து பார்க்க முற்பட்டால் எவ்வாறு அது பொருத்தமாகாதோ அவ்வாறே இராமபக்தியில் திளைத்துத்தாம் பாடியுள்ள இராமாவதாரக் காவியத்திலும் குறைகள் காண முற்படுவதும் பொருத்தமன்று என்று கல்வியிற் பெரியவரான கம்பர், தம்மைப் போன்ற கல்வியாளர்களையும் வேண்டிக் கொள்கிறார்.

''முத்தமிழ் துறையின் முறைபோகிய
உத்தமக் கவிஞர்க்கொன்று உணர்த்துவென்
பித்தர் சொன்னவும் பேதையர் சொன்னவும்
பக்தர் சொன்னவும் பன்னப் பெறுபவோ?''

என்பதும் அவையடக்கம் கூறும் மற்றுமோர் சிறந்த பாடலாகும்.

குழந்தைகள் தரையில் வீடுகளை வரைந்து விளையாடுவது உண்டு. அத்தகைய கோடுகளால் வரையப்படும் வீடுகளைக் கண்டு மனைசாஸ்திரத்தில் வல்ல தச்சர்கள் ''இதுவா வீடு?'' என்று கோபிக்க மாட்டார்கள். ''அத்தகைய அறியாக் குழந்தையைப் போன்றே தாமும் காவியம் என்பதாக இராமாவதாரத்தைத் தீட்டியுள்ளதாகவும், முறையாக நூல்களைப் பாடவும் பகுத்தாயவும் வல்ல புலவர்கள் இக்காவியத்தைக் கண்டு கோபித்துக் கொள்ள வேண்டாம் எனவும் கம்பர் வேண்டிக் கொள்கிறார்.

''அறையும் ஆடரங்கும் படப் பிள்ளைகள்
தரையில் கீறிடில் தச்சரும் காய்வரோ
இறையும் ஞானம் இலாத என் புன்கவி
முறையின் நூல் உணர்ந்தோரும் முனிவரோ?''

நிறைகுடம் தளும்பாது என்பது பழமொழி. தமிழுக்குக் கதியாவர் இருவர். அவர்கள் திருவள்ளுவரும் கம்பரும் என்று ஆன்றோர்கள் போற்றியுள்ளனர். அத்தகைய கவிச்சக்கரவர்த்தி எவ்வளவு தன்னடக்கமாகத் திகழ்ந்துள்ளார் என்பதைத் தான் மேலே காட்டிய பாடல்கள் நமக்கு உணர்த்துகின்றன.

கவிச்சக்கரவர்த்தி கம்பரின் இராமாவதாரக் காவியத்தில் திளைத்து மகிழ்ந்திடாத மாந்தர்கள் ஒருவருமே இல்லை எனலாம். அவருடைய கவிதையின் சிறப்பை

''இம்பர் நாட்டிற் செல்வமெல்லாம்
எய்தி அரசாண் டிருந்தாலும்
உம்பர் நாட்டிற் கற்பகக்கா
ஓங்கு நீழல் இருந்தாலும்

செம்பொன் மேரு அனையபுயந்
திறல்சேர் இராமன் திருக்கதையில்
கம்ப நாடன் கவிதையிற் போல்
கற்றோர்க்கு இதயம் களியாதே''

என்ற பழம் பாடல் நமக்கு மிகத் தெளிவாகக் காட்டும். மகாகவி பாரதியாரும்

''யாமறிந்த புலவர்ிலே கம்பனைப்போல்
வள்ளுவர்போல் இளங்கோவைப்போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை
உண்மை வெறும் புகழ்ச்சியில்லை''

என்று கம்பரை முன்வைத்து தமிழ்க்கவி மும்மணிகளான கம்பர், வள்ளுவர், இளங்கோ ஆகிய மூவரையும் போற்றிப் புகழ்ந்திருப்பது இங்கு நினையத்தக்கது.

இராமநாமத்தைக் கூறுவதனால் உண்டாகும் பலன்கள் அளவற்றனவாகும்.

''நன்மையும் செல்வமும் நாளும் நல்குமே
தின்மையும் பாவமும் சிதைந்து தேயுமே
சென்மமும் மரணமும் இன்றித் தீருமே
இம்மையே இராம என்ற இரண்டெழுத்தினால்''

''நாடிய பொருள் கைகூடும்
ஞானமும் புகழும் உண்டாம்
வீடியல் வழியதாக்கும்
வேரிஅம் கமலை நோக்கும்
நீடிய அரக்கர் சேனை
நீறுபட் டழிய வாகை
சூடிய சிலை இராமன்
தோள்வலி கூறு வார்க்கே''

எனவரும் பாடல்கள் இராமநாம மகிமையையும், இராமாயணம் கற்பதன் பயனையும் காட்டுவனவாகும். ''பூமியில் மலைகளும் ஆறுகளும் உள்ள வரையில் இராமாயணம் மக்களிடையே வழங்கி எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுதலைதரும்'' என்று பிரம்மாவால் ஆசீர்வதிக்கப்பட்ட காவியமும் இராமாயணமே ஆகும். இத்தகைய இராமாயண காவியத்தின் நாயகன் இராமன் அவதாரம் செய்வதற்கு எத்தகைய புண்ணியத்தைக் கோசலநாடு செய்திருக்க வேண்டும் என்று எண்ணும் கம்பர், அவர் பிறந்த கோசல நாட்டின் பெருமையையும் கோசல நாட்டின் வளமைக்குக் காரணமான சரயு நதியின் பெருமையையும் முதலில் காட்டுகிறார்.

இராமர் அவதாரம் புரிந்த சூரியகுலம் தொன்றுதொட்டு இடையறாது தொடர்ந்து வருகிறது. சூரிய குலத்தில் தோன்றிப் பாராண்ட பேரரசர் பலர் ஆயினும் அவர்கள் போற்றிக்காத்த நல்லொழுக்கம் என்றும் ஒரே தன்மையானது. சூரிய குலத்து மன்னர்களின் நல்லொழுக்கத்தைப் போலவே கோசல நாட்டிற்கு அழகு செய்யும் சரயு நதியும் இடையறாது பெருகிவரும் நீரொழுக்கினால், தாய்முலை போல தண்ணளிசுரந்து கோசல நாட்டு மக்களாம் குழந்தைகளைப் பேணிப் பாதுகாக்கிறது என்று சரயுநதியின் சிறப்பினைக் காட்டுகிறார் கம்பர்.

''இரவிதன் குலத்து எண்ணில் பல்வேந்தர்தம்
பரவு நல் ஒழுக்கின் படி பூண்டது
சரயு என்பது தாய்முலை அன்னது, இவ்
உரவுநீர் நிலத்து ஓங்கும் உயிர்க்கெலாம்''

சரயுநதி குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம் என நானிலங்களிலும் ஓடி வளமைப் படுத்துவதைக் கம்பர் பலபல பாக்களால் விரிவாக விளக்கிச் சொல்கின்றார்.

சரயுநதியின் வெள்ளப் பெருக்கினைப் பரம்பொருளோடு ஒப்பிட்டுக் காட்டும் கம்பரின் கவிதை ஒன்று மிக நயமானது. இமயமலையில் தோன்றிடும் சரயுநதி வழியெங்கும் உள்ள குளம், குட்டை, ஏரிகளை நிறைத்துக் குளத்துநீர், குட்டை நீர், ஏரிநீர் எனப் பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுவதைக் காட்டும் கம்பர், ஒன்றான பரம்பொருளே பல்வேறு பெயர்களால் பல்வேறு சமயத்தாரால் இவ்வாறு அழைக்கப்படுகிறது எனப்பாடியிருக்கிறார்.

''கல்லிடைப் பிறந்து போந்து கடலிடைகலந்த
நீத்தம்
எல்லையில் மறைகளாலும், இயம்பரும் பொருள்
ஈதென்னத்
தொல்லையில் ஒன்றே ஆகித் துறைதோறும் பரந்த
சூழ்ச்சிப்
பல்பெரும் சமயம் சொல்லும் பொருளும்போல்
பரந்தது ஒன்றே.''

சரயுநதியினைப் பரம்பொருளோடு ஒப்பிட்டு உணர்த்திடும் கம்பர், அதனை உயிரோடும் உவமித்துப் பாடியுள்ளார். ஒருயிரேதன் வினையின் காரணமாக மனிதராகவும் தேவராகவும், தாவரமாகவும், விலங்குகளாகவும் மாறிமாறி வடிவெடுத்து உலகில் வாழ்ந்து வருவதைப் போலவே சரயு நதியின் நீரும் சோலையில் புகுந்து பின்பு சண்பகக் காட்டினுள் புகுந்து, பிறகு பூம்பொய்கை, புது மணத்தடாகம், வயல் என ஒவ்வொன்றிலும் பரவிப் பாய்ந்து ஓடுகிறது என்று பாடுகிறார்.

''தாதுகு சோலை தோறும், சண்பகக் காடு
தோறும்
போதவிழ் பொய்கை தோறும், புதுமணத் தடங்
கள் தோறும்
மாதவி வேலிப் பூக வனந்தொறும், வயல்கள்
தோறும்
ஓதிய உடம்பு தோறும் உயிர் என உலாய தன்றே''

சரயுநதியின் பெருக்கால் கோசலநாடு பெற்றுள்ள வளத்தையும் கம்பர் மிகவிரிவாக வர்ணித்துள்ளார். கோசல நாட்டின் வரப்புகளிலெல்லாம் முத்துக்களும், மடைகளில் எல்லாம் சங்குகளும், வாய்க்கால் கரைகளில் எல்லாம் தங்கங்களும், எருமைகள் சென்று கலக்கும் குட்டைகளில் எல்லாம் செங்கழுநீர்ப்பூக்களும் நிறைந்து காணப்படும் செழுமைச் சிறப்பை

''வரம்பெலாம் முத்தம் தத்தும் மடையெலாம்
பணிலம் மாநீர்க்
குரம்பெலாம் செம்பொன் மேதிக் குழியெலாம்
கழுநீர்க் கொள்ளை
பரம்பெலாம் பவளம் சாலிப் பரப்பெலாம் அன்னம்
பாங்கர்க்
கரும்பெலாம் செந்தேன், சந்தக் காவெலாம் களி
வண்டு ஈட்டம்''.

என்பதாகப் பாடியுள்ளார். வாய்க்கால் கரைகளில் எல்லாம் தங்கங்கள் நிறைந்திருக்கின்றன, பரம்படிக்கும் பலகைகள் யாவும் பவளத்தால் செய்யப்பட்டிருக்கின்றன'' என்று கூறி கோசல நாட்டின் கனிவளத்தைக் காட்டும் கம்பர், அன்னங்களும் வண்டுகளும் எங்கும் மொய்த்து நிறைந்திருக்கின்றன என்று கூறுவதன் வாயிலாக கோசல நாட்டின் பயிர் வளத்தையும் உயர்த்திக் காட்டுகிறார்.



கோசல நாட்டில் வயல்கள் நிறைந்து விளங்கும் மருத நிலங்களே அதிகம் உள்ளன. மருத நிலமாகிய மன்னன் கொலுவீற்றிருக்கும் நாடு கோசல நாடு என்பதையும் கம்பர்

''தண்டலை மயில்கள் ஆட, தாமரை விளக்கம் தாங்க
கொண்டல்கள்முழவின் ஏங்க, குவளை கண்விழித்து நோக்க
தெண்திரை எழினி காட்ட தேம்பிழிமகரயாழின்
வண்டுகள் இனிதுபாட மருதம் வீற்றிருக்கும் மாதோ''.

என்று பாடுகிறார்.

நீரலைகள் திரைச்சீலையைப்போல் அசைகின்றன. தேனை உண்ட வண்டுகள் பாடுகின்றன. மேகங்கள் மத்தளம் போல் இடியினை முழக்குகின்றன. மயில்கள் நாட்டிய மகளிரைப் போல் ஆடுகின்றன. குவளை மலர்களோடு வீற்றிருந்து மருத நிலமாகிய மாமன்னனும் இவ்வாடல் பாடல்களைக் கண்டு களித்தவாறு கொலு வீற்றிருக்கின்றான் என்று கம்பர் மருத நிலத்தின் மாட்சிகளை நமக்குத் தெளிவுபடுத்துகிறார்.

கோசலநாட்டு வயல்களில் அன்னப்பறவைகளுக்குப் பஞ்சமில்லை. அவை கூட்டமாகக் கூடித்திரிய அவற்றின் இளங்குஞ்சுகள் தாமரை மலர்களில் படுத்து உறங்குகின்றன. சேற்றில் கால்புதைய நின்று மேயும் எருமைகள் தாம் கன்றுகளை நினைத்துப் பாலினைத் தானாகச் சொரிந்து நிற்க அப்பாலினை உண்டு அன்னக் குஞ்சுகள் பசியாறி, தவளைகள் கத்தும் ஓசையே தாலாட்டாக கண் துயிலுகின்றனவாம். இக் காட்சியையும் கம்பர் கவினுறப் படம் பிடித்துக் காட்டுகிறார்.

''சேலுண்ட ஒண்கணாரில் திரிகின்ற செங்கால் அன்னம்
மால்உண்ட நளினப் பள்ளி வளர்த்திய மழலைப் பிள்ளை
கால் உண்ட சேற்று மேதி கன்றுள்ளி கனைப்பச் சேர்ந்த
பாலுண்டு துயிலப் பச்சை தேரை தாலாட்டும் பண்ணை.''

இவ்வாறு கோசல நாட்டின் வளத்தை மிக விரிவாக வர்ணித்துச் செல்லும் கம்பர் இப்படிப்பட்ட செல்வச் சிறப்புமிக்க கோசல நாட்டில் கொடையாளர்களே இல்லை, வீரர்களே இல்லை, உண்மை பேசுவோரும் இல்லை; அறிவாளிகளும் இல்லை என்று ஒருபாடலில் கூறி நம்மை வியக்கவைக்கிறார். அவற்றிற்கான காரணங்கள் என்ன என்பதையும் அவர் இணைத்துக் கூறும்போதுதான் கம்பரின் கவித்துவம் நமக்கு விளங்குகிறது. ''வறுமையால் வாடுவார் ஒருவரும் இல்லை யாதலால் வறியவர்க்கு வழங்கிப் பேர் பெறும் வள்ளல்களும் இல்லை. கோசலநாட்டின்மீது போர் தொடுத்து வருவார் ஒருவரும் இல்லை ஆதலால் அவர்களை எதிர்த்துப் போரிடும் வீரர்களும் இல்லை, பொய் பேசுவோர் என்று ஒருவரும் இல்லாதபடியால்

உண்மை பேசுவோர் இவர்கள் என்று வேறுபடுத்திக் காட்ட தனியாக யாரும் இல்லை; எல்லோரும் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கும்படியால் அறிவாளிகள் என்று சிறப்பித்துப் பாராட்டவும் தனியாக யாரும் இல்லை'' என்று கம்பர் நயம் பட,

''வண்மை இல்லை ஓர்வறுமை இன்மையால்
திண்மை இல்லை நேர் செறுநர் இன்மையால்
உண்மை இல்லை பொய்யுரை இலாமையால்
வெண்மை இல்லை, பல்கேள்வி மேவலால்''.

என்று பாடியிருக்கிறார். ஒரு சிறந்த நாடு எப்படித் திகழ வேண்டும் என்பதற்கு இலக்கணமாக கோசல நாட்டை வர்ணித்து இப்பாடலைப் புனைந்திருக்கும் கம்பரின் புலமைத் திறத்தை என்னென்பது?

கோசல நாட்டின் தலைநகரமான அயோத்தி நகரின் சிறப்பையும் கம்பர் வர்ணிக்க முயல்கிறார். ''மும்மூர்த்திகளும் கூட அயோத்தி நகருக்கு ஒப்பான ஒரு நகரைக் கண்டிலர். 'சந்திர சூரியர்களும் அயோத்திக்கு ஒப்பான ஒரு நகரைத் தேடியே இரவும் பகலும் கண் இமைக்காமல் விண்ணகத்தில் அலைந்து திரிந்து வாடுகின்றனர்'' என்று கூறி மண்ணுலகில் உள்ள அரசுகள், அணிகலன்கள், பெறுதற்கரிய இரத்தின வகைகள், யானைகள், குதிரைகள், தேர்கள் ஆகியன அயோத்தியில் நிறைந்து விளங்குகின்றன; மேலும் முனிவர்கள் விண்ணுலகில் வாழ்தற்குரிய தேவர்கள், இயக்கர்கள், வித்தியாதரர்கள் இந்நகருக்கு வந்து விரும்பி மகிழ்ந்து வாழ்வதனால் அந்நகருக்கு உவமை கண்டு உரைப்பது எளிதல்ல'' எனவும் தம் இயலாமையைக் கூறுகிறார்.

''கல்லாது நிற்பார் பிறர் இன்மையின்
கல்விமுற்ற
வல்லாரும் இல்லை, அவை வல்லார்
அல்லாரும் இல்லை
எல்லாரும் எல்லாப் பெருஞ் செல்வமும்
எய்த லானே
இல்லாரும் இல்லை; உடையார்களும்
இல்லை மாதோ!''

என்ற கம்பரின் பாடல் அயோத்தி மாநகரத்தில் வாழ்ந்திருக்கும் மாந்தர்களின் மகோன்னத வாழ்வை காட்டுவதாகும்.

அறத்தின் வடிவமாகத் திகழும் தசரத மாமன்னன் இத்தகைய அயோத்தி நகரைத் தன் உறைவிடமாகக் கொண்டு ஏழுலகங்களும் போற்றத் தன் ஆட்சியை நிகழ்த்திக் கொண்டிருக்கிறான்.

''அம்மாண் நகருக்கு அரசன் அரசர்க்கரசன்
செம்மாண் தனிக்கோல் உலகேழிலும் செல்ல நின்
றான்
இம்மாண் கதைக்கோர் இறையாய இராமன்
என்னும்
மொய்ம்மாண் கழலோன் தரு நல்லற மூர்த்தி
அன்னோன்''

என்று தசரதனை அறிமுகப்படுத்துகிறார் கம்பர். தசரதனுடைய அறம் சான்ற ஆட்சிச் சிறப்பை விவரிக்க விழையும் கம்பர் எல்லா உயிர்களையும் அவன் தன்னுயிர் போலக் கருதிப் போற்றிப் பாதுகாக்கும்படியால் உயிர்கள் அனைத்தும் ஒன்று சேர்ந்து வசிக்கும் ஓர் உடல் போலத் திகழ்கிறான் என்று அவனைப் போற்றுகிறார் கம்பர்.

''வயிரவாள் பூண் அணி மடங்கல் மொய்ம்பினான்
உயிரெலாம் தன்னுயிர் ஒப்பஓம்பலால்
செயிரிலா உலகினில் சென்று நின்று வாழ்
உயிரெலாம் உறைவதோர் உடம்பும் ஆயினான்''.

கம்பருக்கு முன் வாழ்ந்திருந்த கவிஞர்கள் பலர் மன்னனை உயிராகவும், மக்களை உடலாகவுமே உவமித்து வந்தனர். ''மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்'' என்பது புறநானூறு. மக்களை உயிராகவும், மன்னனை, உயிரைப் போற்றி நிற்க வேண்டிய உடலாகவும் உவமித்த பெருமை நம் கம்பருக்கே உரியது. இவ்வுவமையினால் மக்களைக் காப்பதையே மாபெரும் கடமையாகப் போற்றிடும் தசரத மாமன்னனின் கடமையுணர்வையும் சிறப்பித்துக் காட்டியுள்ளார். ஏராளமான வயல்களுக்கு உரிமையுடைய உழவனைக் காட்டிலும் ஒரே ஒரு சிறிய வயலையே உரிமையாகக் கொண்ட உழவன் அதனைத் தன் கண்போல பாதுகாத்து ஓம்புவது கண்கூடு. தசரதனும் அவ்வறிய உழவனைப் போலவே உலகத்தைப் போற்றிப் பாதுகாத்தான் என்பதையும் கம்பர்

''எய்என எழுபகை எங்கும் இன்மையால்
மொய்பொருத் தினவுறு முழவுத் தோளினான்
வையகம் முழுதும் வறிஞன் ஓம்பும்ஓர்
செய் எனக் காத்தினிது அரசு செய்கின்றான்''.

என்று பாடியிருக்கிறார்.

அயோத்தியைத் தலைநகராகக் கொண்ட கோசல நாட்டை அறுபதனாயிரம் ஆண்டுகளாகக் குறைவின்றி ஆண்டு வரலானான் தசரதன். அவனுடைய ஆட்சியில் அவனுடைய மக்களுக்கு ஒரு குறையும்நேரவில்லை. ஆனால் தசரதனுக்கு நீண்ட காலமாக அவனை வாட்டும் மனக்குறை ஒன்று இருந்துவந்தது. அதனை அவன் தன் குல குருவாகிய வசிட்டரிடம் எடுத்துக் கூறுகிறான்.

''அறுபதி னாயிரம் ஆண்டு மாண்புற
உறுபகை ஒடுக்கி இவ்வுலகம் காத்தனன்
பிறிதொரு குறையிலை என்பின் வையகம்
மறுகுறும் என்பதோர் மயக்கம் உண்டரோ''

என்று தனக்கு மக்கள் இல்லாக் குறையைக் கூறி வருந்துகிறான் தசரதன்.

தசரதன் மனக்குறையைக் கேட்கும் வசிட்டருக்கு முன்பொரு சமயம் தேவர்கள் ஒருங்குகூடி இராவணனால் தாங்கள் சொல்லொணாத் துயர்களுக்கு ஆளாகிவாடுவதை கூறிக் ''காத்தருள வேண்டும்''' என்று திருமாலிடம் முறையிட்டுக் கொண்டபோது திருமாலும் ''இராவணனை அழித்திட மானிட அவதாரம் பூண்டு தசரதன் திருமகனாகத் தோன்றுவோம்'' என வரம் அளித்திருப்பது நினைவிற்கு வருகிறது. திருமால் தாமே இராமனாகவும், தம்முடைய பாயல் ஆகிய ஆதிசேடன் இலக்குவனனாகவும், தம்முடைய சங்கு சத்ருக்கனனாகவும், சக்கரம் பரதனாகவும் தோன்றப் போவதாக அப்பொழுது வரம் அளித்திருந்தார். அவரே தம்முடைய இராவண வதத்திற்குத் துணையாகும் பொருட்டு தேவர்களையும் குரங்குகளாகப் பிறக்கும்படி கூறியிருந்தார்.

இராவணன் மிகக் கடுமையான தவம் மேற்கொண்டு நான்முகக் கடவுளிடம் தேவர்களால் தனக்கு மரணம் நேராதிருக்க வரம் வேண்டிப்

பெற்றிருந்தான். அவன் மானிடர்களை அற்பமாக மதித்தபடியால் தனக்கு மானிடர்களாலும் மரணம் நேராமல் இருக்க வேண்டும் என்ற வரத்தைக் கோரிப்பெறவில்லை. இதனைக் கருத்தில் கொண்டே திருமால் தாம் மானிட அவதாரம் பூணும் வரத்தைத் தேவர்களுக்கும் தந்தருளி, தேவர்களையும் தமக்குத் துணைபுரிய வானரங்களாகப் பிறக்குமாறு ஆணையிட்டார். அப்போது பிரம்மா, தாம் கரடி வேந்தனாகிய ஜாம்பவானாகத் தோன்றுவதாகவும், இந்திரன், வாலி மற்றும் அங்கதனாகத் தோன்றுவதாகவும், சூரியன் சுக்ரீவனாகத் தோன்றுவதாகவும், அக்கினி நீலனாகத் தோன்றுவதாகவும், வாயு அனுமனாகத் தோன்றுவதாகவும் உறுதி கூறினர்.

இச்சம்பவத்தை நினைவு கூர்கிறார் வசிட்டர். அவர் தசரதனை நோக்கி ''கவலை வேண்டாம். உன்மனக்குறை தீர்ந்தது என்றேகொள். புத்திரகாமேட்டியாகம் செய்தால் குழந்தைகள் பிறக்கும். அந்த யாகத்தைச் செய்தற்குத் தகுதி சான்றவர் ரிஷ்யசிருங்க முனிவர். அவர் இப்பொழுது உரோமபத மன்னனின் மனக்கவலை தீர்த்து, பஞ்சத்தால் வாடியிருந்த அவருடைய நாட்டில் பருவ மழையை மிகப் பெய்வித்து, மன்னனின் மகளான சாந்தை என்பாளையும் மணந்து அவனுடைய நாட்டிலே தங்கி இருக்கிறார். அவரை அழைத்து வந்து யாகம் செய்தால் உன் கவலை தீரும்'' என்று கூறி அருளுகிறார். தசரதனும் தானே போய் முனிவரை அழைத்து வருவதாகக் கூறி உரோமபதன் நாட்டிற்குத் தன் பரிவாரங்களுடன் புறப்பட்டுப் போய்ச் சேருகிறான். உரோமபதனும் தசரதனை எதிர்கொண்டு வரவேற்றுத் தன் அரண்மனைக்கு அழைத்துச் செல்கிறான். ''நற்றவம் அனைத்தும் ஓர் நவைஇலா உருப்பெற்று''த் திகழும் ரிஷ்யசிருங்க முனிவரை தசரதன் விழுந்து வணங்கித் தான் வந்த நோக்கத்தைத் தெரிவிக்கின்றான். உரோமபதன் ருசியசிருங்கரைத் தானே அழைத்துக் கொண்டு அயோத்திக்கு வருவதாகக்கூறித் தசரதனை அனுப்பிவைக்க, தசரதனும் அயோத்திக்குத் திரும்புகிறான். உறுதி கூறியபடியே உரோமபதன் தம்மருகரான் ரிஷ்யசிருங்க முனிவரையும், மகள் சாந்தையையும் அழைத்துக் கொண்டு அயோத்திக்கு வந்து சேருகிறான். அதன்பின் மக்கட்பேறளிக்கும் மகத்தான யாகத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. வேதங்களில் கூறப்பட்டுள்ள விதிகளின் படியே யாகசாலையைச் சிறப்புற அமைத்து ரிஷ்யசிருங்க முனிவர் ஓராண்டுக் காலம் வேள்வியை நிகழ்த்துகிறார். அப்பொழுது ஓமத்தீயிலிருந்து பூதம் ஒன்று, வெண்ணிற மான பிண்டம் ஒன்றைத் தங்கத்தட்டில் தாங்கிய வாறு தோன்றுகிறது.

''ஆயிடைக் கனலினின்று அம்பொன் தட்டினில்
தூயநல் சுதைநிகர் பிண்டம் ஒன்று சூழ்
தீயெறி பங்கியும் சிவந்த கண்ணுமாய்
ஏயெனப் பூதமொன்று எழுந்தது ஏந்தியே''.

(தொடரும்)

---

# வாசகர் எண்ணங்கள்



தங்களின் 'பாரதப்போரில் பார்த்தசாரதி'' திருப்பாற்கடலைக் கடைந்து எடுத்த அமிர்தம்போல் தித்தித்தது. வைணவர்கள் திவ்விய பிரபந்தத்தை மலிவு விலைப் பதிப்பாக்கி வழங்குவதுபோல் தாங்களும் மலிவு விலையில் பதிப்பித்து 'பாரதப் போரில் பார்த்தசாரதி' நூலை வழங்கிட வேண்டுகிறேன்.

—இராமலிங்கம்,
குமாரபவனம்,
அடிவாரம், பழநி

பாங்குடனே பாரதப் போர் முடித்தீர் ஐயா, பக்தியுடன் நேயர் எல்லாம் படித்தோம் நாங்கள். சீரான ஐவர்தம் கதையிது போலே, எம் செவிக்கு சீக்கிரமே மறுகதையை நோக்குகின்றோம்.

—தெ. செ. வேங்கடகிருஷ்ணன்.

திருக்கோயிலில் வரும் ஒவ்வொரு கட்டுரையும் அரிய பொக்கிஷமாக உள்ளது. இந்து தர்மத்தின் அரிய கருத்துரைகளைத் தாங்கி வரும் திருக்கோயில் படித்துப் பாதுகாக்க வேண்டிய ஒரு நூல்.

—இராம. முரளி
வாலாஜாப்பேட்டை,

திங்கள்நாள் தவறமாட்டேன், திருக்கோயில் ஏட்டைக் கற்க. தண்டமிழ்த் தலைவன் எங்கள் அமிர்தலிங்கம் உள்ளவரை நானே.

—எஸ். கிருஷ்ணமூர்த்தி.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-600 034
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A., Ph.D.,
அச்சிட்டோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600002





திருவான்மியூர் அருள்மிகு மருந்தீஸ்வரர் ஆலயத்தில் நடைபெற்ற சிறப்பு வழிபாடு மற்றும் பொதுவிருந்து விழாவில் மேதகு தமிழக ஆளுநரின் ஆலோசகர் திருமிகு ஆ. பத்மநாபன் ஐ.ஏ.எஸ். அவர்கள் கலந்து கொண்டு, ஏழை எளியவர்களுக்கு வேட்டி, சேலை வழங்கினார். அறநிலையத்துறையின் அரசுச் செயலாளர் திருமிகு கு. ஆளுடைய பிள்ளை ஐ.ஏ.எஸ்., ஆணையாளர் திரு தி. இராச. கல்யாணசுந்தரம் ஐ.ஏ.எஸ்., உதவி ஆணையர் திரு. தனபால் பி.ஏ பி.எல்., நிர்வாக அதிகாரி திரு இரா. வெங்கடேசன் ஆகியோர் இவ் விழாவில் கலந்து கொண்டனர்.



மயிலை அருள்மிகு கபாலீசுவரர் ஆலயத்தில் நடைபெற்ற சிறப்பு வழிபாடு மற்றும் பொதுவிருந்து விழாவில் மேதகு தமிழக ஆளுநரின் ஆலோசகர் திருமிகு ஜி.வி. இராமகிருஷ்ணா ஐ.ஏ.எஸ். அவர்களும் சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு ஜி. புஜங்கராவ் ஐ.ஏ.எஸ். அவர்களும் கலந்து கொண்டனர்.







மேதகு பாரதப் பிரதமர் திருமிகு இராஜீவ்காந்தி அவர்கள் அருள்மிகு வைத்தீஸ்வரன் கோயிலுக்கும், திருவரங்கத்திற்கும் வருகை தந்தபோது எடுக்கப்பட்ட படங்கள், ஆணையர் திரு தி. இராச. கல்யாண சுந்தரம், ஐ.ஏ.எஸ். அவர்கள் உடன் உள்ளார்.



பதிவு எண். எம். 7039